உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாசபரம்பரைப் பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலையதேசிகராதீனத்து

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

# நால்வர்நான்மணிமாலை.

இஃது,

ஷை ஆதீனத்துச்

சிதம்பரம் - ஈசானியமடம்

## இராமலிங்கசுவாமிகளால்

அன்பர்பலர் வேண்டுகோளின்படி இயற்றிய

விருத்தியுரையோடு,

சென்னை

ஆறுமுகவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

துன்முகிஞு வைகாசிமீ.

*Registered Copy-Right*

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இப்புத்தகவிற்பனையால் வருந்தொகை, சிதம்பரம் ஈசானியமடாலயத்திலே, இந்நால்வர் திருநக்ஷத்திரத்தில், மகேசுரபூசைக்கு உபயோகிக்கப்படும்.

---

விலை.

காலிகோகட்டடம் அணா-அ.

மார்பில்கட்டடம் அணா-சு.

---

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியர்களாகிய

# நால்வர் நான்மணிமாலை

## விருத்தியுரை.

செந்தமிழ்த்திருநாட்டிலே தெய்வத்திருவருளுருவாய்த்தோன்றித் தக்கார்க்கும் தகார்க்கும் சைவநெறிபாலித்துச் சன்மார்க்கமுடையராக்கிய சைவசமயகுரவர்களின் அற்புதமகிமைகளை அனைவருமுணரத் தெள்ளியதமிழ்ச்செய்யுளிற் செவ்விதிற்றெருட்டித் துதிப்பான்றொடங்கிய இவ்வாசிரியர் சாக்கிரத்தே நிருமலதுரியாதீதத்தைப்புரியுந் தமக்கு இடையூறுசிறிதுமெய்தாமை அறிந்தாராயினும் ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும் மாணுக்கர்க்கு அறிவுறுத்தற்பொருட்டும் முதற்கண் இடையூறுநீக்குதற்குரிய விநாயகரைவாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார்.

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

(இ-ள்.) கைப் போதகத்தின் கழல்- துதிக்கையையுடைய யானைமுகக்கடவுளின் துணையடிகளை—எப்போதகத்தும் நினைவார்க்கு இடர் இல்லை - எக்காலத்தினுள்ளும் இடையறாதுதியானிப்பார்க்குப் பிறவித்துன்பமில்லை. எ-று.

வாழ்த்தல் வணங்கல் பொருளியல்புரைத்தலென்னும் மூவகை வாழ்த்துள் இது பொருளியல்புரைத்ததென்பது. நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் உண்ணல் உவத்தல்முதலிய காலமனைத்தினுள்ளு மென்பார் ஏஞ்சாமைப்பொருள்பட எப்போதகத்துமென்றார். அகம் ஏழனுருபுமாம். உம்மை முற்றும்மை. எப்போதும் அகத்துநினைவார்க் கிடரில்லையென உம்மைபிரித்துக்கூட்டி உரைப்பினும் அமையும். விலங்கினுள் யாளியும் அஸ்தமுடைத்தேனும் அஸ்தியெனப்புகழப்படுவது யானையொன்றேயாகலின் அச்சிறப்புத்தோன்றக் கைப்போதகமென விதந்தார்; அது, நினைவார்க்கிடரில்லை யென்னுங்குறிப்பான் யானை முகக்கடவுளை ஈண்டுணர்த்திற்று. கழலென்னும் சாதியொருமை இரண்டனுருபு ஈற்றிற்றொக்குநின்றது; * "ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின் - மெய்யுருபு தொகா விறுதியான." என்பதோத்தாகலின். முக்கரணங்களுள் மனம்சிறத்தலின் நினைவார்க்கிடரில்லையென மனத்தின்மேல்வைத்துக் கூறினாரேனும், வாக்காற்றுதிப்பார்க்கும் காயத்தால்வழிபடுவார்க்கும் இடரில்லையென்பதூஉம் இனம்பற்றிக்கொள்க.

இனி, அணுகக்கிடந்த துன்பங்கள் அண்ணலருட்பார்வையான் இடைவிடாத் தியானமுதிர்ச்சியுடையாரை அணுகமாட்டாமையானும் வேறுபற்றுக்கோடின்மையானும் விளக்கின்முன் இருள்போற் கெடுதலும், அவர்மாட்டு அவ்வருள் நிலைபெறுதலான் அத்தியானமுதிர்ச்சிமுன்னர்க் காமவெகுளிமயக்கமென்னுமுக்குற்றங்களும் காட்டுத்தீமுன் பஞ்சுத் † தய்போலழிதலின் அவைகாரணமாக இருவினைகளை இயற்றாமைபற்றி மேல்வரக்கடவ துன்பங்க ளிலவாதலும் உண்மையே: இங்ஙனம் முன்னும் பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்கு எடுத்தவுடம்பும் அதுமுகந்துள்ள வினைப்பயன்களாகிய பிராரத்தமுமிருத்தலின் இடரில்லையென்பதெங்ஙனம் பிறவெனின்,—பிராரத்தமிருத்தலான் ஒரோவழி வேதனைபற்றி துறக்கப்பட்ட புலன்கண்

* தொல்காப்பியம்-சொல்லதிகாரம். † தய்-நூற்கும்பஞ்சிற்றொடர்தனி.

மேற் பழையபயிற்சிவயத்தால் நினைவுசெல்லும்: அங்ஙனஞ்செல்லுதலான் இடருண்டாமேனும் கைப்போதகத்தின்கழல்களை இடைவிடாதுபாவித்தலான் அவாவறுதலின் அதுகாரணமாகவரும் இடருமொழிதல்பற்றி இல்லையென்றாரென்க.

அணுகக்கிடந்த துன்பமாவன-பிறவி அநாதியாய்வருதலின் உயிரால் எல்லையின்றியீட்டப்பட்ட வினைப்பயன்களுள் இறந்தவுடம்புகளான் நுகர்ந்தனவும் பிறந்தவுடம்பான் முகந்துநின்றனவுமொழியப் பின்னும் அநுபவிக்கக்கடவனவாய்க் கிடந்தன: இவற்றைச் சஞ்சிதமென்ப. வரக்கடவதுன்பங்களாவன - காமவெகுளிமயக்கங்காரணமாக இயற்றப்படும் இருவினைகளான் எய்தற்பாலன: இவற்றை ஆகாமியமென்ப.

எனவே, மனம்வாக்குக்காயமென்னும் முக்கரணங்களான் ஈட்டப்படும் இருவினைகளும் ஈட்டப்படுங்காற் றூலகன்மமாய் ஆகாமியமெனவும், பின்னர்ப் பக்குவமாங்காறும் சூக்குமகன்மமாய்ச் சஞ்சிதமெனவும், பயன்படுங்கால் ஆதிபௌதிகம் ஆத்தியான்மிகம் ஆதிதைவிகமென்னும் முத்திறத்தாற் பலதிறப்பட்டுப் பிராரத்தமெனவும் பெயர்பெறுமென்பதூஉம், அவற்றுள், ஆகாமியசஞ்சிதங்கள் அண்ணலருளான் இல்லையாகப் பிராரத்தமொன்றும் அநுபவித்தொழிக்கற்பாலதென்பதூஉம், அதுவும், இடைவிடாப்பாவனையான் அவாவறுதலின் வாதிப்பதன்றென்பதூஉம், வாதித்தலறவே, கைப்போதகத்தின் கழல்களையெய்தி என்றுமொருபெற்றித்தாய நிரதிசயவின்பம்பெற்றுவாழ்தல் ஒருதலையென்பதூஉங் கருத்தாகக்கொள்க. ஆதிபௌதிகமாவது - சடம்வாயிலாக வருவது. ஆத்தியான்மிகமாவது - சடத்தோடுகூடிய சேதனம்வாயிலாக வருவது. ஆதிதைவிகமாவது - ஒருவாயிலானன்றித் தெய்வந்தானேகாரணமாக வருவது.

சஞ்சிதாகாமியங்கள் அண்ணலருளானகலுதலை *“தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகண் - முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்

* திருமந்திரம் ஞானிசெயல்-உ.

கள் - பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள் - சென்னியில் வைத்த சிவனரு ளாலே." என்பதனானும், ஆதிபௌதிகமுதலிய வற்றை "பனியா லிடியாற் படர்வா டையினுந் - துனிதென் றலினுஞ் சுகமுர்—தனையனைய - நீரினு மின்பின் னலுநெருப்பி னுந்துயரின் -போரிற் பவுதிகமா கும். தன்னுற் பிறராற் றனக்குவருந் தீங்குல - மின்னு விலங்கரவந் தேளெறும்பு—சென்முதனீ - ரட்டையல வன்முதலை மீனரவ மாதியினுங்-கட்டுமிங் கான்மிகமே காண். கருவிற் றுயர்சனிக்குங் காலத் துயர்மெய் - திரைநரைமூப் பிற்றினைத்துச் செத்து—நரகத்தி - னுழுந் துயர்புவியை யாளின்ப மாதியெலா - மூழுதவு தைவிகமென் றோர்." என்பதனானும், எப்போதும் நினைத்தல்வேண்டுமென்பதனை * "நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினை - யென்றுஞ் சிவன்ற ளிணை." என்பதனானும், இடைவிடாப் பாவனையான் அவாவறுதலை † "தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது - வாஅய்மை வேண்ட வரும்." என்பதனானும், மூவகைத்துன்பமும் இலவாதலை ‡ "வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்கியாண்டு மிடும்பை யில." என்பதனானும் அறிக.

× "என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதன்-முன்னரே யுனதுதாண் முடியுறப் பணிவரே - லன்னர்தஞ் சிந்தைபோ லாக்குதி யலதுனை - யுன்னலார் செய்கையை யூறுசெய் திடுதி." எனச் சிவபிரானருளியவாறு வழிபடுவார்க்கு விக்கினங்களையகற்றியும் வழிபடார்க்கு அவற்றையாக்கியும் விக்கினேசுரரெனத் திருநாமம்பெற்று விளங்கலின் இக்கடவுள்வாழ்த்து முன்னர்க்கூறுவது முறைமையாதலுணர்க.

---

* வருத்தமறவுய்யும்வழி. கஃ † திருக்குறள். ௩௬௪. ‡ ஷ - ௪. × கந்தபுராணம் கயமுகனுற்பத்திப்படலம். ௧௫௨.

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு.

(இ-ள்.) பூவான் மணி நீர் மலி பொய்கை கரையின் - (சீகாழித் திருப்பதியிலே,) செந்தாமரைமலர்களோடு முத்துக்களும் நீரும்செறிந்த பிரமதீர்த்தக்கரையிலே, (பிராட்டியாரருளிய)—இயல் பாவால் மொழி ஞானப்பால் உண்டு - இயற்பாவாற்றுதிக்கப்படும் ஞானப்பாலை இனிதருந்தி,—நாவால் மறித்து - அதனை நாவினாலே தடுத்து,—எம் செவி அமுதாய் (இயற்பாவால்) வார்த்த பிரான் - எங்களுடைய செவியமுதமாக இயற்பாவினாலொழுக்கிய ஆளுடையபிள்ளையாரது—தண்டை வெறி தண் கமலமே வீடு - தண்டையும் நறுமணமும் தண்மையும்வாய்ந்த செந்தாமரைமலர்போலும் திருவடிகளே எமக்குப் புகலிடம். எ-று.

இவ்வாளுடையபிள்ளையார் அம்மேஅப்பாவென்றமுது ஞானப்பால்பெற்றது தம்பசிதீர்தற்பொருட்டன்றித் தரணியில் வேதநெறி முதலிய விர்த்தித்தற்கேயாகலின் அதனையுட்கொள்ளாது சொல்லுருவாய்த்திரள நாவினாற்றிரட்டினரென்பார், 'நாவான்மறித்து, என்றும், பாவின்செறிவு அமுதமேயாகலின் ஞானப்பாலின் றிரள்வாகிய தோடுடையசெவியன் முதலிய சொரூபவிலக்கண வாக்கியங்களை அமுதென்பார், அவை செவியானுகரப்படும் சுருதியாய் நுகர்ந்தார்க்கு மிர்தத்தைநீக்கி நிரதிசயவின்பம்பயத்தலின், 'செவியமுது, என்றும், இவர் முருகக்கடவுளவதாரமெனப் பலபுராணங்களும் அருணகிரிநாதர் நம்பியாண்டார்நம்பிகள்முதலிய ஆன்றோர் துதிகளும் பெரிதுமுழக்கலின் எவரினும் தலைமைபெற்றவரென்பார், 'பிரான், என்றும், எவர்க்கும் சென்மவெப்பகலத் தெய்வமணங்கான்று திகழ்ந்து குளி

செய்வவென்பார், திருவடிகளைக் 'கமலம், என்றும், இவை எளிதிற் சிவப்பேறளிப்பனவென்பார், காரணத்தைக் காரியமாகவுபசரித்துக் 'கமலமேவீடு, என்றும் கூறினர்.

இப்பிரபந்தம் அந்தாதித்தொடராகலின் ஆதியில் மங்கலமாகத் தொடங்கிய பூவெனப்படுவது அந்தத்திற்கூறிய பொறிவாழ்பூவேயாம். ஆனுருபு உடனிகழ்ச்சிக்கண்வந்தது; * "அறத்தான்வருவதேயின்பம்" என்புழிப்போல. சலசம் தலசமென்னும் இருவகைமுத்தினுள் ஈண்டுக்கூறியவை சலசம். சலசமாவன - தாமரை இப்பி சங்குமுதலியவற்றிற் சலசம்பந்தத் துதிப்பன. தலசமாவன - கரும்பு மூங்கில் கமுகுமுதலியவற்றிற் றலசம்பந்தத் துதிப்பன. பூவான்மலிந்தமணியெனினும் பொருந்தும். மொழியப்படுவெனற்பாலது செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்தும் படுவிகுதிதொக்கு மொழியென நின்றது. இவ்வாறு வருவனவற்றை வடநூலார் நயக்கு என்பர். அல்லதூஉம், இப்பிள்ளையாரருளியது × "எல்லையிலாமறை முதன்மையுடனெடுத்த எழுதுமறை" ஆகலின், மொழியென்பதனை எதுப்பொருள் விரியநின்ற வினைத்தொகையாக்கி, வேதார்த்தமென்பதனை அவாய்நிலையான்வருவித்து, வேதார்த்தங்களை இயற்பாவான்மொழிதற்கேதுவாகும் ஞானப்பாலெனப் பொருள்கொள்ளலும் ஒன்று. ஞானப்பால் - ஞானமயமாகியபால்.

ஞானமாவது - பதிபசுபாசங்களை உள்ளவாறுணரும் உண்மையுணர்ச்சி. அது, அபரம் பரமென இருதிறப்படும். அபரமாவது - வேதாகமங்களின் ஆராய்ச்சியுணர்வு. பரமாவது - அதனாற்பெறப்படும் அநுபவவுணர்வு. அற்றேல், சிவஞானசித்தியினும் சிவஞானதீபத்தினும் முறையே, "கேட்டலுடன் சிந்தித்த றெளித னிட்டை - கிளர்த்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்" எனவும், "தெரிவரிய ஞானமுநா லாகுங் கேட்டல்-சிந்தித்த றெளிதலுயர் நிட்டை யென்

* திருக்குறள். ௩௯. × பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திசுவாமிகள்புராணம்.௭௫.

மழ்தரத்தொக்கவன்பெனுநாரிற்றொடுக்கப்படுவதாகலின் தொடையெனப்பட்டது. துதித்தலைத் தொடையென்பதற்கிணங்கச் சாத்துதலென்றுபசரித்தார். ஆடுவது-ஆன்மாக்களுக்குத் தனுகரணபுவனபோகங்களை மாயையாகிய முதற்காரணத்தினின்றும் தோற்றுவிப்பதும், அவற்றை நிலைபெறுவிப்பதும், அவற்றை முதற்காரணத்தினொடுக்குவதும், ஆன்மாக்களை இருவினைப்பயன்களாகிய போக்கியப்பொருள்களின் அமிழ்த்துவதும், அவ்வான்மாக்களுக்குப் பாசத்தைநீக்கிச் சிவத்துவத்தைவிளக்குவதுமாகிய பஞ்சகிருத்திய நடனமாம். இவ்வைந்தனுள், முன்னையமூன்றும் உடலினும் ஏனையவை உயிரினும் இயற்றப்படுவன. நாட்டிற்கிலாதவென்பது தாப்பிசையாய் அமுதினும் நோயினும் இயைந்தது. நல்கினுமென்பதின் உம்மை இழிவுசிறப்பு. எவனென்பது என்னெனமரீஇயிற்று. ஆட்டிற்கு நாட்டிற்கு பாட்டிற்கு என்பன வேற்றுமைமயக்கம். இறைவரிங்ஙனநல்கினும், இருவரையும் வழிபட்டுய்தற்குரிய என் தகுதிக்கு நீவிருவிரும் எவ்விதத்தும் நிகராவீரென்னலும் ஒன்று. பாடு - தகுதி. என் துதிக்கென்பாருமுளர்; அஃது பொருட்சிறவாமையுணர்க. இது ஆட்கொண்டமுறைமையிற் பேதங்கற்பிப்பார்போன்று இருவர்பாடலுக்குமுள்ள அபேதத்தன்மையைப் புலப்படுத்தியபடி.

தொடை. வீட்டிற்குவாயிலாதலை * "புலனொடாடித் திரிமனத்தவர் பொறிசெய்காமத் துரிசடக்கிய - புனிதநேசத் தொடுதமக்கையர் புணர்வினாலுற் றுரைசெயக்குடல் - சுலவுசூலைப் பிணிகொடுத்தொளிர் சுடுவெணீறிட் டமணகற்றிய - துணிவினான்முப் புரமெரித்தவர் சுழலிலேபட் டிடுதவத்தின - ருலகின்மாயப் பிறவியைத்தரு முணர்விலாவப் பெருமயக்கினை - யொழியவாய்மைக் கவிதையிற்பல வுபரிபாகப் பொருள்பரப்பிய - வலகின்ஞானக் கடலிடைப்படு மமிர்தயோகச் சிவவொளிப்புக - வடியரோமுக் கருளினைச்செயு

* திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை-க.

மறையதேவத் திருவடிக்களே." என்பதனானும், இயக்கினன்றி இயங்குதற்றன்மையின்மையை * "என்னை யேது மறிந்தில னெம்பிரான்றன்னை நானுமுன் னேது மறிந்திலே-னென்னைத் தன்னடி யானென்றறிதலுந் - தன்னை நானும் பிரானென் றறிந்தனே." என்பதனானும், பஞ்சகிர்த்தியநிலைமையை †"ஏற்றவினை யரனருளின் றிருவிளையாட்டாக வியம்புவர்க ளணுக்களிடர்க் கடனின்று மெடுத்தே - யூற்றமிக வருள்புரித லேது வாக வுரைசெய்வ ரொடுக்கமிளைப் பொழித்தன் மற்றைத் - தோற்றமல பாகம்வரக் காத்தல் போகந் துய்ப்பித்த றிரோதாயி நிறுத்த லாகும் - போற்றலரு மருளருளே யன்றி மற்றுப் புகன்றவையு மருளொழியப் புகலொ ணாதே." என்பதனானும் அறிக. (௨)

படியிலா நின்பாட்டி லாரூர நனிவிருப்பன் பரமனென்ப,
தடியனே னறிந்தனன்வான் றொழுமீச னினைத்தடுத்தாட்
கொண்டு மன்றித், தொடியுலா மென்கைமட மாதர்பா னின
க்காகத் தூது சென்று, மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு
முழன்றமையால் விளங்கு மாறே.

(இ-ள்.) ஆரூர-நம்பியாரூரவள்ளலே!—வான் தொழும் ஈசன் நினை தடுத்து ஆட்கொண்டும் - தேவருமிறைஞ்சுஞ் சிவபெருமான் தேவரீர் திருமணஞ்செயாதபடிதடுத்து அடிமைகொண்டுழன்றமையாலும்,—அன்றித் தொடி உலாம் மென் கை மடமாதர்பால் நினக்கு ஆக தூது சென்றும் - அதன்றியும், வளைகள்சஞ்சரிக்கும் மெல்லிய கரங்களையும் மடமையையுமுடைய பரவைநாச்சியாரும் சங்கிலிநாச்சியாரும் பரிந்து உடன்படத் தேவரீர்பொருட்டுத் தூதுநடந்துழன்றமையாலும்,—மிடி இலா மனைகடொறும் இரந்து இட்டு உழன்றமையாலும் - வறுமையில்லாத வீடுகடோறும் அன்னமேற்று அமுதளித்

* தேவாரம் தனித்திருக்குறுந்தொகை. † சிவப்பிரகாசம் பொது-௬.

துழன்றமையாலும்,—நின் படி இலாப் பாட்டில் பரமன் நனி விருப்பன் என்பது - தேவரீரருளும் நிகரற்றதிருப்பாட்டில் அப்பெருமான் அதிகநேசமுடையரென்பதை—அடியனேன் விளங்குமாறு அறிந்தனன் - அடியேன் விளங்கும்படி ஆய்ந்தறிந்தேன். எ-று.

இந்நம்பியாரூரர் மற்றைத்தொண்டர்போலாது தொண்டோடு தோழமையுமுடையராகலின் அவ்வுரிமைபற்றி, பத்திரசமேயன்றி ஏனைச் சிங்காரமுதலியரசங்களும் இவர்திருப்பாட்டில் மிக்குக் குடிகொண்டனவென்பார், 'படியிலாப்பாட்டு' என்றும், வரம்பிலின்பமுடைமையின் ஒன்றினும் வாஞ்சையில்லாத அண்ணலார் நரைதிரை மூப்புமிக்க அந்தணவுருக்கொண்டு தண்டூன்றித் தளர்நடைவாய்ந்து சரிகோவணவுடையராய்க் கண்டோர்நகைக்கவந்து, புத்தூர்க்கும் திருவெண்ணெய்நல்லூர்க்குமுழன்று, அந்தணரவைமுன் வல்வழக்கிட்டுச்சாதித்து அடிமைகொண்டதும், திருவொற்றியூரினும் திருவாரூரினும் நாச்சிமாரிருவரையும் நண்ணுவித்தற்பொருட்டு அலகையுமுறங்கும் அர்த்தராத்திரியில் அடிமலர்சிவக்க ஒருகாலன்றி இருகாற்றாதுழன்றதும், திருக்கச்சூரிலே கடும்பகற்பொழுதில் இடும்பலிவேண்டிச் செல்வர்மனைதொறும் சென்றிரந்தளித்ததும், பாட்டின்விருப்பானன்றிப் பிறிதொன்றானன்றென்பார், 'பாட்டினனிவிருப்பன்' என்றும், இங்ஙனமியற்றியவர் எவர்க்கு முதற்கடவுளென்பார், 'பரமன்' என்றும், பிறர்கூற்றாற் றுணிதற்றன்மையிலனேனும் இவ்வேதுக்களான் ஐயமின்றித் துணிந்தனனென்பார், 'விருப்பனென்பது உழன்றமையால் விளங்குமாறறிந்தனன்' என்றும், ஏவலரின்மையின் வலிந்தாண்டதன்றென்பார், 'வான்றொழும், என்றும், இவர் திருக்கைலையினின்றும் அவனியிலவதரிக்குங்கால் "செய்யசேவடி நீங்குஞ்சிறுமையேன் - மையன்மானுடமாய் மயங்கும்வழி - யையனேதடுத் தாண்டருள்செய்யென" வேண்டியாங்கு, ஆட்கொண்டும், தூதுசென்றும், இரந்திட்டும் காத்தமைமுதலிய புலப்படுப்பார், 'ஈசன், என்றும், மற்

றை அணிமுதலியவாய்ப்பினும் மங்கையர்க்குக் கைக்குவளையின்றெ ணிற் கவினிகழாதென்பார், 'தொடியுலாமென்கை' என்றும், வறியர் மனையிற்செல்லின் இன்னடிசிலும் இனியகறிகளுங் கிட்டாவாகலின் தேடிச் செல்வர்மனைமுற்றும் சென்றிரந்தனரென்பார், 'மிடியிலாம னைகடொறுமிரந்திட்டும், என்றும் கூறினர்.

படி - நிகர். என்பதெனல் பிறர்கூற்று. இடைச்சொல்லுமாம். வான் இடவாகுபெயர். மடமையாவது - பிறருணர்த்துவதையுட்கொ ள்வதன்றித் தாமுணர்ந்ததை வெளிவிடாமை. தானேவகுத்துக்கூறு தலும் கூறியதுகூறுதலுமாகிய இருவகைத்தூதுள் இத்தூது முந்தி யது. உம்மைகள் மூன்றும் எண்ணின்கணின்ற உயர்வுசிறப்பு. உழன் றமையாலென்பதனை இறுதிநிலைத்தீபமாக ஆங்காங்குக்கூட்டி உம் மை பிரித்துச் சேர்த்துரைக்கப்பட்டது.

கைவளையின்றெனிற் கவினிகழாதென்பதனை * "இரங்குமே கலைசிலம் பன்றி யேனைய - விரும்பிய குழைதொடி மின்செய் கண் டிகை - மருங்கிறச் சுமப்பினும் வளைகைக் கில்லெனி - னரும்பிய முலையினர்க் கழகுண் டாகுமோ." என்பதனானும், வான்றொழுமீச னென விதந்தமையை † "தொழுதும் வணங்கியு மாலயன் றேட ருஞ் சோதிசென்றுங் - கொழுதுந் தமிழ்ப்பழ வாவணங் காட்டி யெ னக்குன்குடி - முழுது மடிமைவந் தாட்செ யெனப்பெற் றவன்முர றே - னுழுகு மலரினற் றுரெம் பிரானம்பி யாரூரனே." என்பதனு னும், பாட்டில்விருப்பனென்பதனை ‡ "தண்மல ரும்பொழிற் றென் கமலேசர்க்குச் சாத்துகின்ற - வொண்மலர் சொன்மலர்க் கொவ்வா து போலுமற் றோர்புலவன் - பண்மலர் சாத்திப் பணிகொண்ட வாப ச்சை மால்சிவந்த-கண்மலர் சாத்தியுங் காண்பரி தான கழன்மலரே." என்பதனானும் அறிக. (ங)

---

* திருவிளையாடல் வளையல்விற்றபடலம்-உச. † திருத்தொண்டர்திருவந்தாதி-அ.
‡ திருவாரூர்நான்மணிமாலை-௫0.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணன்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
ளொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே.

(இ-ள்.) விளங்கு இழை பகிர்ந்த மெய் - திகழும் ஆபரணங்களை யணிந்த உமாதேவியார் செம்பாதியாகக்கொண்ட திருமேனியையும்,—முக்கண் உடை காரணன் - சூரியசோமாக்கினிகளென்னும் மூன்றுநேத்திரங்களையுமுடைய முதற்கடவுளின்—உரை எனும் ஆரணம் மொழியோ-திருவாக்கெனச் சிறப்பித்துரைக்கும் வேதமோ?—ஆதி சீர் பரவும் வாதவூர் அண்ணல்-அக்கடவுளின் சீர்த்தியைத்துதிக்கும் திருவாதவூர்த்தலைவரின்—மலர் வாய் பிறந்த வாசகத் தேனோ-செங்குமுதமலர்போலும் செவ்வியதிருவாயிலுதித்த திருவாசகமென்னும் தேனோ?— சிறந்தது யாதோ என்குவீராயின் - மேன்மையுடையது யாதோவென்று வினவுவீரேல்,—மன்பதை உலகில் - மக்கட்பரப்பையுடைய இம்மநிலத்திலே,—வேதம் (பலகால்) ஓதின்- வேதத்தைப் பலமுறையோதினும் (அதுகேட்டு),—விழி நீர் பெருக்கி -

கண்களினின்றும் நீரைப்பொழிந்து,—நெஞ்சம் நெக்கு உருகி நிற்ப வர் காண்கிலேம் - மனம் கரைந்துருகி நிற்கின்றவரை யாம் கண்டி லம்;—திருவாசகம் ஒருகால் ஓதின் - திருவாசகத்தை ஒருமுறையோ தினும்,—கருங்கல் மனமும் கரைந்து உக - கருங்கல்லேயெனப்ப டும் வன்மனமும் உருகிக்கசிய,—தொடும் மணல் கேணியில் கண்கள் நீர் சுரந்து பாய-தோண்டிய மணற்கேணி சுரக்குமாறுபோலக் கண் கள் நீர் பெருகிச் சுற்றும் பாய,—மெய் மயிர் பொடிப்ப - தேகத்தி லுள்ளமயிர்கள் சிலிர்க்க,—விதிர்விதிர்ப்பு எய்தி - நடுநடுக்கமடை ந்து,—அன்பர் ஆகுநர் அன்றி - அன்பராகுபவரல்லது,—மற்றையர் இலர் - அன்பராகார் இலர். எ-று.

இறைவியார் தமக்கும் இறைவர்க்குமுள்ள அபேதநிலைமைபுலப் பட இறைவரைவழிபட்டு அவர்வாமபாகமுற்றும் ஒற்றித்துநிற்கும் வரம்பெற்றனரென்பார், 'விளங்கிழைபகிர்ந்தமெய்' என்றும்,*வியஞ் சகத்தையின்றி விளங்காத சூரியசோமாக்கினிகளுக்கு வியஞ்சகமாய் விளங்கும் முதற்கடவுளென்பார்,'முக்கட்காரணன்'என்றும், வேதம் தம்வழிநிற்பார்க்கின்பத்தையும் நில்லார்க்குத்துன்பத்தையும் பயக் கும் ஆஞ்ஞாசத்திருபமாய்விளங்கி,அனைவர்க்கும் விதிவிலக்குக்களை யுணர்த்தி, மெய்யுணர்வுகொளுவி, இகபரங்களைத்தருதற்கே இறைவ ரால் அருளிச்செய்யப்பட்டனவென்பார்,'காரணனுரையெனுமாரண மொழியோ,என்றும்,திருவாசகம்சிந்தைக்கினிது செவிக்கினிது வாய் க்கினிதென்னும்படி மலர்த்தேனையொப்பவினித்து எவரையும் சிவா னந்தமயமாக்குவதென்பார், 'மலர்வாய்ப்பிறந்தவாசகத்தேனோ' என் றும், அன்பைவிளைத்தலில் ஆரணஞ்சிறந்ததென்பது பூர்வபக்கமு ம் திருவாசகம் சிறந்ததென்பது சித்தாந்தமுமாமென்பார், அக்குறி ப்பமைய முறைப்படுத்து 'ஆரணமொழியோ வாசகத்தேனோயாதோ

* வியஞ்சகம்-விளக்கும்பொருள்.

சிறந்தது, என்றும், வேதமோதின் அதன் மெய்ப்பொருளறிந்தார் சிலர் யாண்டேனும் அரிது உருகிநிற்றலுங்கூடுமேனும் எமக்குப் பிரத்தியக்ஷமின்றென்பார், 'உருகிநிற்பவர்க்காண்கிலேம்' என்றும், திருவாசகமோதின் அன்பராகுதல் கண்கூடென்பார், 'அன்பராகாரிலர்' என்றும் கூறினார்.

கூறவே, வேதம் ஆண்டவர்திருவாக்கும் திருவாசகம் அவரைத் துதித்த அடியவர்திருவாக்குமாக இருப்பினும், அதனைப் பலகாலோதினும், சிற்றன்புடையார்க்குநிகழும் விழிநீர்ப்பெருக்கமும் நெஞ்சநெக்குருகலுங்கூட எளிதின் நிகழுதலரிதென்பதூஉம், இதனை ஒருகாலோதினும், பேரன்புடையார்க்குநிகழும் கருங்கண்மனக்கரைவு முதலிய உடனிகழ்தல் ஒருவந்தமென்பதூஉம் கருத்தாகக்கொள்க. இரண்டனியல்பையும் உணர்வாரொருவர்கடாவிற்கு விடைநிறுவுவார்போன்று வேதத்தினும் இத்தமிழ்வேதமாகிய திருவாசகம் எவர்க்கும் எளிதிற் பயன்படுதற்றன்மை விளக்கியவாறு.

உலகில் அன்பராகுநரன்றி ஆகாரிலரென இயையும். விளங்கிழை அன்மொழித்தொகை. காரணனுரையெனும் ஆரணமொழியென்பது - வேதம் ஒருவராற்கூறப்பட்டதன்று அநாதிநித்தியமென்னும் பாட்ட பிரபாகர மதங்களின் மறுதலையாய்நின்றது. பிரபாகரம்-பாட்டமதத்தின் பிரிவென்க. ஓகாரம் மூன்றும் வினா. ஆதியென்புழி அகரச்சுட்டும் ஓதினென்புழி முறையே இழிவும் உயர்வுமாகிய உம்மைகளும் தொக்கன. எவரால் எந்நகர் விளக்கமுற்றதோ அவரை அந்நகர்த்தலைவரென்றல் ஆன்றோர்வழக்காகலின் வாதவூரண்ணலென்றார். * 'கொச்சைக்கிறைவன்சிவஞானசம்பந்தன்' என்பதனானும் அறிக. மலர்வாயென வேண்டாதுகூறினார்; மலரிற்பிறந்ததேன் என்பதோர் நயந்தோன்றுதற்கும், இவர்நாவில் ஞானவாணி குடிகொண்

* தேவாரம் திருக்ஷேத்திரக்கோவை - கக.

டமையை நாட்டுதற்கும் என்க. என்குவீரென்பதில் குச் சாரியை. *"மறிமழுவுடைய கரனென்கிலர் மறலியைமுனியு மரனென்கிலர்-மதிபொதிசடில தரனென்கிலர் மலைமகண்மருவு புயனென்கிலர்-செறிபொழினிலவு தில்லையென்கிலர் திருநடநவிலு மிறையென்கிலர்-சிவகதியருளு மரசென்கிலர் சிலர்நரகுறுவ ரறிவின்றியே." என்புழிப்போல. திருவாசகம் ஓதினென்னுது ஒருகாலோதினென்றமையால் வேதம் பலகாலோதினெனவிதந்தாம். அன்றி, உம்மைகளைவிரியாது ஒருகாலோதினென்பதனை ஈரிடத்துங்கூட்டலும் ஒன்று. இங்கு அசை. அல்லதூஉம், எங்குமென்பதொருசொல்வருவித்து, வேதம் பொதுவாதல்பற்றி எங்கும்ஓதினும்,அன்பராவாரைக் கண்டிலம்; இத்தமிழ்வேதம் இந்நாட்டிற்கே சிறப்பாதல்பற்றி இங்குமாத்திரம்ஓதினும் அன்பராகாரிலரெனினும் அமையும். மனமுமென்புழி உம்மை உயர்வுசிறப்பு. பாய்தலென்னும் இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேலேற்றப்பட்டது. † "உளருணீர்நிறைந்தற்று" என்புழிப்போல. ‡ 'இரட்டைக்கிளவி யிரட்டிற்பிரிந்திசையா.' ஆகலின் விதிர்விதிர்ப்பெனவந்தது. ஓதுவோரும் கேட்போரும் அன்பின்பயனுகும் முத்திப்பேறுடையராதலை முன்னர்த் தனித்தனி கூறுபவாகலின் அன்பராகுநரென்றது அவ்விருதிறத்தினரையும் என்க. மற்றையர்-அன்பராகார். ஏகாரம் ஈற்றசை.

அம்பிகைபகிர்ந்தமையை○"அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க் கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட - மருவருக்கன் மதிவளிவான் யமானன் றீநீர் மண்ணெனுமெண் வகையுறுப்பின் வடிவுகொண்ட-வொருவனுக்கு மொருத்திக்கு முருவொன் றுலவ் வுருவையிஃ தொருத்த னென்கோ வொருத்தி யென்கோ - விருவருக்கு முரித்தாக வொருவ ரென்றோ ரியற்சொலில தெனில்யான்மற் றென்

* கோயினான்மணிமாலை - கஙெ. † திருக்குறள் உகஙெ.
‡ தொல்காப்பியம் சொல் - சஅ. ○ சிதம்பரச்செய்யுட்கோவை-ரெச.

சொல் கேனே." என்பதனானும், வேதம் அநாதிநித்தியமென்பதனை * "உன்னிய வங்க மாறு மூன்றுப வேதந் தானுந் - தன்னுளே யடக்கி வேறு தங்கிடா வகையைச் சார்ந்து-முன்னமோர் தோற்ற மின்றி முடிவின்றி நித்த மாகி - மன்னியோ ரியல்பே யாகி வழங்கிடு மறைய தென்றான்" என்பதனானும், இதன்மறுதலையாதலை, † "வேதஞ் சுயம்புவென வேதந்த வாய்மொழியில் வேறும்பிர மாண முளதே - னீதந் துகாணிங்கு மாதுங்க பாரதமு னேர்கண்ட தாகு மதுபோ - லோதுஞ்சொ லாய்வருத வானுங் கடாதிபட மோவந்தி டாவொ ருவரா- லேதந்த தாமறைகளாய்வந்த வாய்மொழியும் வேறிந்து சேக ரனதே." என்பதனானும், வேதாகமங்கள் உலகுய்தற்கே அருளியவென்பதை ‡ "ஆரண மாக மங்க ளருளினா லுருவு கொண்டு-காரண னருளானுகிற் கதிப்பவ ரில்லை யாகு—நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாஞ் - சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சென்றி டாவே." என்பதனானும், ஞானவாணிகுடிகொண்டமையை, ○ "தேனும் பாலுந்தீங் கன்னலு மமுதுமாய்த் தித்தித் - தூனு முள்ளமு முருக்கவுள் ளொளியுணர்ந் தின்ப-மான வாறுதேக் கிப்புறங் கசிவதொத் தழியா- ஞான வாணிவந் திறுத்தன ளன்பர்தந் நாவில்." என்பதனானும், திருவாசகம் சிவானந்தமயமாக்குதலை × "தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி - யல்லலறுத் தானந்த மாக்கியதே—யெல்லை - மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன் - திருவா சகமென்னுந் தேன்." என்பதனானும் அறிக. (௪)

---

* சிவஞானசித்தி பரபக்கம் பட்டாசாரியன்மதம்-௫.

† ஷை மதமறுதலை - க. ‡ ஷை சுபக்கம் முதற்சூத்திரம்-சகூ. ○ திருவிளையாடல் வாதவூரடிகளுக்குபதேசித்தபடலம் - சஅ. × திருவாசகம் நூற்சிறப்பு.

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு

(இ-ள்.) சம்பந்தா - திருஞானசம்பந்தமூர்த்தியே!—இலை படர்ந்த பொய்கை இடத்து அழுதல் கண்டு - தாமரையிலைகள் பரவிய தடாகக்கரையிலே அழுதலைநோக்கி,—முலை சுரந்த அன்னையோ - திருமுலைசுரந்த அன்னையாகிய அம்பிகையோ?—முன் நின் நிலை விளம்ப கொங்கை சுரந்த அருள் கோமகளோ - முன்னே உமது நிலைமையை உரைக்கும்போதே திருமுலைசுரந்த அருட்பெருக்கையுடைய மங்கையர்க்கரசியாரோ?—உயர்ந்தாள் ஆர் எனக்கு சொல் - இருவருள் உயர்ந்தவர் யாவர்? எளியேனுக்கு இசைத்தருள்வீராக. எ-று.

அம்மே அப்பாவென்று அழைத்தழுதல்கண்டு திருமுலைசுரந்து, சிவபிரான் பணித்தவாறு அப்பாலடிசிலைப் பொன்வள்ளத்திற்கறந்து, ஊட்டியருளினாராகலின், இறைவியை 'அழுதல்கண்டு முலைசுரந்த வன்னை' என்றும், இக்கோமகளார் அன்புடையரெனவைத்து ஆன்றோரேற்புகழப்படினும், தாமும் குலச்சிறைநாயனாரும்போலத் தங்கணவர்முதலிய தொடர்புடையர்மாத்திரம் சமண்சமயப்படுகுழியினீங்கிச் சைவசமயிகளாயுய்தலைவெஃகும் அன்புடையராகாது, அந்நாடுமுற்றும் உய்யவேண்டுமென்னும் அன்பின்முதிர்வாகிய அருளுடையராயமருங்கால், அந்தணரொருவரெய்தி, * "திருமுலைப் பாலி னோடு ஞானமுந் திரட்டிச் செம்பொற் - குருமணி வள்ளத் தேந்திக் கொடுப்பவப் பாலன் வாங்கிப் - பருகியெண் ணிறந்த வேதாகமமிவை பற்றிச் சார்வாய் - விரிகலை பிறவு மோதா துணர்ந்தனன் விளைந்த ஞானம்." என்றற்றொடக்கத் தியல்புகளையிசைக்க; அவற்றைக்கேட்கும்போ

* திருவிளையாடல் பாண்டியன்சுரந்தீர்த்தபடலம் - ௨௦.

தே, கொங்கைசுரந்தாரேனும், அதனையூட்டுதற்செயல் இவர்பால் நிக ழாமையின், அன்னையென்னது, 'நிலைவிளம்பக்கொங்கைசுரந்தவரு ட்கோமகள்'என்றும், பிள்ளையினியல்பைக் கேட்புழி முலைசுரத்தல் தலையன்பும்,கண்டுழி முலைசுரத்தல் இடையன்பும், அழுதல்கண்டு பிற ர்தூண்ட முலைசுரத்தல் கடையன்புமாம் ஆகலின், இவர் அம்பிகை போலாது, தலையன்புடையராயினமைதோன்ற, 'உயர்ந்தாளார்' என் றும்,தேவரீர் சம்பந்தராய் இருவரியல்பும் அறிந்துள்ளீராகலின் உண் மையுணர்த்துகவென்பார்,'சம்பந்தாவெனக்குச்சொல்' என்றும் கூறி னர்.

அரிவையர்க்குப் புதல்வர்மாட்டுளதாகும் அருவாகிய அன்பி னைப் பிறரறியுமாறு அவ்வன்பினுருவாகிய முலைப்பாலும் கண்ணீரும் வெளிப்படுத்தலியல்பாகலின் இக்கோமகளிடத்தும், பிள்ளையாரியல் பைக்கேட்புழி, அவர்மாட்டுளதாகிய அன்பை முலைப்பால் புலப்படுத் தியதென்பது. அமணர்கள் அழுக்காறுற்றுத் திருமடத்தே தீமூள்வி க்க, அதனையறிந்தபிள்ளையார், இது அரசன் நெறிகோடியதால் நிகழ் ந்தமையின் வெய்யதீங்கிது வேந்தன்மேற்றென அத்தீயை ஏவத்து ணிந்துழியும், இக்கோமகள் மங்கலநாணைப் பாதுகாத்தலையே முக்கிய மாகக்கொண்டு, "பையவேசென்று பாண்டியற்காக" எனப்பணித்த தூஉம் இத்தகைய அன்பின்முதிர்வுடைமை நோக்கியேபோலும்.

பொய்கைக்கழகாகப் புகழப்படுவது செந்தாமரையாகலின் முத ற்செய்யுளில் அதன்பூவைமொழிந்து இலையின்படர்ச்சியை ஈண்டி சைத்தாரென்க. பொய்கையென்பது கரையையும், முலை பாலையுமு ணர்த்தலின் ஆகுபெயர். சுரத்தலென்னும் இடத்துநிகழ்பொருளின் றொழில் இடத்தின்மேலேற்றப்பட்டது. விளம்பவென்பது முற்பிற பாடின்றி, நிகழ்காலத்தில் இதுநிகழாநிற்க இதுநிகழ்ந்ததென்னும் பொருட்டாய்வந்த செயவெனெச்சம். மங்கையர்க்கரசியாரென்னும்

பொருள்படக் கோமகளென்ருர். ஓகாரங்களிரண்டும் வினு. இங்கு அசை. யாரென்வினுவினைக்குறிப்பு ஆரெனத்திரிந்தது.

செந்தாமரை பொய்கைக்கழகாகப் புகழப்படுதலை *"இடம்புரி சுரிமுக வலம்புரி யீன்ற - தெண்ணீர் நித்திலம் வெண்ணில வெறிப்ப-வூற்றெழு தீம்புனல் பாற்கட லாக - விரிதிரைச் சுருட்டே யரவணை யாகப் - பாசடைக் குழாங்கள் பசுங்கதிர் விரிக்குந் - தேசுகொண் மேனித் திருநிற ஞகப் - பொற்ருது பொதிந்த சேயிதழ்க் கமல-மலர் விழி முதல பலவுறுப் பாக-வங்கணோர் வனசத் தரசுவீற் றிருக்குஞ்-செங்கா லன்னந் திருமக ளாகப்-பைந்துழாய் முகுந்தன் பள்ளிகொண் டன்ன - வந்தண் பூந்தடம்" என்பதனுனும், அன்பின்முதிர்வே அருளென்பதை † "அருளென்னு மன்பீன் குழவி" என்பதனுனும், அன்பை முலைப்பாலும் கண்ணீரும் வெளிப்படுத்தலை ‡ "இல்லா முலைப் பாலுங் கண்ணீரு மேந்திழைபா - னல்லா யுளவாம்" என்பதனுனும், நிலைவிளம்பக் கொங்கை சுரந்ததை o "சுரந்த திருமுலைக்கே துய்ய திரு ஞானஞ் - சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த-தன முடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த - மனமுடையா ளன்பிருந்த வாறு." என்பதனுனும், தீப்பிணியைப் பையவேசெல்லப்பணித்ததை × "பாண்டிமா தேவியார் தமது பொற்பிற் பயிலுநெடு மங்கல நாண் பாது காத்து - மாண்டகையார் குலச்சிறையா ரன்பி னுலு மரசன்பா லபராத முறுத லாலு - மீண்டுசிவ நெறியடையும் விதியி னுலும் வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்-தீண்டியிடப் பேறுடைய ஞத லாலுந் தீப்பிணியைப் பையவே செல்க வென்ருர்." என்பதனுனும் அறிக. (ரு)

---

* சிதம்பரமும்மணிக்கோவை - உஅ. † திருக்குறள் - எஉஎ

‡ சிவஞானபோதம் எட்டாஞ்சூத்திரம். o திருக்களிற்றுப்படியார் - ரு௪.

× பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திபுராணம். எ0௫.

எனக்கன்பு நின்பொருட் டெய்தாத தென்சொல்வெள் ளே றுடையான், றனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்தவித் தா ரணியி, னினக்கன்பு செய்கின்ற வப்பூதி யைச்சிவ நேசமுறு, மினர்க்கன்பு செய்நம்பி யாரூர னேத்து மியல்பறிந்தே.

(இ-ள்.) வெள் ஏறு உடையான் தனக்கு அன்பு செய் திருத்தாண்டகவேந்த-வெள்ளிய இடபவாகனத்தையுடைய விமலருக்கு விருப்பத்தைவிளைக்கும் திருத்தாண்டகங்களையருளிய தலைவரே!—சிவநேசம் உறும் இனர்க்கு அன்பு செய் நம்பியாரூரன் - சிவநேசமிக்க இனமொத்த திருத்தொண்டர்பால் அன்புவைத்த நம்பியாரூரவள்ளலார்—இத்தாரணியில் நினக்கு அன்பு செய்கின்ற அப்பூதியை - ஈண்டு தேவரீர்க்குத் திருத்தொண்டுபுரிந்த அப்பூதியடிகளை—ஏத்தும் இயல்பு அறிந்தும் - துதிக்கும் நிலைமையைத் துணிந்துவைத்தும்,—எனக்கு நின்பொருட்டு அன்பு எய்தாதது என்கொல் - எளியேனுக்குத் தேவரீர்பொருட்டு அன்பு உதியாதது என்னைகொல்லோ! எ-று.

இவர்வது தரும ஏறென்பார், அதனிறஞ்சுட்டி 'வெள்ளேறு' என்றும், இறைவரருட்டிறங்களையே இனிதுபுகழ்ந்துளவாகலின் காமுகருக்கு இளமங்கையருரைபோன்று அவ்விறைவர்க்கு அதிவிருப்பம் விளைப்பனவென்பார், 'அனபுசெய்திருத்தாண்டகம்' என்றும், அப்பூதியடிகள்வழிபட்டதும் அவரை ஆளுடைய நம்பிகள் திருத்தொண்டத்தொகையிற் றுதித்ததும் நங்கண்களுக்குப் புலப்படாத வேறுலகத்தன்று இவ்வுலகத்திலே இத்தமிழ்நாட்டிலேயேயென்பார், 'இத்தாரணியில்' என்றும், எப்பெருந்தகையரேயாயினும் ஏனையர்பால் அன்புசெயற்பால ரல்லரென்பார், 'சிவநேசமுறுமினர்க்கன்புசெய்நம்பியாரூரன், என்றும், அப்பெருந்தகையரே தேவரீரைவழிபடல் சிவவழிபாடுபோல்வதெனத் தேர்ந்தமையின், அப்பூதிக்குமடியேனென்றது, அவரவரடியார்க்கு அடிமைபாராட்டி ஏனைச்சிவனடியரைத்

துதித்தாங்கே 'அப்பூதியடியார்க்குமடியேன்' எனச்சிறப்பித்துத் துதித்தனரென்பார், 'ஏத்துமியல்பு' என்றும், இது கேள்வியளவாய சரித்திரமன்றி அருள்வாக்கின் ஆதாரமுடைத்தென்பார், 'அறிந்தும்' என்றும், அறிந்திவைத்தும் அன்புதியாமை அதிவியப்பென்பார், 'அன்புநின்பொருட் டெய்தாததென்கொல், என்றும் கூறினர்.

கூறவே, சிவநேசர்க்குரிய சிறப்பனைத்தும் வாகீசமூர்த்தியைவழிபடுவார்க்கும் உண்டென்பது கருத்தென்க. என் வியப்பிடைச்சொல். கொல் ஐயம். முந்திய செய்யென்புழி பிறவினைப்பொருளுணர்த்தும் விவ்விகுதி தொக்குநின்றது; * "குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும்" என்புழிப்போல. இதனை வடநூலார் அந்தர்ப்பாவிதணிச்சென்பர். ணிச்சு - பிறவினைவிகுதி. திருத்தாண்டகமாவது-ஒவ்வோரடியும் இருபத்தாறெழுத்தின்மிக்குவர நான்கடியாற் பாடப்படும் பாட்டு. பெருமானை இப்பாடலாற் பெரிதும் துதித்துளராகலின் திருத்தாண்டகவேந்தரெனத் திருநாமம்பெற்றாரென்பது. அப்பூதியடிகள்செய்த அன்பாவது - தனயராதியர்க்கன்றித் தம்மனைப்பாலுள்ள அளவைகள் நிறைகோல் ஆனிரை மேதியாதிகட்கும் திருநாவுக்கரசெனத் திருநாமஞ்சாத்தி, அத்திருநாமத்தானே பற்பல சாலை கூவல் குளம் தரு தண்ணீர்ப்பந்தர்முதலியன அறத்தின்பொருட்டாக்கி வழிபட்டமையாம். செய்கின்றவென்பது காலமயக்கம். உறு மிகுதிப்பொருட்டு. இனர்க்கு வேற்றுமைமயக்கம். நம்பியென்பது சிறப்புப்பெயரும் ஆரூரனென்பது மூதாதைக்குரிய முறைமையிற்போந்த இயற்பெயருமாதல்பற்றி, நம்பியாரூரனென முறைப்படுத்தார்; † "சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு-மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்." என்பதோத்தாகலின். அறிந்துமென்னும் இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஏகாரம் ஈற்றசை.

---

* திருக்குறள்-களக. † தொல்காப்பியம் சொல் - சக.

அப்பூதியடிகளன்புசெய்தமையை * "அந்தணரின் மேம்பட்ட வப்பூதி யடிகளார்-தந்தனய ருடன்சாலை கூவல்குளந் தருதண்ணீர்ப்-பந்தர்பல வாண்டவர செனும்பெயராற் பண்ணினமை -வந்தணைந்த வாகீசர் கேட்டவர்தம் மனைநண்ண." என்பதனானும், சிவநேசமுறும் இனரென்பதனை † "பெருமையாற் றம்மை யொப்பார் பேணலா லெம்மைப் பெற்றா-ரொருமையா லுலகை வெல்வா ரூனமே லொன்று மில்லா-ரருமையா நிலையி னின்றா ரன்பினு லின்ப மார்வா-ரிருமையுங் கடந்து நின்றா ரிவரைநீ யடைவா யென்று." என்பதனானும், சிவனடியார்க்குரிய சிறப்பனைத்தும் உளவாதலை ‡ "பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி பரசுநா வரசான பரமகா ரணவீச - னதிகைமா நகர்மேவி யருளினு லமண்மூட ரவர்செய்வா தைகடரு மனகன்வார் கழல்சூடி - னிதியரா குவர் ர்மை யுடையரா குவர்வாய்மை நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால - மதியரா குவரீச னடியரா குவர்மான முடையரா குவர்பாரின் மனிதரா னவர்தாமே." என்பதனானும் அறிக. (சு)

அறிந்து செல்வ முடையானு மளகைப் பதியாற் றோழமை கொண், டுறழ்ந்த கல்வி யுடையானு மொருவன் வேண்டு மென விருந்து, துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா நினைத் தோ ழமைகொண்டான், சிறந்த வறிவு வடிவமாய்த் திகழு நுதற் கட்பெருமானே.

(இ-ள்.) துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா - முற்றத் துறந்த முனிவருமிறைஞ்சும் பரவைநாச்சியாரின்கணவரே!—சிறந்த அறிவு வடிவமாய்த் திகழும் நுதல் கண் பெருமானே - இயற்கையறிவு சொரூபராய் இலங்கும் நெற்றிக்கண்ணையுடைய நிமலரே—செல்வம்

---

* பெரியபுராணத்தில் வரகீசமூர்த்தி புராணம் - உ0௧.

† கூடிதபெத்தாட்கொண்டபுராணம்-௧௯௯. ‡ திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை.எ.

உடையானும் அளகைப்பதியான் தோழமை கொண்டு - பொருட்செல்வத்திற்றலைவனாய் அளகையம்பதிக் கிறைவனாகிய குபேரனைத் தோழமைகொண்டு,—உறழ்ந்த கல்வி உடையானும் ஒருவன் வேண்டும் என இருந்து - தம்மைநிகர்த்துக் கல்விச்செல்வத்திற் றலைமைபெற்ற தோழரும் ஒருவர்வேண்டுமென உன்னியிருந்து,—நினை அறிந்து தோழமை கொண்டான் - உம்மை நட்டற்குரிமைநாடித் தோழமைகொண்டார். எ-று.

பொருட்செல்வம் பூரியார்கண்ணும் நிலைபெறுவதொன்றாகலின் அதிற்றலைவனை அரிதுநாடுதலின்றிப் பெற்றனரென்பார், 'செல்வமுடையானுமளகைப்பதியாற்றோழமைகொண்டு, என்றும், தாம் இயற்கையறிவு சொரூபராகலின் தமக்கிணைபொத்துக் கல்வியிற்சிறந்தாரைப் பெறுதலருமையான் நெடுங்காலம் நேடி இருந்தனரென்பார், 'உறழ்ந்தகல்வியுடையானுமொருவன் வேண்டுமெனவிருந்து, என்றும், முற்றத்துறந்து முனிவருட்சிறந்த உபமன்னியமுனிவராதியருமிறைஞ்சும் முதன்மைபெற்றவரென்பார், 'துறந்தமுனிவர்தொழும் பரவைதுணைவா' என்றும், நின்னைக்கொண்டவர் நெற்றிக்கண்படைத்தவரோவென ஒருவரையொருவர்கடாவல் உலகவழக்கு; அங்ஙனமாக, அவ்வியல்பினரே தோழமைகொண்டது இவ்வியல்புடைமை நோக்கியேயென்பார், 'நுதற்கட்பெருமானேநினையறிந்துதோழமைகொண்டான்' என்றும் கூறினர்.

கூறவே, இணையொத்து இறைவர்க்குரியதோழராயினமையின் இவரை வழிபடுவோர் சிவபதம் எளிதெய்தப்பெறுவரென்பது குறிப்பெச்சம். உறழ்தல் - வெந்தழலாதியான் அழியாமையும் வேந்தராலும் கவரப்படாமையும் வேண்டியார்க்கு வேணவாவகல மிக்குநல்கினும் விர்த்திப்பதன்றிக் குறையாமையுமுதலிய குணங்களினோங்கி, உத்தமருளந்தொறுநிலவி உயர்கதியளிப்பதாய், இவ்வியல்பு எட்டுணை

யும்பெறாத பொருட்செல்வத்தினும் இனிதுஞ்றந்து நிகரின்றாதலுமாம். உம்மை இறந்ததுதழீஇயிற்று. துறத்தலாவது - தானல்லாதவுடம்பை யானென்னும் அகப்பற்றையும் தன்னேடியைபில்லாதபொருளை என தென்னும் புறப்பற்றையும் ஆசிரியரருளியவாற்றானும் அரிய யோகப் பயிற்சியானும் யான் எனதன்மைதெளிந்து விடுத்தல். முனிவருமென் ஹம் உயர்வுசிறப்பும்மைநோக்கது. முனிவர்தொழுதமை முற்கூறுப. இயற்கையறிவுடையார் தமக்கிணைநாடித் தோழமைகொண்டாரென வே, இவரும் அவ்வறிவெய்தி இறைவர்க்குரிய தன்வயத்தனாதல்முத லிய எண்குணமுமுடையராதல் பெற்றாம். ஏகாரம் தேற்றம். உறழ் ந்தவுடையான் தொழுந்துணைவன் திகழும்பெருமான் நுதற்கட்பெரு மான் எனக்கூட்டுக. அறிதல்-எவருமிறைஞ்சும் இயல்பைநாடல்.

அறிவுவடிவமாய்த்திகழ்தலை *"அகர வுயிர்போ லறிவாகி யெங்கு-நிகரிலிறை நிற்கு நிறைந்து." என்பதனானும், தோழமைகொண்ட தை † "தோழமை யாக வுனக்கு நம்மைத் தந்தனம்" என்பதனானும், வழிபடுவோர் சிவகதியெய்துதலை ‡ "மூன்றும்புல னைந்துட னாறு தொகுத்த குற்றம் - வென்றிக்கிது நன்னெறி சேரும் விளக்க மென் றே-வன்றொண்டர் பாதந் தொழுதான சிறப்பு வாய்ப்ப-வென்றுந் நில வுஞ் சிவலோகத்தி லின்ப முற்றார்." என்பதனானும் அறிக. (எ)

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியங்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே.

(இ-ள்.) பெருந்துறை புகுந்து பேரின்பவெள்ளம் மூழ்கிய புனி தன் - திருப்பெருந்துறையிற்செறிந்து பேரின்பப்பெருக்கிற்றுளைந்த

* திருவருட்பயன். † பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்டபுராணம்-கஉஎ. ‡ ஷையில் சோமாசிமாற்நாயனார்புராணம்-கு.

சுத்தராகிய மாணிக்கவாசகசுவாமிகள்—மொழிந்த வாசகமே வாசகம்-அருளியதிருவாசகமே திருவாசகம்;—அதற்கு வாச்சியம் - அதற்குப் பொருள்—தூசு அகல் அல்குல் வேய் தோள் இடம் தவனே-ஆடையணிந்த அகன்ற நிதம்பத்தையும் மூங்கில்புரையுந் தோள்களையுமுடைய முதல்வியை வாமபாகத்திலுடைய தவசொரூபராகிய சிவபெருமானே. எ-று.

சிறுதுறையிற் புகின் முட்டின்றிமூழ்க முடியாதாகலின் விமல ரருளால் வியன்றுறைவாய்த்ததென்பார், 'பெருந்துறைபுகுந்து' என்றும், தூய்மையென்பது அவாவின்மையேயாகலின் இளமைதொடுத்தே இம்மைமறுமையின்பங்களின் உவர்ப்புற்றுச் சிவகதிதேர்வாராகித் தேசிகனருளாற் சிவானந்தானுபவமேவிட்டுத் திகழ்ந்தவரென்பார், 'பேரின்பவெள்ளமூழ்கியபுனிதன்' என்றும், ஒவ்வொன்றும் மாணிக்கம்போலுதலின் மாணிக்கவாசகரெனச் சிவபெருமானுற் றிருநாமம்பெற்றாராகலான், இவரருளியவற்றையுறழும்வாசகம் பிறிதின்றென்பார், 'மொழிந்தவாசகமேவாசகம், என்றும், பலவிதகற்பனைகளைக்கடந்து பரமரருட்டிறங்களையே குறித்துள்ள அதற்குப்பொருளறிவுறப்பான் அனைவரும்வேண்டச், செப்புவாமெனச் செம்பொனம்பலத்தையடைந்து இவரேபொருளென இறைவரைச்சுட்டி, எவரும் குதூகலிக்க மறைந்தாராகலின், சொற்பொருளுருவாய்விளங்கும் அம்பிகை பாகரே அதற்குப்பொருளாவாரென்பார், 'அதற்குவாச்சியந்தூசகலல்குல்வேய்த்தோளிடத்தவனே' என்றும், ஆன்மாக்களுக்குப் போகநிகழ்ச்சியின்பொருட்டுப் போகிபோன்று அம்பிகைபாகராயிருப்பினும், திருக்கைலையைச்சூழ்ந்த நாற்பெருங்கிரிகளுள், ஆமர்த்தகிரியிற் திருமாலுக்கும், புட்பகிரியிற் பிரமதேவருக்கும், கோளகிரியில் இருடிகட்கும், சந்தானகிரியிற் றேவர்கட்கும், திருக்கைலையில் திருநந்திதேவர் சனகராதியர்க்கும் ஞானோபதேசம்பாலித்துக், காமனைமுனிதல் நெடுஞ்சடைமுடித்தல் கல்லாடைபுனைதன்முதலிய அருட்சின்னமுடை

யராயமர்தலின், யோகியேயென்பார், இரட்டுறமொழிதற்பொருள் படத் 'தவனே' என்றும் சாற்றினரென்க.

ஏகாரம் இரண்டும் தேற்றம். வாச்சியம் - வாசகத்தால் உணர்த் தப்படுவது. அல்குல்வேய்த்தோளென்பது அன்மொழித்தொகை. தவன் கணவனுமாம். புறப்பொருளை நோக்கிநிற்குநிலையிற் சத்தியென வும், புறப்பொருளைநோக்காது அறிவுமாத்திரையாய் நிற்குநிலையிற் சிவமெனவும், ஒளியும் ஞாயிறும்போல, முதல்வனொருவனே தாதான் மியசம்பந்தத்தால் இருதிறப்பட்டு, இயைந்துநிற்கும் உரிமைதோன் றத், 'தோளிடத்தவனேவாச்சியம்' என்றார். தாதான்மியசம்பந்தமா வது - பொருளான் ஒன்றேயாகியும் ஒருவாற்றாற் பேதமாதற் குரிமை யுடைமை.

தாதான்மியமாதலை * "அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே- யருளு மவனன்றி யில்லை—யருளின் - றவனன்றே யில்லை யருட்கண் ணார் கண்ணுக் - கிரவிபோ னிற்குமர னேய்ந்து." என்பதனானும், சிவ கதிதேர்ந்தமையை † மெய்ம்மை யாம்பொருள் விவேகமும் வேறுபா டாய - பொய்ம்மை- யாம்பொருள் விவேகமும் புந்தியுட் டோன்ற- விம்மை யாசையு மறுமையி லாசையு மிகந்து - செம்மை யாகிய கரு த்தராய்ப் பரகதி தேர்வார்." என்பதனானும், சிவானந்தானுபவமுதிர்ந் தமையை ‡ "சூக்க மாகுமைந் தெழுத்தினிற் சுற்றிய பாச - வீக்க நீக்கிமெய் யானந்தம் விளைநிலத் துய்த்துப்-போக்கு மீட்சியுட் புறம்பி லாப் பூரண வடிவ - மாக்கி னொருதீபகம் போல்வரு மண்ணல்." என்பதனானும், மாணிக்கவாசகரென்பதனை ○ "பழுதி லாதசொன் மணியினைப் பத்திசெய் தன்பு - முழுது மாகிய வடத்தினன் முறை தொடுத் தலங்க - லழுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந் தையர்- வழுவி லாதபேர் மாணிக்க வாசக னென்றார்." என்பதனானும்,இவரே

* சிவஞானபோதம் ஐந்தாஞ்சூத்திரம். † திருவிளையாடல் வாதவூரடிகளுக்குப தேசித்தபடலம் - ௯0. ‡ ஷ ௪௬. ○ ஷ ௬0.

பொருளென இறைவரைச்சுட்டி மறைந்தமையை * "செய்காட்டுங் கமுகடவித் தில்லையுளார் பொருள்கேட்கக் - கைகாட்டித் தம்முரு வங் காட்டாமன் மறைந்தாரைப் - பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு - மெய்காட்டிப் பாலுடனே மேவியசீ ராக்கினார்" என்பதனானும், எவரும் குதூகலித்தமையை † "பூத நடங்க டொடங்கின போத மகிழ்ந்தனு குங்கண - நாதர் புகழ்ந்தனர் தும்புரு நாரத ரங்கிசை கொண்டனர்-வேதமொ டர்தர துந்துபி மீது முழங்கி யெழுந்தன-மாதவ ரிந்திரர் பைந்தரு மாமலர் சிந்தி வணங்கினர்." என்பதனானும், திருமாலாதியர்க்கு அருளினமையை ‡ "கயிலை சூழ்ந்த நாற்பெருங் கிரிக டம்மு - ளன்றறி தனக்குச் சீர்சா லாமர்த்த கிரியி னுச்சி - யொன்றிநற் குரவ னாகி யுண்மையை யுணர்த்து கின்றான். இன்னவா றயற்கும் புட்ப கிரியிடை யிருடி கட்கு - மன்னுவா னளவு கோள கிரியிடை வான வர்க்குந் - தன்னைநேர் கின்ற பொற்பிற் சந்தான கிரியி னண்ணி - முன்னைவான் பொருள்கண் மூன்று மொழிந்தனன் குரவ னாகி." என்பதனானும், திருநந்திதேவராதியர்க்கருளினமையைக் கந்தபுராணமுதலியவற்றானும் அறிக. (அ)

இடுகாட்டுண் மாத ரெலும்பிற் புரண்மால்
சுடுகாட்டு ளாடுவாற் சுட்டி—னெடுகாட்டுஞ்
சம்பந்தா வென்புநின்பாற் றந்தாக்கிக் கொண்டிலனென்
கும்பந்தா மென்னு முலைக் கொம்பு.

(இ-ள்.) சுடுகாட்டுள் ஆடுவான் சுட்டினெடு காட்டும் சம்பந்தா-சுடுகாட்டிலே நடிப்பவராகிய இறைவரைச் சுட்டுதலோடு காட்டிய ஞானசம்பந்தமூர்த்தியே!—இடுகாட்டுள் மாதர் எலும்பில் புரள்மால்-சுடுகாட்டிலே பிருந்தையின் எலும்பிலே புரண்ட திருமால்;—என்பு

* திருவாதவூரர்புராணம் திருவடிபெற்றசருக்கம் - ௨௬. † ௸ ௩௪.
‡ திருக்கூவப்புராணம் சந்தானகிரிசந்தானச்சருக்கம். ௬௪-௨௨.

நின்பால் தந்து - அவ்வெலும்பைத் தேவரீர்பாலீந்து,— கும்பம் தாம் என்னும் முலை கொம்பு ஆக்கிக்கொண்டிலன் - அமிர்தகலசமேயென்னும் அமைதிவாய்ந்த தனங்களையுடைய பூங்கொம்புபோலும் ஒரு அரியபெண்ணாகச் செய்துகொண்டாரில்லை!—என் - அங்ஙனம் செய்து கொள்ளாமைக்குக் காரணம் யாது? எ-று.

எவற்றையும் ஒடுக்கும் ஆற்றல் திருமாலாதியர்க்கின்மையின் அத்தொழிலைத் தாங்கொண்டு ஒடுக்கப்படுந்தானமே சுடலையென்று உபசரிக்கப்படுவதாக, அதிலே நடித்துநிற்பவரென்பார், 'சுடுகாட்டேளாடுவான்' என்றும், அக்கடவுளைச்சுட்டி அறிவிக்குந்திறமின்மையின் வேதங்களும் வெருளாநிற்க, அவ்விறைவரிலக்கணங்களைத் தெரித்துச் சுட்டிக்காட்டிய அரிய தெய்வீகமுடையரென்பார், 'சுட்டிஞெடுகாட்டுஞ் சம்பந்தா' என்றும், சலந்தரன் திருமாலாதியரைப் பன்முறைவென்றசெருக்காற் சிவபிரானையும் வெல்வான் திருக்கைலையினெய்தி, ஆங்குப் பெருமான் திருவடியால் நிலத்திற்கீறிய திகிரியின்மடிந்துழி, அத்திருமால் அவனுடலிற்புக்கு, அவன்மனைவியாகிய விருந்தையைஅனுபவித்திருக்க; அவளஃதுணர்ந்து, கற்பழிந்தமைக்குக்கவன்று, கனலின்மூழ்கலும், விரகமிக்கு அவளென்பிற் புரண்டாராகலின், மாலெனப்பெயர்போந்ததும் இதனாற்போலுமென்பார், 'இடுகாட்டுண்மாதரெலும்பிற்புரண்மால்' என்றும், புரளக்கண்டபிரமனாதியர் அம்பிகையளித்தவித்தை அச்சுடலையினிட்டு அமுதம்பெய்ய, அதிற்றோன்றிய துளவம் கன்னிகையாகக் காணப்பெற்றமையன்றித், தாம்காதலித்த அவளென்பு அங்ஙனம் ஆகப்பெருமை கண்டுவைத்தும், அவர் அமிர்தின்றிச் சொல்லவ்வானே பெண்ணாக்கவல்ல தேவரீர்பால் அவ்வென்பைத்தந்து அழகுக்கணியாகும் பூம்பாவைபோலுமோர்பெண்ணாக ஆக்கிக்கொள்ளாமை ஆராய்ச்சியின்மையிற்போலுமென்பார், 'ஆக்கிக்கொண்டிலனென்'' என்றும் கூறினார்.

மாதர் என்பதில் அர் இழித்தற்கண் வந்தது. சுட்டு முதனிலைத் தொழிற்பெயர். சுட்டுதலாவது - தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பானன்றிச் சொரூபலக்கணமெனப்படும் சிறப்பியல்பாற் குறிப்பித்தல். பவுரிக்கூத்திலே தலைமைபெற்றகூத்தன் கரமுயர்த்திநின்று அரங்கின்கணுள்ள குறுமன்னவர்க்கெல்லாம் முதல்வனாகிய மகாமன்னவனையே புகழ்ந்து சுட்டிநின்றாற்போல, வேதாகமங்கள்கூறிய பல சமயநெறிகளையும் அச்சமயங்கட்குரிய கடவுளரையும் கடந்துநின்று, அக்கடவுளர்க்கெல்லாம் முதல்வனாகிய சிவபெருமானையே பரம்பொருளெனப் பிறரும் துணியுமாறு "தோடுடையசெவியன் விடையேறியோர்தூவெண்மதிசூடி, காடுடையசுடலைப்பொடிபூசி" எனச் சுட்டிப் புகழ்ந்தமையானும், இங்ஙனம் புகழுங்கால், அம்மெய்ப்பொருள் கிருபாரோக்கம்வைக்க, திருவுள்ளம் அதன்வழிச்சென்று, ஆறாதாரங்களையுங்கடந்த நிராதாரமாகிய அருளினும் மீதானமாகிய அம்மெய்ப்பொருளில் "என்னுள்ளங்கவர்கள்வன்" எனச் சுட்டோடும் அதீதப்பட்டுநின்று, ஆன்மபோதத்தைமறைத்த ஆணவவிருளைநீக்கிச் சிவத்தையறிவிக்குந்திருவருளைப்போல இறைவனைத் தாம்கண்டவாறு 'பெம்மானிவன்' எனப் பிறர்க்கறிவித்தமையானும் சுட்டிக்காட்டினமை தெளிக. இது, "வேதா கமப்பவுரி வீசுங் * களாசநிலை - யாதார வெற்பிலபிடேகம்—போதத் - திருளிலெழு பானு வெனதொழிவி லின்பக்- கருணைபொழி வானெடுத்த கை." என்னும் ஒழிவிலொடுக்கக்காப்பினுரைக்கருத்தென்க. "ஊசியொடுகுயின்ற தூசு" என்புழிப் போல ஒடு கருவிப்பொருட்டென்பாருமுளர். காட்டும் காலமயக்கம். என்பென்பதில் அகரச்சுட்டெஞ்சிற்று. தாமென்பது † "அல்லமரிவர்தாம்" என்புழிப்போலக் கட்டுரைக்கண்வந்தஅசை. கொம்பு உவமவாகுபெயர்.

மால் பந்தாமென்னும் முலைக்கொம்பு ஆக்கிக்கொண்டிலன் என்குமெனக் கண்ணழித்து, மால், பந்தைநிசர்க்குமெனப்படும் தனங்களை

---

* களாசம் - பிரம்பு. † பிரபுலிங்கலீலை மாயைகோலாகலகதி. ௨௬.

யுடைய ஓர்பெண்ணாக ஆக்கிக்கொண்டிலனென்பன் என்னலும் ஒன்று. இது, விருந்தையாகப்பாவித்து இன்றும் தளவையணிதல்பற்றி அவள்பால், அவர்க்கு ஆர்வமிகுதியுடைமை காணப்படுதலின், சிவநேசவணிகர்போல யானும் என்னைத்தந்து ஆக்கிக்கொண்டிலனென்று வருந்தாநிற்பரென அருத்தாபத்தியாற் சாதித்ததாம். பந்தாமென்புழி ஆதல் உவமைபொருள்குறித்துநின்றது; * "ஆள்வாரிலிமாடாவேனோ" என்றாற்போல. இப்பொருட்கண் என்குமென்பது குச்சாரியையேற்ற செய்யுமென்முற்றெனக்கொண்டு, அது பல்லோரொழிந்த படர்க்கை நான்குபாற்கும் உரித்தாகலின் ஆணொருமைப்பயனிலை ஆக்கினரென்க.

எவற்றையுமொடுக்குமாற்றல் திருமாலாதியர்க்கின்மையை †"அந்த மாதியின் றாகியே யுயிரெலா மளிக்குந் - தந்தை யாகிய தனக்கன்றி முழுதடுந் தகைமை - மைந்த ராகிய வமரரான் முடிவுறு மையினு - லெந்தை தன்வயிற் கொண்டன னீறுசெய் யியற்கை." என்பதனானும், ஒடுக்கப்படுந்தானமே சுடலையென்பதனை ‡"கடல்விட நுகர்ந்த தொல்லைக் கடவுள்பின் னழிக்குங் காலை - யுடலுயி ரகிலம் யாவு மொடுங்கிய விடம தன்றே-சுடலைய தாகு மந்தச் சுடலைகாணனைய சோதி-நடநவில் கின்ற வெல்லை நாடருந் தகைமைத் தஃதே. அங்கது மன்றி யெந்தை யகிலமு முடித்த ஞான்றி - னெங்கும்வெள்ளிடைய தாகி யீமமா மவ்வீ மத்து-மங்கையுந் தானு மேவும்" என்பதனானும், சுட்டிக்காட்டுதற்கருமையை × "மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான் வார்சடையா னென்னி னல்லா-னொப்புடைய னல்ல னொருவ னல்ல னோரூர னல்லனோ ருவம னில்லி-யப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணி னல்லா - லிப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்

---

* திருவாசகம் கோயின்மூத்ததிருப்பதிகம் - ௭. † கந்தபுராணம் ததீசிப்படலம்-௪௦.

‡ ஷை யில் ததீசியுத்தரப்படலம்-௧௬௨-௧௬௩. × தேவாரம் பொது.

றெழுதிக் காட்டொ ணுதே." என்பதனுனும், எலும்பிற் புரண்டமை யை * "இக்கொடு மொழிபுகன் றெரியை மூட்டியே-புக்குயிர் துறந் தனள் புலம்பி யாங்க - ளக்குறு சுடலைநீ ருடி வாடினுன் - மைக்க டன் மேனியன் மாலின் மூழ்கியே." என்பதனுனும், சொல்லமிழ்தாற் பெண்ணுக்கலை † மன்னு வார்சடை யாரைமுன் ருெழுதுமட் டிட்ட-வென்னு நற்பதி கத்தினிற் போதியோ வென்னு-மன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதமவ் வங்கந் - துன்ன வந்துவந் தருவமாய்த் தொக் கதக் குடத்துள்." என்பதனுனும், பூம்பாவை அழகுக்கணியாதலை ‡ "கற்பக மீன்ற செவ்விக் காமரு பவளச் சோதிப்-பொற்றிரள் வயி ரப் பத்திப் பூந்துணர் மலர்ந்த போலு - நற்பதம் பொலிவு காட்ட. ஞாலமும் விசும்பு மெல்லா - மற்புத மெய்தத் தோன்றி யழகினுக் கணியாய் நின்ருள்." என்பதனுனும் அறிக. (௬)

கொள்ளைக் கதிர்முத்தின் பந்தருஞ் சின்னமுங் கொள்ளுமொரு
பிள்ளைக் கதுதகு நாவர சாய பெருந்தகையோய்
கள்ளைக் குவளை யுமிழ்விழி யிற்படிக் காசொன்றுநீ
வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென் வாங்கினையே.

(இ-ள்.) நாவரசு ஆய பெருந்தகையோய் - வாகீசரெனவியக் கும் பெருந்தகைமை வாய்ந்தவரே!—வள்ளை குழை உமை பங்கு ஆ ளர் கையில்-வள்ளையிலைபோலும் காதுகளையுடைய அம்பிகைபாகரா கிய அண்ணலார்பக்கலில்—கொள்ளை கதிர் முத்தின் பந்தரும் சின் னமும் கொள்ளும் ஒருபிள்ளைக்கு-திருப்பட்டீச்சரத்திலே, செறிந்த கிரணங்களைப்பரப்பும் முத்துப்பந்தரும், திருவரத்துறையிலே, முத் துச்சின்னமும் ஏற்ற ஆளுடையபிள்ளையார்க்கு,—கள்ளை குவளை உ மிழ் விழியில் படிக்காசு ஒன்று அது தகும்-தேனைக் குவளைமலர்சொ

* ஷை தந்திபுத்திரப்படலம்-௨௬௨.
† பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திபுராணம்-௧௦௮௬. ‡ ஷை ௧௧௦௬.

ரியும் திருவீழிமிழலையிலே, படிக்காசொன்று ஏற்றல்துவும் பாங்காகும்;—நீ என் வாங்கினை - தேவரீர் (அப்பிள்ளைபோல அப் படிக்காசொன்றை) யாதுக்குப்பெற்றீர்?—(இறைவராஞ்ஞையைமறுத்தற்கு அஞ்சியோ?) எ-று.

இத்தலம் எவர்க்கும் இன்பம்பயப்பதொன்றென்பார், அதனையுள்ளுறையாக்கி, 'கள்ளைக்குவளையுமிழ்வீழி' என்றும், வேனில்வெப்பகலயாண்டும் வெண்கதிர்பரப்பி மிகக்குளிர்செய்வதென்பார், 'கொள்ளைக்கதிர்முத்தின்பந்தர்' என்றும், இறைவர்க்குரிய புதல்வரிருவருள் இளையபிள்ளையாரவதாரமிவரென்பார், 'ஒருபிள்ளை' என்றும், தந்தையரீவதை உவந்துபெறுவது தனயர்க்கியல்பாகலின் முத்துப்பந்தர் முதலியபோலப் படிக்காசொன்றையேற்றலும் முறைமையேயென்பார், 'அதுதகும்' என்றும், நாவின்செல்வமுடைமையின் நாவுக்கரசெனநம்பெருமானருளப்பெற்றமையன்றி, அறிவானும் காலத்தானும் சீலத்தானும் முதிர்தலின் அப்பிள்ளையும் அப்பரென முறைகொண்டாட இறப்ப உயர்ந்தவரென்பார், 'நாவரசாயபெருந்தகை' என்றும், இத்துணைப்பெருஞ்சிறப்பேய்ந்து கந்தையு மிகையெனக்கருதுங் கருத்துடைமையின் அவாவறுதலென்னும் அருஞ்செல்வமுடைய தேவரீர் அப்பிள்ளைபோல ஓர்காசேற்பது உரிமைகொலோவென்பார், 'என்வாங்கினை, என்றும் கூறினர்.

எனவே, இஃதென்சொல்லியவாறோவெனின்:—இறைவரருட்செல்வத்தையன்றி மற்றெவற்றையும்விழையாத இச்சொல்வேந்தர் ஓர்காசேற்றமை * "கால நிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்ட முறீரெனினும்-ஏல வும்மை வழிபடுவார்க் களிக்க வளிக்கின் றோம்" என்றிறைவர்பணித்த ஆஞ்ஞையைமறுத்தற்கு அஞ்சியேபோலும் என்றவாறு. கொள்ளை-மிகுதி. உம்மைகளிரண்டும் முத்துச்சிவிகை முத்துக்

* பெரியபுராணத்தில் வாகீசமூர்த்திபுராணம்-உ.

காளம் முத்துத்தாரை பொற்கிழிமுதலியவும் தழீஇ நிற்றலின் எச்சவும்மைகள். கொள்ளுமென்பது காலமயக்கம். *“முற்படக் கிளத்தல் செய்யுளு ளுரித்தே.” என்பதனால் அதுவென்னுஞ்சுட்டு வழுவமைதியாய் முன்வந்தது. படிக்காசு-படியில்வைக்கப்படுங்காசு, வள்ளை பொருளாகுபெயர். கை - இடம். என்னென்புழி நான்கனுருபுதொக்கது. ஏகாரம் அசை. இறைவராஞ்ஞையை மறுத்தற்கஞ்சியோவென்பது குறிப்பெச்சம்.

ஒருபிள்ளையென்பதனை † “ஈசர் மிழலை யிறையவர்பா லிமையப் பாவை திருமுலைப்பா - லேச முய்ய வுண்டவர்தாந் திருமா மகனா ராதலினாற் - காசு வாசி யுடன்பெற்றார் கைத்தொண் டாகு மடிமையினால்-வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்.” என்பதனானும், நாவுக்கரசென்பதனை ‡ “மேவுற்றவிவ் வேலையி னீடியசீர் வீரட்டமமர்ந்த பிரானருளப் - பாவுற்றலர் செந்தமி ழின்சொல்வளம் பதிகத்தொடை பாடிய பான்மையினா - னாவுக்கர சென்றுல கேழினுநின் னாமங்க ணயப்புற நண்ணுகவென் - றியாவர்க்கும் வியப்புற மஞ்சுறைவா னிடையேயொரு வாய்மையெ ழுந்ததுவே.” என்பதனானும், கந்தையுமிகையெனக்கருதுதலை + “சிந்தை யிடையறா வன்புந் திருமேனி தன்னி லசைவுங் - கந்தை மிகையாங் கருத்துங் கையுழ வாரப் படையும்-வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறு-மந்தமி லாத்திரு வேடத் தரசு மெதிர்வந் தணைய.” என்பதனானும், அவாவறுதலே அருஞ்செல்வமென்பதனை × “வேண்டாமை யன்ன விழுச் செல்வ மீண்டில்லை-யாண்டு மஃதொப்ப தில்” என்பதனானும், அருட்செல்வத்தில் அவாவுதலுடைமையை ० “சிவசம் பத்திடைத் தவஞ்செய்து திரியும் பத்தியிற் சிறந்தவர் திலகன்” என்பதனானும் அறிக.

---

* தொல்காப்பியம் சொல்-௧௧. † ஷை வாகீசமூர்த்திபுராணம்-௨௯௦.
‡ ஷை ௭௪. + ஷையில் சம்பந்தமூர்த்திபுராணம்.௨௭௦. × திருக்குறள்-௩௬௩.
திருநாவுகரசுதேவர்திருவேகாதசமாலை-௧௦.

வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற்கூற் றுவனு
லோங்குநா தாந்தமெனப் பெயரியவக் கரையி
னுமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டாய்
கோங்கமுகை கவற்றுமிள முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்டவருட் கடலே.

(இ-ள்.) கோங்க முகை கவற்றும் இளமுலை பரவை மகிழ-கோங்கினரும்பை ஏங்குதலுறுவிக்கும் இளமைவாய்ந்த கொங்கைகளையுடைய பரவைநாச்சியார் குதூகலிக்கும்படி—முன் குண்டையூர் நெல் மலை கொண்ட - முன்பு குண்டையூரிற்செறிந்த நென்மலையைப் பூதங்கள்கொணர்ந்து திருவாரூரிற்குவிக்கப்பெற்ற, - அருட்கடலே-கருணைக்கடலாகிய நம்பியாரூரரே!—வாங்கு சிலை புரையும் உடல் எனும் குளத்தில் - வளையும்வில்லைநிகர்க்கும் தேகமெனப்படும் மடுவிலே,—மூலமலம் எனும் ஓர் வெங்கரவின் பகுவாயின் நின்றும் - மூலமலமெனப்படும் ஒரு வெவ்விய முதலையின் விரிந்தவாயினின்றும்,—தீங்கு இல் உயிர் எனும் பனவக்குலம் மகனை - அழிவில்லாத உயிரெனப்படும் அந்தணகுலப்புதல்வனை—ஆதி திரோதாயி என்னும் ஒரு வெந்திறல் கூற்றுவனுல் - தொடக்கத்தே திரோதானசத்தியெனப்படும் ஒப்பற்ற வெவ்விய வலியஇயமனுல்—ஓங்குறும் நாதாந்தம் என பெயரிய அக்கரையின் உமிழ்வித்து - உயர்ந்த நாதாந்தமெனப்பெயர்பெற்ற அக்கரையிலே கக்குவித்து,—சிவம் எனும் ஓர் தந்தையொடும் கூட்டாய் - சிவமெனப்படும் ஒருபிதாவோடும் சேர்ப்பீராக. எ-று.

அறிதலுண்மையிற் குறித்துவந்தாரும் அஃதின்மையிற் குறியாதுவந்தாருமாகிய இருதிறவிருந்தினரையும் இனிதூட்டியுபசரிக்கும்

நாச்சியார் அதற்குரிய சாதனமிகுதிகண்டுழி, இல்லத்திற்கு வேண்டு வசேமித்து, ஏனையவற்றை எவருங்கைக்கொள்வான் பறையறைந்து உவந்தனரென்பார்'பரவைமகிழ்'என்றும், இம்மைக்குரிய மும்மைவ ளத்துள் பெண்வளமும் பொன்வளமுமேயன்றி மண்வளமும் இறைவர் மிகவழங்கப்பெற்றனரென்பார்,'நென்மலைமுற்கொண்ட,என்றும், மனிதரைப்பாடி வாணாள் வீணாளாக்காது தம்போல இறைவரைப் பாடி இம்மையின்பெய்தி இடரகன்று சிவகதிபெறுவான் அறிவுடை யார்க்குச் செவியறிவுறுத்த திருவருட்சால்பினரென்பார், 'அருட்க டல்' என்றும், நிலைபேறின்றித் தோன்றியழிதன்மாலையதாகலின் இவ்வுடல் இந்திரதனுவை நிகர்ப்பதென்பார், 'வாங்குசிலைபுரையும்' என்றும், * "தோலிடைப் - புகவிட்டுப் பொதிந்த புண்ணே புண்ணி டை - யூறு முதிரப் புனலோ கூறுசெய் - திடையிடை நிற்கு மெலு ம்போ வெலும்பிடை - முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்-து ள்ளிடை யொழுகும் வழும்போ மெள்ளநின் - றூரும் புழுவி னுழு ங்கோ நீரிடை - வைத்த மலத்தின் குவையோ வைத்துக் - கட்டிய நரம்பின் கயிறோ வுடம்பிற்குட் - பிரியா தொறுக்கும் பிணியோ" அளவிலவாக, அவையெலாம்நிரம்பும் ஆழமும், அந்தக்கரண புறக்க ரணங்களாதிய சலசரமுதலியவும், ஆர்ந்ததென்பார், 'உடலெனுங்கு ளம், என்றும், ஆணவமலம் ஆகந்துகமன்றிச் சகசமாய், மற்றைக் கன்மமாயையென்னும் இருமலங்கட்குமூலமாய், அநாதிபந்தமாயுள் ளதென்பார், 'மூலமலம், என்றும், அது உயிர்கடோறும் வெவ்வே றுய்ப்பக்திப்பினும் ஒன்றேயென்பார்' 'ஓர், என்றும், செம்பிற்களிம்பு போல உயிரின்குற்றமாய் அவ்வுயிரினறிவை விழுங்கிநிற்றலின் முத லையுறழ்வதென்பார், 'வெங்கரவு, என்றும், மலத்தின்செய்தியாகிய அம்மறைப்பினீக்குகவென்பார், 'பகுவாயினின்றும், என்றும், மறை ப்புண்டுகிடப்பினும் அநாதிநித்தமாகலின் அழிவின்றென்பார், 'தீங்

* திருவிடைமருதூர் மும்மணிக்கோவை-௩௩.

கினுயிர், என்றும், உணர்த்தியக்கால் பிரமத்துவம் பெறுதற்குரித்தென்பார், 'பனவக்குலமகன், என்றும், அவ்வவ்வுடலினீட்டிய வினைகளின்பயனை ஒருவாறுநுகர்விக்கும் இயமன்போன்று, சிருட்டிதொடங்கியே மலத்தின்வழிநின்று, அம்மலத்தின்காரியமாகிய மோகமுதலியவற்றைத்தொழிற்படுத்தும் சிவசங்கற்பத்திற்கு ஏதுவாதல்பற்றி மலமென்றுபசரித்துக் கூறப்படுவதாய், உயிரைத் தன்வசப்படுத்து வினைப்பயன்களை நுகர்வித்துப் பாகம்வருவிக்கும் திரோதானசத்தியெனப்படும் சிவசத்தியே பின் அருட்சத்தியாய் அம்மூலமலசத்தியையொழித்துச் சிவத்தையடைவித்தற் கேதுவாவதென்பார், 'திரோதாயியென்னுமொருவெந்திறற்கூற்றுவனால், என்றும், ஊனக்கண்கொண் டுணரப்படாத நாதமுடிவே சிவநிலவுந்தானமாகலின் ஆங்குச்சேர்த்துகவென்பார், 'ஓங்குறுநாதாந்தமெனப்பெயரியவக்கரையினுமிழ்வித்து, என்றும், அவ்வவ்வுடற்கேதுவாய்வரும் தந்தையர்போலாது சிவம் சர்வான்மாக்களுக்கும் தனுகரணபுவனபோகங்களைத்தந்து உண்ணின்றுணர்த்தி உபகரித்துநிற்கும் தனித்தந்தையென்பார், 'சிவமெனுமோர்தந்தை, என்றும், உயிர் முத்தியினும் முதல்வன்போல ஐந்தொழிற்கும் வினைமுதலாகுமுரிமையின்றிச் சிவானுபவமொன்றினுக்கேயுரித்தாய் முதல்வனின் வியாப்பியமாவதாகலின் அங்ஙனம் ஆக்குகவென்பார், 'கூட்டாய், என்றும், உருவகித்துக் கூறினர்.

கராக்கவருயிரைமீட்டுத் தந்தைபாற் சேர்த்தலுடையீராகலின் இங்ஙனமியற்றின் எவரும் உய்வரென்றவாறு. கோங்கவென்புழி அகரம் ஆறும்வேற்றுமைப் பன்மையுருபு. முகையைக்கவற்றுவது முலைக்கில்லையாகவும் உளதாக வுபசரித்தது அதுபோன்றலர்தலின்மை குறிப்பித்தற்கென்க. வாலைப்பருவமுடைமைதோன்ற இளமுலைப்பரவையென்றார். வாங்குசிலையென்பது குறிப்பான் இந்திரதனுசை உணர்த்திற்று; உடற்குவமிக்கப்படுவது அச்சிலையேயாகலான். புரை

யும் நிகழ்காலப்பெயரெச்சம். அல்லதூஉம், தனுவெனப்பெயரிய இவ் வுடல் இளமையிற் கூனுதலின்மையிற் றனுவைநிகர்த்திலதேனும் சின்னளில் நிகர்த்துவிடுமென்பார், வாங்குசிலைபுரையுமென எதிர்காலத்தாற்கூறினரெனினும் அமையும், எனப்படுமெனற்பாலது செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் படுவிகுதிதொக்கு எனுமெனநின்றதென வருமிடந்தோறுங் கொள்க. கரவென்பது கரத்தலுடைமையிற் போந்தபெயராய் இரட்டுறமொழிதலாய்நின்றது. ஆதி திரோதாயியென்னுமெனவே, அந்தத்தில் அதுவே அருட்சத்தியெனப்படும் என்றூராயிற்று. வெந்திறல் - கடத்தற்கரிய ஆஞ்ஞை. கூற்றுவனுலுமிழ்வித்தெனக்கூட்டுக. ஒடு கலப்புறுபொருட்கண் வந்தது; * "பாலொடுதேன்கலந்தற்றே" என்றூற்போல.

அறிவுடையார்க்குச் செவியறிவுறுத்தமையை † "தம்மையே புகழ்ந் திச்சைபேசினுஞ் சார்வினுந்தொண்டர் தருகிலாப் - பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள் - இம்மை யேதருஞ் சோறுங்கூறையு மேத்தலாமிடர் கெடலுமா-மம்மையேசிவ லோகமாள்வதற் கியாதுமையுற வில்லையே." என்பதனும், மூலமலவியல்பை ‡ "ஒன்றதா யநேக சத்தி யுடையதா யுடனுயாதி - யன்றதா யான்மா வின்றன் னறிவொடு தொழிலை யார்த்து-நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திச்செம் பிணிற்க ளிம்பேய்ந்-தென்றுமஞ் ஞானங் காட்டு மாணவ மிசைந்து நின்றே." "என்பதனும், திரோதாயியினியல்பை o "ஓங்குசிவ சத்திக்குப் பாசத் தன்மை யுண்மையெனு ரனைத்துமளிக் குறுமச் சத்தி - நீங்கலரு முயிர்ப் பாச தருமம் பற்றி நின்றுவழங் குறுதலினற் றிரோத மென்பர் - தாங்கலுறு பாசமென வுபசா ரத்தாற் சாற்றுவதாய் மூலமல சத்தி நீக்கித் - தேங்கொளிய பராபரமுத் திகணல் குற்ற செயலினருட் சத்தி

* திருக்குறள்-ககஉக. † தேவாரம் திருப்புகலூர்.
‡ சிவஞானசித்தி இரண்டாஞ்சூத்திரம்-அo. o சிவப்பிரகாசவிகாசம் பாசமரபு-கசo.

யெனத் திகழு மன்றே." எனவும், *"மலங்கரும மாயைமாயே யந் திரோதம் - விலங்குமுயிர்க் கிவ்வைந்தும் வேறு, திரோதஞ்சிற் சத்தி சிறியார்க் கிவற்ருல் - விரோதஞ்செய் தாக்கும்பின் வீடு. அன்னை கொதித்தடிக்க வல்லற் படுங்குழவி - பின்னவளா லார்வம் பெறும். ஈசனது சத்திமல மூன்றினையு மேவுதலாற் - பாசமெனும் பேர தற்குப் பாங்கு." எனவும் வருவனவற்ருனும், உயிரைமீட்பதற்குக் கூற்றுவன் ஏதுவாதலை †"உரைப்பா ருரையென் றெடுத்ததிருப் பாட்டு முடியா முன்னுயர்ந்த - வரைப்பான் மையினீ டடம்புயத்து மறலி மைந்த னுயிர்கொணர்ந்து - திரைப்பாய் புனலின் முதலைவயிற் றுடலிற் சென்ற வாண்டுகளுந் - தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப முதலை வாயிற் றருவித்தான்." என்பதனுனும், நாதாந்தம் சிவநிலவுந்தானமாதலை ‡ "காரணபங் கயமைந்தின் கடவுளர்தம் பதங்கடந்து - பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தத்-தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார் தனிமன்று-ளாரணகா ரணக்கூத்த ரடித்தொண்டின் வழியடைந்தார்." என்பதனுனும், உயிர் சிவாநுபவமொன்றற்கே உரித்தாதலை × "செம்பிரத குளிகையினுற் களிம்பற்றுப் பொன்னுய்ச் செம்பொனுடன் சேருமலஞ் சிதைந்தாற் சீவ - னம்பனுடன் கூடுமெனிற் பொன்போ லல்ல னற்குளிகை போலவர னணுகுமலம் போக்கி-யம்பொனடிக் கீழ்வைப்ப னருங்களங்க மறுக்கு மக்குளிகை தானும்பொன் னுகா தாகு - மும்பர்பிரா னுற் பத்தி யாதிகளுக் குரிய னுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே." என்பதனுனும் அறிக. (கக)

---

* இறைவனுற்பயன் பசுசாதகவியல்-ஙச-கரு-ஙசு-ஙஎ

† பெரியபுராணம் வெள்ளானைச்சருக்கம்-கக. ‡ ஷயில் சித்தத்தைச்சிவன்பாலே வைத்தார்புராணம். × சிவஞானசித்தி பதினோராஞ்சூத்திரம்-கO.

கடனிற வண்ணன் கண்ணென் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து
மருமக னறும்பூங் கருமயி ருதவியு
நென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்து
மகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியு
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதின் மூக்கினை யரிந்து
மிளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மா றடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு

நின்னைத் தொண்ட னென்னக் கொண்டன
னிருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமக டழுவ மனமகிழ் வோனே.

(இ-ள்.) செங்கண் மால் தடம் கையில் சங்கம் நாண - செந்தாமரைமலர்புரையச் சிவந்தகண்களையுடைய திருமாலின் பருத்தகரத்தினுள்ள பாஞ்சசன்னியம்நாணும்படி—முள் தாள் தாமரை முறுக்கு அவிழ் மலர்மேல் - கண்டகங்கள்செறிந்த தண்டையுடைய செந்தாமரைகளின் கட்டவிழ்ந்தமலர்களின்மீது—வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப- வலம்புரிச்சங்கங்கள்வதியும் திருவாதவூரிலவதரித்த அன்பரே!—கருங்கடல் வண்ணன் கண் ஒன்று இடந்து - கரியகடல்போலும் கவின்படைத்ததிருமால் தங்கண்களிலொன்றைப் பெயர்த்து— மறை சிலம்பு அரற்றும் மலர் அடிக்கு அணிய - வேதச்சிலம்புகள் மிக்கொலிக்கும் வியாபித்ததிருவடிகளுக்குச் சாத்த—பரிதி கொடுத்த சுருதி நாயகற்கு - அவர்க்குச் சக்கரப்படையளித்த வேத முதற்பொருளாகிய விமலருக்கு,—முடி விளக்கு எரித்தும் - திருமுடியைத் திருவிளக்காக எரியச்செய்தும்,—கடி மலர் கோதை சுரி குழல் கருங்கண் துணைவியை அளித்தும் - மணநிரம்பிய மலர்மாலையணிந்த சுருண்ட கூந்தலையும் கரியகண்களையுமுடைய(இல்வாழ்க்கைத்)துணையாகுமனைவியை ஈந்தும்,—அருமகள் நறும்பூ கருமயிர் உதவியும் - அரியபுதல்வியின் பரிமளமிக்க அழகுபெற்ற கரிய அளகத்தையளித்தும்,—நெல் முளை வாரி இன் அமுது அருத்தியும் - நீரின் மிதந்த நெற்களின்முளையைக் கொடுவந்துசமைத்த இனியவமுதூட்டியும்,—கோவணம் நேர் தனை நிறுத்து கொடுத்தும் - கோவணத்திற்குநிறையொக்கத் தன்னையும் நிறுத்துத்தந்தும்,—அகப்படும் மணி மீன் அரற்கு என விடுத்தும் - அரதனங்களாலுறுப்பமைந்து அரிதுகிடைத்த பொன்மீனை அரனுக்குரித்தெனக் கடலில்விடுத்தும்,—அரி

வாள் பூட்டி ஊட்டி அரிந்தும் - அரிவாளைப்பூட்டி ஊட்டியையறுத்தும்,—உடை ஒலிக்கும் சிலையிடை தலை மோதியும் - ஆடையைத் துவைக்கும் கற்பாறையினிற் றலையைத்தாக்கியும்,—மொய் மலர் கோதை கை மலர் துணித்தும் - செறிந்த மலர்க்கூந்தலையுடைய மனைவியின் செந்தாமரைமலர்சிவணும் கரத்தைச் சேதித்தும்,—தந்தையை தடிந்தும் - தம்பிதாவின் தாளைத் துணித்தும்,—மைந்தனை கொன்றும் - தம்புதல்வனைச் சமைத்தறகரிந்தும்,—குற்றம் செய்த சுற்றம் களைந்தும்-சிவாபராதமியற்றிய சுற்றத்தவருள் ஓர்சிறுவனும் எஞ்சாவகை சிதைத்தும்,— பூ கொளும் மாதின் மூக்கினை அரிந்தும் - சிவபிரான்திருமுற்றத்துச் சிந்தியமலரையெடுத்த நங்கையின் நாசியைக்கொய்தும்,—இளமுலை மாதர் வளமை துறந்தும் - இளங்கொங்கைகளையுடைய வனிதையர்பால்நுகரும் இன்பத்தையொழித்தும்,—பண்டை நாள் ஒருசிலர் தொண்டர் ஆயினர் - அக்காலத்திலே சிலர் அடியராயினர்; (அவரங்ஙனமாக);—இருக்கும் அடுக்கல் அரக்கன் எடுப்ப - தாம் இனிதமருங்கைலையை இராவணன்தூக்கவும் (அதுகண்டஞ்சி);—வரை பொரும் மொய்ம்பில் முலை பொர மலைமகள் தழுவ - மலையைவெல்லும் வலியபுயங்களில் தனங்கள்தாக்கும் படி மலைவளர்காதலியாரணைக்க,—மனம் மகிழ்வோனே - திருவுளமுவப்பாராகிய சிவபெருமானே:—பாடும் பணி நீ கூடும்பொருட்டு-பாடுதற்றிருத்தொண்டைத் தேவரீர் பரிக்கும் நிமித்தம்,—மதுரை மாநகரில் குதிரை மாறியும் - மதுரைமாநகரத்திலே நரியைப்பரியாக்கி விற்றும்,— விண் புகழ் முடிமிசை மண் பொறை சுமந்தும் - தேவருந்துதிக்கும் திருமுடிமீது மண்செறிந்தகூடையை வலிந்தெடுத்தும்,—நீறு எழில் மேனியில் மாறு அடி பட்டும் - திருநீற்றினெழில்படைத்த திருமேனியிற் பிரம்படியேற்றும்,—நின்னை தொண்டன் என்ன கொண்டனன் - தேவரீரைத் திருத்தொண்டரெனக் கொண்டருளினர். எ - று.

திருமால் காத்தற்றெழிலாற் சத்துவகுணஞ் சார்ந்தாரேனும் தமோகுணவுருவத்தரென்பார், 'கடனிறவண்ணன், என்றும், அமராதியரும் அரிதுவழிபடினும், பெரும்பான்மையும் முத்தியின்விழைவின்றி முதுபெரும்பதங்களையும் அவற்றின்சாதனங்களையுமே முன்னிவழிபடுதலின் அவர்தொண்டிற்கும் அடியவர்தொண்டிற்கும் வேற்றுமை பெரிதென்பார், அத்தேவருட்சிறந்த திருமாலின் அருந்தொண்டையும் அதிற்பெற்றபேற்றையும்விளக்கி, 'கண்ணொன்றிடந்தணியப் பரிதிகொடுத்த, என்றும், வேதங்களே நூபுரவடிவாய் மிகத்துதித்துநிற்பவென்பார், 'மறைச்சிலம்பரற்றும்,என்றும்,சித்தும் அசித்துமாகிய பிரபஞ்சமெங்கும் வியாபித்த திருவடிகளென்பார், 'மலரடி.' என்றும், அத்திருமாலாதியர் சிவபிரானல் அதிட்டிக்கப்பட்டுநிற்றலின் அவ்வியைபுபற்றி வேதம் ஓரோவழி முகமனுக அவர்க்கும் பரத்துவம்பகரினும், அது உள்ளபடி உமாபதிக்கே உரியதென்பார்,சுருதிநாயகன், என்றும், கணம்புல்லநாயனரும் அரிவாட்டாயநாயனரும் திருக்குறிப்புத்தொண்டநாயனரும் தயக்குவரும் இறுதியையுநாடாது தம்விரதமுடித்த தவத்தினரென்பார், 'முடிவிளக்கெரித்தும் ஊட்டியரிந்தும் சிலைபிடைத்தலைமோதியும், என்றும், இயற்பகைநாயனரும் மானக்கஞ்சாறநாயனரும் கலிக்கம்பநாயனரும் சண்டேசநாயனரும் சிறுத்தொண்டநாயனரும் கோட்புலிநாயனரும் செருத்துணைநாயனரும் உலகியலைக்கடந்து வழிபட்ட உத்தமரென்பார், துணைவியையளித்தும் அருமகள்கருமயிருதவியும் கோதைகைம்மலர் துணித்தும் தந்தையைத்தடிந்தும் மைந்தனைக்கொன்றும் சுற்றங்களைந்தும் பூக்கொளுமாதின்மூக்கினையரிந்தும், என்றும், இளையான்குடிமாறநாயனரும் அதிபத்தநாயனரும் ஒக்கலுந்தாமும் உறுபசியுழந்தும் தங்கிய திகுன்றுத் தகைமையரென்பார், 'நென்முளைவாரி யின்னமுதருத்தியும் அகப்படுமணிமீனரற்கெனவிடுத்தும், என்றும், அமர்நீதிநாயனரும் திருநீலகண்டநாயனரும் சத்தியநெறிவழாச் சால்பினரென்பார், 'கோவணநேர்தனை நிறுத்துக்கொடுத்தும் இளமுலைமாதர்

வளமைதுறந்தும், என்றும், இங்ஙனம் உலகவாஞ்சையொழிந்து தற்போதமிறந்து இறைவரைவழிபடல் சிவபுண்ணியமுதிர்ந்த சிலர்க்கன்றிப் பிறர்க்கெய்தாமையின் அவ்வியல்பினர் அவனியில் மிகவரியரென்பார், 'ஒருசிலர் தொண்டராயினர், என்றும்,இவரெல்லாம் இங்ஙனம்வருந்தித் தொண்டராக, இறைவரேவருந்தித் தொண்டுகொண்டமை உமதுபாடற்றொண்டை அவாவியன்றி மற்றொன்றினன்றென்பார், 'பாடும்பணி நீ கூடும்பொருட்டுக் குதிரைமாறியும் மண்சுமந்தும் மாற்றடிபட்டும் தொண்டனெனக்கொண்டனன், என்றும், இராவணன் குபேரனைவென்றுகவர்ந்த புட்பகவிமானமூர்ந்து, திருக்கைலையை யெய்தலும், அது இறைவர்தானமாகலின் விமானம் செல்லாதாக,அவன் ஆங்கு நந்திதேவரருளிய நயமொழியையுமறுத்திகழ்ந்து, அக்கைலையைப் பெயர்த்தல்கண்டு, அம்பிகைபயந்து ஊடலொழிந்து தழுவ, அது உலகியல்பு நிகழ்விற்கு ஏதுவாதல்பற்றி உளமகிழ்ந்தவரென்பார், 'மலைமகடழுவமனமகிழ்வோனே, என்றும் கூறினார்.

கூறவே, இப்பெருந்தகையாரருளிய மணிவாசகம் இறைவர்துதிவடிவாய்த் தோன்றினும், எவரும் வீட்டுநெறியைத் தலைப்படுதற்கு விழுமியவாயிலாகவிளங்கும் இயல்புநோக்கி,இவர் அப்பணிபூண்பான் இங்ஙனம்வருந்தித் தொண்டுகொண்டாரென்பது. கைம்மலர் துணித்தவர் கழற்சிங்கநாயனாரெனக் கோடலும் ஒன்று. மலர் வினைத்தொகை. வேதம் எழுதப்படுதலின்றிக் கேட்கப்பட்டேவழங்கலின் சுருதியென்ப்பெயர்பெற்றது. எண்ணின்கணின்றஉயர்வுசிறப்பும்மைகளுள் முற்பதினான்கும் ஏனைத்தொண்டரியல்பையும் தழீஇநிற்றலின் எச்சவும்மைகளுமாம். வார்தல் - அதன்காரியமாகிய சமைத்தலின்மேற்று. தனையுமென்னும் எச்சவும்மை எஞ்சிற்று. அரன்-ஆன்மாக்களுடைய பாசத்தையரிப்பவன். களைதல் - பற்றறப்போக்கல். நூலாசிரியர் தமக்குமுந்தியமைநோக்கிப் பண்டைநாளென்றாரேனும், தொண்டராயினமை இப்பாட்டுடைத்தலைவர் காலத்திற்கு முன்னும்பின்னுமாகக்

கொள்க. ஒருவென்பது மிகுதியின்மைக்குறிப்பு. மேல் ஏழனுருபு. அன்பை உடைமைப்பொருளாக்கி அன்புடையவென்னாது அன்ப வென்றார்; அன்பே அவருருவாகலின். விண் இடவாகுபெயர். மண் பொறை - மண் ணைப்பொறுக்குங்கருவி. இது சுமையடையையுஞ் சுட் டிநின்றது: மட்பாரமுமாம். அச்சுதனதிய ரரியதவநோக்கி அவரை இறுதிக்காலத்தில் நெற்றிவிழியினீற்றி அணிந்துளராகலின் நீற்றெ ழின்மேனியென்றார்.

இப்பி ஆயிரஞ்சூழ்ந்தது இடம்புரியும், அஃதாயிரஞ்சூழ்ந்தது வலம்புரியும், அஃதாயிரஞ்சூழ்ந்தது சலஞ்சலமும், அஃதாயிரஞ்சூழ் ந்தது பாஞ்சசன்னியமுமாக, செங்கண்மாறடக்கையிலுள்ள அத்த கைப்பாஞ்சசன்னியம் நாணுவதெற்றுக்கெனின்,—தான் உயர்ந்தவி னத்ததாயினும் தெய்வீகதலத்தினுதிப்பின்றிப் பஞ்சசனனென்னும் அசுரனுருவெனும்பா யுதித்தமையின் இகழப்படுதலும், இவ்வலம்புரி தன்னிற்றாழ்ந்தவினத்ததாயினும் தெய்வீகமுடைய இத்திருவாதவூரி லுதித்தமையின் எவராலும் புகழப்படுதலும் பற்றியென்க. அன்றிப் பாஞ்சசன்னியமும்*வலம்புரியேயாகலின் தடக்கையிலுள்ளதனக்குச், சுயேச்சாசஞ்சாரமின்மையும் அதற்கஃதுண்மையும்பற்றி இனங்கண் டுழி நாணுநின்றதெனினும் அமையும். எனவே, அம்பிகைபாகரை வழிபடுவான் திருமாலணுகுந்தோறும் அவர்தடக்கையிற்சங்கம் ஈங்கு ளவலம்புரிகண்டு இவ்வியல்பான் நாணுநின்றதென்பது.

திருநீலகண்டம் அமலரது ஆஞ்ஞாரூபமாய்த்திகழ்ந்து அடியவ ரிடர்களைவதுணர்ந்து அதனையே தியானித்தலான் அப்பெயர்பெற்ற நாயனார் ஓர்ஞான்று ஓர்பரத்தைபாலணைந்துகண்ண அதுகண்ட மான மிக்கதேவியார் "எம்மைத்தீண்டுவீராயிற்றிருநீலகண்டம்" என்றாராக; அவர் அதன்மாட்டுவைத்த அன்புகுன்றாது, "எம்மையென்றதனால்

* வலம்புரி - வலப்பால் முறுக்குடையது.

மற்றைமாதரையும் மனத்திலுந்தீண்டேன்" என்று அங்கியதியை மு
ட்டின்றிச்செலுத்திய அருமைதோன்ற மாதர்வளமையெனப் பன்
மையாற்கூறினர். கொடிமாடச்செங்குன்றூரிற் பரிசனங்கட்குநேர்
ந்த தளிர்சுரமகலப் பிள்ளையார் * "அவ்வினைக் கிவ்வினை யாமென்று
சொல்லு மஃதறிவீ-ருய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே-
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோஞ் - செய்
வினை வந்தெமைத் தீண்டப் பெறுதிரு நீலகண்டம்." என்றருளிய
துஉம், இடர்களையும் ஆஞ்ஞாரூபமாதல் நோக்கியேபோலும்.

பாஞ்சசன்னியம் பஞ்சனனுருவெனும்பாதலை † "சங்க நேருருப்
பஞ்ச சனப்பெயர்-வெங்க ணவனையு மாயிடை வீட்டியே-துங்க வோ
சை வலம்புரித் தோற்றமா-மங்க வன்ற னெனும்பை யணிந்தனன்."
என்பதனானும், திருமால் தமோகுணவுருவத்தரென்பதனை ‡ "நேமி
யாற் குருவெலா நீல மாயதுந் - தோமறு கடலிடைத் துயில்கொள்
பான்மையு - மேமுறு மகந்தையும் பிறவு மெய்துமேற்-றுமத ராசதந்
தாமு முற்றவே. அறிவொருங் குற்றுழி யனையன் கண்ணுத - லிறை
வனை வழிபடீஇ யேத்தி யின்னரு - ணெறிவரு தன்மையு நீடு போத
மும்-பெறுதலிற் சாத்திக முறையும் பெற்றுளான்." என்பதனானும்,
விண்ணவர் மேற்கதியில் விருப்புடையரென்பதனை ○ வாழ்த்துவ
தும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பாற் - றாழ்த்துவதுந் தாமு
யர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச் - சூழ்த்துமது கமுரலுந்
தாரோயை நாயடியேன் - பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்
னைப் பரவுவனே." என்பதனானும், திருமால் பரிதிபெற்றமையை
× "அவன்சலந் தரனை வீட்டு மாழியை வாங்கப் பன்னாட் - சிவன்
கழல் வழிபட் டோர்நாட் செங்கணே மலராச் சாத்த - வுவந்தனன்

* தேவாரம் திருநீலகண்டப்பதிகம்·க.

† காஞ்சிப்புராணம் மச்சேசப்படலம்-கூ. ‡ கந்தபுராணம் அனந்தன்சாபநீங்குபடலம்·உ௰·உக

○ திருவாசகம் திருச்சதகம்-கரு. × கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்·உகூஎ.

விடைமேற் றோன்றியப்படை யுதவப் பெற்று - நிவந்தன னதனால் வையநேமியா னென்ப மாதோ." என்பதனானும்,வேதமே நூபுரமெ ன்பதனை *"மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையா-மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமா-மறையே நமது கோவணமா மறையே நமது விழியாகு-மறையே நமது மொழியாகு மறையே நமது வடிவாகும்." என்பதனானும், சிவபெருமானே சுருதி நாயகனென்பதனை † "காரெழில் புரையு மேனிக் கண்ணனை யென்னைப் பின்னை - யாரையும் புகழும் வேத மரன்றனைத் துதித்த தே போ-லோருரை விளம்பிற் றுண்டோ வுரைத்தது முகமனன்றே-பேருல கறிய முன்னும் பின்னரும் விலக்கிற் றன்றே. நான்மறை த னிலோர் பாக நாரமார் கடவுட் சென்னி-மேன்மைய தியம்பு மெம் மை விண்ணவர் தம்மை யேனைப்-பான்மைகொள் பூதந் தன்னைப் பல் பொரு ளனையும் பாதி-தான்மொழிந் திடுமோ வீது தவறல வுணர்தி தக்கோய்." என்பதனானும், சிவபுண்ணிய முதிர்வினர்க்கே வழிபாடு சித்திப்பதை ‡"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து-முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்க ண்-மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்-பன்னி யா தரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே."என்பதனானும், நாயன் மார் உலகவாஞ்சையகன்று வழிபட்டவரென்பதனை +"கல்விற் சம ரிற் கதிர்வாளிற் சாணையினில்-வல்லுப் பலகையினில்வாதனையைச்—சொல்லு - மகமார்க்கத் தாலவர்கண் மாற்றினர்கா ணையா - சகமார்க் கத் தாலன்றே தான்." என்றற்றொடக்கத்தனவானும், நீறணிந்தமை யை × "அவர்தமை விழியாற்-றொல்லை நாளினீ றாக்கியும் புனைந்திடுந் தூயோன் - மல்லன் மாதவ மனையவ ரியற்றிய வகையால்." என்பத

---

* திருவிளையாடல் உலவாக்கிழியருளியபடலம்-கூ. † கந்தபுராணம் உபதேசப் படலம்-உஎ-உஅ. ‡ தேவாரம் திருவலஞ்சுழி. + திருக்களிற்றுப்படியார் - ௬0.

× கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்-கக.

ஞானும்,மலைமகடமூவலை + "ஊடலை மறந்துமை மடந்தையரனைத் தன முறத்த ழூவினுள்." என்பதனானும், வீட்டுநெறிக்கேதுவாதலை × "கேட்டவர்க ளெல்லாருங் கிளர்புளகங் குறுவேர்வு - காட்டிட லுங் கண்ணீருங் கசிந்துருகுஞ் சிந்தையுமா - யீட்டியமெய்த் தவமு டையோ னியம்பியவித் தமிழன்றி - வீட்டுநெறிக் கினிச்சிவநூல் வேறுளதோ வென்றார்கள்." என்பதனானும் அறிக. (கஉ)

மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது - நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரையுந் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு.

(இ-ள்.) நெகிழ்ச்சி மலர் சந்தையினும் வண்டு இரையும் - விரித லுடையமலர்களில் சந்தையினும் வண்டுகள் மிக முழங்கும்—தண் புகலி சம்பந்தா - குளிர்ச்சிவாய்ந்த புகலியிற்குலவிய ஞானசம்பந்த மூர்த்தியே!—எதிர் வந்து புகழ்ச்சியொடு நீ பாடும் போது - சந்நிதி முன்னர்ச்சார்ந்து சீர்த்தியோடு (வேதசிவாகமநெறிகளைத்)தேவரீர் பா டுங்கால்,—தந்தையினும் பால் கொடுத்த தாய்க்கு - தந்தையாரினும் ஞானப்பாலையளித்த அன்னையாருக்கு—மிக மகிழ்ச்சி உண்டு பொ லும் - சால உவகையுண்டு போலும். எ-று.

பிறதேயங்களிற் பெறற்கரியவளமனைத்தும் ஆண்டுநிரம்பலின் அவைகொள்வான்செறியும் பதினெண்டேயமாந்தரும் பகருஞ்சொற் கள், அக்கரவடிவாய்ப்பொருள்பயக்கும் சுத்தமாயாகாரிய வொலியே யாகியும், அவை சந்தையிற்றிரண்டுழிப், பொருள்பயவாப் பூதகாரிய வொலியாய் முழங்காநிற்க; வண்டுகள் மணங்கவர்ந்து மதுமாந்திப் பாடும் இசைகள் அவ்வொலியினுமிக்கு இசையெனுமியல்பின்றிப் பெ

+ இராமாயணம் வரைபெடுத்தபடலம்-ககக.
× திருவாதவூரர்புராணம் திருவடிபெற்றசருக்கம் - உஉ.

ருமுழக்காய் முழங்குமென்பார், 'சந்தையினும்வண்டிரையும்' என்றும், சூரியகிரணத்தைவெறுத்துத் தன்பாற்றுன்னுவாரை மீட்டும் அக்கிரணத்தை விரும்பச்செய்யும் சீதளச்சோலையுடைத்தென்பார், 'வண்டிரையுந்தண்' என்றும், வேண்டிய வேண்டியாங்களித்தலின் எவரும் விழைந்துபுகலடையுந் தலத்தினரென்பார், 'புகலிச்சம்பந்தா' என்றும், சிவஞ்சத்திகளின்புகழ்ச்சியோடு வேதசிவாகமநெறிகளையும் தெரித்துணர்த்தினரென்பார்,புகழ்ச்சியைப்பாடுமென்னுது 'புகழ்ச்சியொடுபாடும்' என்றும், தந்தையர் கல்வியறிவுடைமையாற்றனயரறிவுடைமையைத் தாம் மதித்து மகிழ்தலும் தாயர்க்கஃதின்மையான் உன்மகன் சால்புடையனெனக் கற்றோருரைக்கக் கேட்டுமகிழ்தலும் பெரிதும் உலகியல்பாக, இறைவியார் இயற்கையறிவுடைமையின் எதிர்வந்துபாடுங்கால்,அத்திருநெறித்தமிழின் அருமையைமதித்தும், தாமளித்தஞானப்பால் அதற்கேதுவாதலைத்துணிந்தும்,இறைவரினும் இனிதுவந்திருப்பரென்பார், 'தந்தையினும் பால்கொடுத்ததாய்க்கு மகிழ்ச்சிமிகவுண்டுபோலும்' என்றும் கூறினர்.

அருமையாவது அத்திருப்பாடல்கள் வேதசிவாகமநெறிகளை விளக்கலின் பவக்கடலைக்கடத்தற்குப் பல்தோணியாதல். புகலியென்னும் இத்தலம் தோணிபுரமெனப் பெயர்புனையுமாறு இறைவரோடு தாமூர்ந்த பிரணவத்தோணி ஊழிக்காலத் திவ்வுலகைமூடிய கடலைக்கடத்தற்கோர் கருவியாக, அப்பிரணவத்தைத் தகரமெய்யொடுபுணர்த்தித் "தோடுடையசெவியன்" எனத்தொடங்கிய இத்திருநெறித்தமிழ் எளிதிற் பிறராற்கடத்தற்கரிய பவக்கடலைக்கடத்தற்குக் கருவியாதல்கண்டு, இறைவியார் மிக்குவகை எய்தியிருப்பர்போலுமென்பது கருத்து. போலும் ஒப்பில்போலி. வேதசிவாகமநெறிகளையென்பது அவாய்நிலையான் எஞ்சிய சொல்லெச்சம். சந்தை பற்பலபொருளுங்கொள்வான் பலருங்கூடுமிடம். உம்மைகளிரண்டும் உயர்வுசிறப்

புப் பொருளவேனும் ஒன்றற்கொன்று குறைபாடுடைத்தன்றென்னும் பொருளவாய்நின்றன. ஒடுவை ஐயுருபாக்குவாருமுளர்.

சொற்றிரட்சி பூதகாரியவொலியாதலை * "பாய தொன்மரப் பறவைபோற் பயன்கொள்வான் பதினெண் - டேய மாந்தருங் கிளந்த சொற் றிரட்சிதான் றூய - மாயை காரிய வொலியன்றி வான்முதற் கருவி-ஞய காரிய வோசையே யாய்க்கிடந் தன்றே." என்பதனானும், வேதசிவாகமநெறிகளை விளக்கியதை † "கரும்பினுமிக் கினியபுகழ்க் கண்ணுதல்விண் ணவனடிமேற் - பரம்பவிரும் புவியவர்க்குப் பத்திமையை விளைத்தனையே. பன்மறையோர் செய்தொழிலும் பரமசிவாகமவிதியு-நன்மறையின் விதிமுழுது மொழிவின்றி நவின்றனையே." என்பதனானும், பாடல் பவக்கடலைநீந்துதற்குப் பஃறேணியாதலை ‡ 'காழி நாடன் கவுணியர் தலைவன் - மாழை நோக்கின் மலைமகள் புதல்வன் - திருந்திய பாடல் விரும்பினர்க் கல்லது - கடுந்துய ருட் புகக் கைவி ளிக்குமிந் - நெடும்பிற விக்கட னீந்துவ தரிதே." என எதிர்மறையினும், × "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்-துறவியெனுந் தொஃறேணி கண்டீர்—நிறையுலகிற் - பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்த-னன்மாலை ஞானத் தமிழ்." என உடன்பாட்டினும் வற்புறுத்துதலானும் அறிக. (கரு)

தாயிலி யாகுஞ் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
கோயிலி னுறறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னணவ மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவ னேக்குதற்கே.

(இ-ள்.) நோய் இலி ஆகிய சொல் இறை - மலமுத்தராகிய வாகீசமூர்த்திகள்,— தான் எனும் ஓர் கோயிலின் ஆர்-ஆன்மாவெனப்ப

* திருவிளையாடல் திருநகரப்படலம்-சுஎ. † திருஞானசம்பந்தர்திருக்கலம்பகம்-க.
‡ திருஞானசம்பந்தர் திருமும்மணிக்கோவை-க. × ஷை - கக.

டும் தனியாலயத்தின்கட்பொருந்திய—அறிவு ஆகிய நாமம் முன் கொண்டு இருந்தவாயிலின்—அறிவென்னும்பெயரை அநாதியேகொண்டுள்ள வாயிலிற்பந்தித்துநிற்கும்—ஆணவம் ஆகும் கபாடமும் மன் திறந்து - ஆணவமலமென்னுங்கதவையும் மிகத்திறந்து,—தாயிலி ஆகும் சிவபெருமான்றனை-(உயிருணர்வுமுனைக்குமளவும்) அவ்வுணர்வேயாகிக், காணப்படுதலில்பொருளாய் விளங்கும் சிவபெருமானை—நோக்குதற்கு காட்டுவன் - காணக்காட்டுவர். எ-று.

மலமுத்தராயினரே பிறரையும் மலமுத்தராக்குதற்குரியரென்பார், 'நோயிலி' என்றும், இவர் சொல்லளவானே ஆக்கவல்லுநரென்பார், 'சொல்லிறை, என்றும், உயிர்க்குயிராய் உண்ணின்றுணர்த்தலின் அவ்வுயிரனைத்தும் இறைவர்க்கு ஆலயமென்றுபசரிக்கப்படுமென்பார், 'தானெனுமோர்கோயில், என்றும், சிவன்போலத் தானே அறிவதன்றேனும் அறிவிக்கின் அறிவதாதல்பற்றி அநாதியே அறிவென்றுபசரிக்கப்பட்டு வருவதென்பார், 'அறிவாகியநாமமுன்கொண்டிருந்த, என்றும், உணர்த்தியவழியும், அவ்வறிவு யானென்றும் அவனென்றும் ஞாதிருஞேயங்களைப் பகுத்துணர்ந்து, உயிரின்முனைத்துத் தோன்றுவதென்பார், அதனை 'வாயில், என்றும், உயிர் வியாபகமாகலின் ஆன்மாவெனப் பெயர்பெற்றதாக, அவ்வியாபகவுயிரை அணுத்தன்மைப்படுமாறுசெய்தலின் மலம் ஆணவமென்னும்பெயர்த்தென்பார், 'ஆணவம்' என்றும், அது, ஞானதிரோதகமாய், உயிரென்பதொன்றில்லையென்னும்படி பொதிந்துகொண்டு நிற்பதொன்றென்பார், 'கபாடம்' என்றும், அம்மலமும் அநாதிசித்தமாகலின் அதனையொழிப்பது அதனது மறைத்தற்சத்திமடங்கக் கீழ்ப்படுவித்தலேயென்பார், 'திறந்து' என்றும், உயிரறிவு முனைத்துத்தோன்றுங்காறும் அவ்வறிவேயாய்த், தானென்றொருமுதல் காணப்படுமாறின்றி நிற்பரென்பார், 'தாயிலி' என்றும், எவர்க்கும் நிரதிசயவின்பம்பயக்கும் இறைவரென்பார், 'சிவபெருமான், என்றும், வழிபாடுடையார்க்குப்

பதியறிவையுறுவித்துக் காணப்படுமாறில்லாத அக்கடவுளை அகத்தே காணக் காட்டுவரென்பார், 'நோக்குதற்குக் காட்டுவன்' என்றும் கூறினார்.

இது, பதிபசுபாசங்களை வியாபகவியாப்பிய முறைமைபற்றியோதாது சூக்குமதூல முறைமைபற்றியோதியதென்க. வியாபகம் - அதிகவிருத்தியையுடையது. வியாப்பியம் - நூனவிருத்தியையுடையது. பதியறிவாவது திருவருளால் யாவும் சிவமெனக்காணும் தெள்ளியவுணர்வு. வழிபடுவார்க்கென்பது சொல்லெச்சம். தாய் என்பது இறந்தகாலவினையெச்சம். தாவல் - ஈண்டு அவ்வுயிரறிவாதன்மேற்று. தாயிலியென்புழி இன்மை விளங்காமைகுறித்துநின்றது; * "பாசத்தார்க் கின்றும் பதி." என்புழிப்போல. தாயிலியென்பதற்குத் தமக்கொருமூலமில்லாத முதற்கடவுளென்னலும் ஒன்று. இலியென்பன வினைக்குறிப்புப்பெயர்கள். உயிர்முற்றும் சூக்குமவாலயமும் அவற்றினுடலனைத்தும் தூலவாலயமுமாகக் கூறுவது நூற்றுணிபாகவின் பொதுப்படத் தானெனுமோர்கோயிலென்றாரெனினும் இழுக்கின்று. இப்பொருட்கண் ஓர் அசையென்க. உம்மை உயர்வுசிறப்பு. அல்லது, திருமறைக்காட்டுத் திருக்கதவன்றி இதையுமென எச்சவும்மையாக்குக. பின் வாதியாதொழிப்பரென்பார் மன்திறந்தென்றார். சிவதரிசனத்தினன்றிப் பாசக்ஷயமாதிய ஆன்மசுத்திபிறவாதாகலான் ஆகியவென்பதனைச் செய்யியவென்னும் வினையெச்சமெனக்கொண்டு, நோயிலியாகும்படிகாட்டுவன் என்னலுமாம். திரோதகமென்பது மறைத்தலைச்செய்வதென்னும்பொருட்டாய் வினைமுதன்மேனின்ற வினைப்பெயர்.

அறிவிக்கவறிதற்றன்மையை † "சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற் சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் த

* சிவஞானபோதம் பன்னிரண்டாஞ்சூத்திரம் - தன்னுணர.

† சிவஞானசித்தி பதினொராஞ்சூத்திரம்-கக.

வன்ருன் - பவங்கெடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற் படியுஞ்சி த் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்ற - னவன்ருனே யறியுஞ்சித் தாத லிஞ லிரண்டு மணேந்தாலு மொன்ருகா தனியமா யிருக்கு - மிவன் ருனும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி யிதுவசித்தென் றிடிலவனுக் கிவனுமசித் தாமே." என்பதனுனும், மலநீக்கவியல்பை * "பொன்வா ண்முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத் - தன்வாளே யெ ங்குமாந் தன்மைபோன் - முன்வாண் - மலத்தின் மறைந்துள்ள மற் றுலகை யுண்ணு - மலத்திரித்துச் செல்லும் வரத்து." எனவும், † "இருண்மலமும் போகா திருந்து மயக்கா - தரன்மிடற்றி னஞ்சு போ லாம்." எனவும் வருவனவற்ருனும், தாயிலியாதலை ‡ "யான் செய்தேன் பிறர்செய்தா ரென்னதியா னென்னு மிக்கோணை ஞா னவெரி யால்வெதுப்பி நிமிர்த்துத் - தான்செவ்வே நின்றிடவத் தத் துவன்ரு னேரே தனேயளித்து முன்னிற்கும் விணையொளித்திட் டோடு - நான்செய்தே னெனுமவர்க்குத் தானங் கின்றி நண்ணுவிக் கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்ம - மூன்செய்யா ஞானந்தா னுதிப்பி னல்லா லொருவருக்கு மியானென திங் கொழியா தன்றே." என்பதனுனும், இறைவர்க்கொருமூலமின்மையை o "மாலயன் முத லோர் யாரும் வரம்பிலித் திருவை யெய்த - மேலைநா ளளித்தோன் ருனும் விமலனு மினேயர்க் கெல்லா - மூலமுந் தனக்கு வேருேர் முத லிலா தவனு மெங்க - ளாலமர் கடவு ளன்றி யமரரில் யாவ ரம்மா." என்பதனுனும், வியாபகவியாப்பியமுறைமையை + "அமலைக்கு வியா பகனே யரனவற்கு வியாப்பியமே - விமலைவியா பகியுயிர்கட் குயிர வட்கு வியாப்பியமே - சமலைக்கு வியாபகியே சமலையுயிர் வியாப்பிய

---

* சிவஞானபோதம் பதினொராஞ்சூத்திரம்.

† இறைவனூற்பயன் போதகவியல்-௧அ. ‡ சிவஞானசித்தி பத்தாஞ்சூத்திரம் - ௨.

o ஸ்கந்தபுராணம் ததீசிப்படலம்-௨௦. + சிவதருமோத்தரம் சிவஞானயோகவியல்-௨௨.

அமலை - மலரகிதையாகிய சிவசத்தி. சமலை - மலசகிதையாகிய ஆன்மசத்தி.

மே - சமலைசக வியாபகியே சகஞ்சமலை வியாப்பியமே.'' என்பதனு னும், சூக்குமதூலமுறைமையை * ''நுண்ணியனேசிவன் றூலஞ்ச த்தி யவனெய்யார்க்கு - நுண்ணியளே நொய்யார்களதிதூலர் நுத ன்மதிக்கு - நுண்ணியரே நொய்யார்தஞ்சத்திகளுக் கவர்தாமு-நுண் ணியரேநோய்க் கவர்க்குமதிதூலதரநோயே.'' என்பதனுனும், பசுவறி வகற்றுதலை † ''படிறின் றித்தனைத் தொடர்ந்தவர் பசுபந் தத்தினைப் பரிந்திடு பரிசொன் றப்பணிக் குநன்றுமே.'' என்பதனுனும் அறிக.

நோக்குறு நுதலோ னின்னிடை விருப்பா னூற்பக வன்ன நுண் மருங்குல், வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி மாற் றுவான் சென்றன னென்றுல், கோக்கலிக் காமன் வயிற்றிடை க் குத்திக் கொண்டதே துக்குநீ புகலாய், காக்கரு மதலை விழு ங்கிய முதலை கான்றிடத் தோன்றுநா வலனே.

(இ-ள்.) விழுங்கிய முதலை கான்றிட காக்கரும் மதலை தோன் றும் நாவலனே - விழுங்கியமுதலையே கரையிற்கக்கும்படி உதிப்பித் தற்கரியபுதல்வன் உதித்தற்கேதுவாகிய வாக்கின்வன்மையையுடைய புலவரே!—நுதல் நோக்கு உறுவோன் நின்னிடை விருப்பால் - கரு த்தின்குறிப்பைக் கண்டறிந்தகடவுள் தேவரீர்பால்வைத்த காதலா ல்—நூல் பகவு அன்ன நுண் மருங்குல் - நூலின் நேர்பாதியைநிகர் த்த நுண்ணிய இடையையும்—வார் குவி முலை மெல் மகளிர்தம்- கச்சணிந்த குவிந்த தனங்களையுமுடைய மெல்லிய பரவைநாச்சியா ரின்—புலவி மாற்றுவான் சென்றனன் என்றுல் - ஊடலைத்தணிக்க உவந்துசென்முரென்று உயர்ந்தோர் விதப்பாராயின்,—கோ கலிக் காமன் - ஏயர்குடித்தலைவராகிய கலிக்காமநாயனுரொருவரும் (அது காரணமாக)—வயிற்றிடை குத்திக்கொண்டது ஏதுக்கு நீ புகலாய் - தம்முதரத்திலே குத்திக்கொண்டது யாதிக்குச் சாற்றுவீராக. எ-று.

---

* சூடி இயல்-உசு. † திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை—கூ.

குத்திக்கொண்டது உள்ளக்கிடக்கையையுணராது இச்செயல் சிவாபராதமெனச் சிந்தித்திருந்தமையாற்போலுமென்பார், 'குத்திக் கொண்டதேதுக்கு, என்றும், அவருள்ளக்குறிப்பை அறிந்துளீராக வின் நீரறிவிக்கின் ஐயப்பாடில்லையாமென்பார், 'நீ புகலாய்' என்றும் கூறினர். கூறவே, 'சிவாபராதமியற்றினரைத் தக்கவாறுதண்டிக்க; அஃதியலாதேல் தம்முயிர் துறக்க.' என்பதே தலைமைவிதியாகலாற், காணப்பெறின் இவ்விரண்டனுள் ஒன்று நிகழுமென்னுந்துணிபா ல் * "அரிவைகா ரணத்தி னாலே யாளுடைப் பரமர் தம்மை - யிரவி னிற் றூது போக வேவியங் கிருந்தான் றன்னை - வரவெதிர் காண்பே னாகில் வருவதென் னாங்கொ லென்று - விரவிய செற்றம் பற்றி விள் ளுமுள் ளத்த ராகி." இருந்தாராகலின் வரவுகேட்டுழித் தம்முயிர் து றந்தாரென்பது.

நுதல்நோக்குறுவோனெனற்பாலதுசெய்யுணோக்கிப் பிறழ்ந்தது; கேடரியனெனன்பது † "அருங்கேடன்." என்றுயவாறுபோல. நுத லென்பது செயப்பாட்டுவினைப் பொருண்மையுணர்த்தும் விகுதிபு ணர்ந்து கெட்டுநின்ற வினைப்பெயர். நுதலப்படுவதென்றவாறு. நுத லல் - கருதல். நோக்கு - குறிப்பு. உறுதல் - ஈண்டுற்றுணர்தல். நோ க்குறுமென்பது ஒருசொன்னீர்மைத்தெனினும் ஒக்கும். கருத்தின் குறிப்பாவது-பெற்றசிற்றின்பமே பேரின்பமாக நுகர்தல். இவரிங்ங ன நுகர்ந்தமை முன்னர்ப்பெறப்படும். இத்தேவியார்மருங்குல் தனங் களான் வாட்டுதெற்றன்மை இன்னும் எய்தப்பெற்றிலதென்பார், ஒசித லாதி அடைகொடாது 'நூற்பகவன்ன நுண்மருங்குல்' என்றார். காத் தற்கருமையாவது - காலங்கடந்தமையின் மீட்டுயிர்ப்பித்தற் கியலா மை. மதலையுமென உயர்வுசிறப்பும்மை கொடாதொழிந்தார்; இவர துதிருவடிகளே நினைவாரை மீளாப்பிறவியின் மீட்கவல்லனவாயின் மீளாச்சேயை இவர்மீட்பித்த இஃதோர் வியப்பன்றென்பது தோன்

* பெரியபுராணத்தில் கலிக்காமநாயனார்புராணம்-கஅஎ. † திருக்குறள்-உக0.

றற்கு. இது குறிப்பெச்சம். தோன்றுநாவலனென்றது காரியத்தைக் காரணமாக உபசரித்தல். உதிப்பித்தற்கரிய புதல்வனும் உதித்தற்கே துவாகிய வாக்கின்வன்மையரென்றபடி.

பேரின்பமாகநுதர்தலை * "பெற்றசிற் றின்பமே பேரின்பமாய்" என்றும், † "உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்ப-மடங்கத்தம் பேரின்பத் தாக்கின்" என்றும், ‡ "காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்-பேணு மடியார்" என்றும், வருவனவற்றானும், மீளாப்பிறவியின் மீட்கவல்லனவென்பதை + "நாட்டா ரறிய முன்னாளி னன்று ளிறந்த வைம்படையின் - பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன் றன்னைப் புக்கொளியூர்த் - தாட்டா மரைநீர் மடுவின்கட் டனிமா முதலை வாய்நின்று - மீட்டார் கழலை நினைவாரை மீளா வழியின் மீட்பனவே." என்பதனானும் அறிக.

நோக்குறுநுதலோனென்பது கண்படைத்த நெற்றிக் கடவுளெனவும் பொருள்படினும், நுதற்கட்பெருமானே நினைத்தோழமைகொண்டானெனவே, புலவிதீர்க்கச்சென்றாரும் அவரேயென்பது அமைந்துகிடத்தலானும், அங்ஙனமுரைப்பின் இவர் பெற்றசிற்றின்பமே பேரின்பமாக நுகர்ந்தமையும், அதுகொண்டே அமலர் தூதுசென்றமையும், அதுபற்றியே அறிஞரெல்லாம் வியந்துரைத்தமையும், பெறப்படாமையானும், அஃது ஈண்டைக்கேலாமையறிக. (கரு)

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி

* திருவுந்தியார்-கூ. † திருக்களிற்றுப்படியார்-எக. ‡ திருவாசகம் பண்டாயநான்மறை-
+ ஷை புராணத்தில் நமிநந்தியடிகணாயனார்புராணம்-கக.

யோதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே.

(இ-ள்.) வலம் மழு உயரிய - வலப்பக்கத்திலே மழுவையுயர்த்திய—நலம் மலி கங்கை நதி தலைசேர்ந்த - புனிதநிரம்பியகங்காநதி தலைக்கூடப்பொலிந்த—நல் கருணைக் கடல் முகந்து - செவ்விய சிவமென்னும் கிருபைக்கடலைப் (பெருந்துறைபுகுந்து) முகந்து—உகந்த மாணிக்க வாசகன் எனும் ஒரு மா மழை - ஓங்கிய மாணிக்கவாசகரெனப்படும் மேன்மைவாய்ந்த ஒருமேகமானது,—உலகு உவப்ப பொழிந்த திருவாசகம் எனும் பெருநீர் ஒழுகி - மக்களுயிர்கள்மகிழச் சொரிந்த திருவாசகமென்னும் பெருவெள்ளஞ்சென்று,—ஓதுவார் மனம் எனும் ஒண் குளம் புகுந்து - ஓதுபவர்களுடைய உள்ளமென்னும் எழிலமைந்த ஏரியினுள்ளே நிரம்பி,—நா எனும் மதகில் நடந்து - வாயென்னும் மதகின்வழி வெளிப்பட்டு,—கேட்போர் செவி எனும் மடையில் செவ்விதின் செல்லா - சிரவணஞ்செய்பவர்களுடைய செவிகளென்னும் மடைகளில் வழுவுதலின்றிச்சென்று,—உளம் எனும் நிலம் புக - அவர்களுடைய நெஞ்சமென்னும் நிலத்திற்பாய;—ஊன்றிய அன்பு ஆம் வித்தில் - அங்கேபதிக்கப்பட்டுள்ள அன்பென்னும் வித்திலே—சிவம் எனும் மெல் முளை தோன்றி - சிவமென்னும் சிறுமுளை அங்குரித்து,—வளர்ந்து கருணை மலர்ந்து - வளர்ச்சியுற்றுக் கிருபைவிரிந்து,—விளங்குறும் முத்தி மெய் பயன் தரும் - ஒளிர்கின்ற முத்தியென்னும் உண்மைப்பயனை உதவாநிற்கும். எ-று.

ஆண்பாற்கியையவலத்தில்மழுவும் பெண்பாற்கியைய இடத்தில் மானும் ஏந்தியவரென்பார், 'வலமழுவுயரிய' என்றும், இறைவியார் ஓர்விளையாட்டான் இறைவர்கண்களை மூடுங்கால் எங்கும் இருளடரக் கண்ட அச்சங்காரணமாக வியர்த்த அத்திருக்கரங்களினுதித்தகங்கை அண்டமுழுதுங்கவர்தல்கண்டு அதனைச் செஞ்சடையின் ஒருரோமத் திற் செறித்தவரென்பார், 'கங்கைந்திதலைசேர்ந்த' என்றும், அனைத் தையும்புரக்கும் அளவுபடாக் கருணையுருவத்தரென்பார், 'கருணைக் கடல்' என்றும், எவர்க்கும் சிவபோகம்விளைய வாசகமாகிய மாணிக்க மழையைச்சொரியும் கருணைமேகமாகிய இவரை நிகர்த்தமேகம் பிறி தின்றென்பார், 'மாணிக்கவாசகனெனுமொருமாமழை' என்றும், திரு வாசகமும் அக்கருணைப்பெருக்கேயென்பார், 'கருணைக்கடன்முகந் துபொழிந்த திருவாசகமெனும்பெருநீர்' என்றும், அது செவ்விதிற் சென்றுபுகாவழிச் சிவபோகம்விளையாவாகலின் வேறுசிந்தனையின்றி எந்தைதாட்பால்வணங்கித் தலைநின்றுகேட்டு வழுவாது செலுத்துக வென்பார், 'செவ்விதிற்செல்லாப்புக' என்றும், அன்பிலாவகத்தே அதுபுகாதென்பார், 'உளமெனுநிலம்புகலூன்றியவன்பு' என்றும், அன் புள்வழி அவ்வன்பேசொரூபமாகச் சிவம் வெளிப்படுமென்பார், 'அன் பாம்வித்திற்சிவமெனுமுளைதோன்றி' என்றும், அத்திருவாசக சிரவ ணஞ்செய்வோருளத்தே சிவம் விர்த்தித்துத் திருவருள்பதிவிக்கு மெ ன்பார், 'வளர்ந்துகருணைமலர்ந்து' என்றும், இறுதியில் அவர்க்கு நல் குவது பதமுத்தியன்று பரமுத்தியென்பார், 'விளங்குறுமுத்திதரும், என்றும், அம்முத்தியொன்றே உண்மைப்பயனுவதென்பார், 'மெய்ப் பயன், என்றும் கூறினர்.

வாரிநீர்மிகாது வறள்விக்கும் வடவாமுகாக்கினியையேந்தலும் கங்காநதி தலைக்கூடப்பெறுதலுமுடைய கடலின்கண்ணே மேகமுகந் தோங்கி உலகுவப்பச்சொரிந்தபெருநீர் ஏரியிற்செறிந்து, மதகின்வெ ளிக்கொண்டு, மடைவழிச்சென்று நிலம்புகாநிற்க; அதிற்பதித்துள்ள

வித்தில் அங்குரந்தோன்றி வளர்ந்துமலர்ந்து பயன்றருமாறுபோலப், பயன்றருமென முற்றும் ஒக்க உருவகித்தமையின், இது முற்றுருவகம். உயரிய சேர்ந்தவென்னும் எச்சங்கள் கருணைக்கடலென்னும் ஓர் பெயர்கொண்டன. நலம்-மூழ்கியார்க்கு அகத்தும் புறத்தும் தூய்மை பயத்தலுடைமை. எவர்க்கும் இன்பநல்கலின் நற்கருணையென்முர். உலகென்றது மக்களுயிர்களை; இப்பயன்கோடற்குரியன அவையேயாகலின். உகத்தல் - நிகரின்றியோங்கல். ஒண்மை - அழகு. மடை - நீர்மடுக்குஞ்சிறுதுறை. ஏகாரம் தேற்றம். நீர் செவ்விதிற்செல்லாப் புக முளைதோன்றித் தருமென இயையும். கேட்போருறுபயன் முன்னர்க்கிளந்தார்; இது சுருதியென்பது துணிதற்கு.

கங்கைநதிதலைச்சேர்ந்தமையை * "எவ்வுலகுஞ் சூழ்போய்-நின்றவந் நீத்தந் தன்னை நினைத்தவ ணழைத்து நாத - னென்றுதன் வேணி மேலோ ருரோமத்தி னும்ப ருய்ப்ப." என்பதனுனும், கருணைக்கடலென்பதனை † "பொருங்கட லனீகமொடு போய்ப்புற வடுத்த-விருங்கட மளப்பில கடந்தெழு பிறப்பாங் - கருங்கடல் கடக்கவரு வார் கருணை வெள்ளப் - பெருங்கட னிறைந்துறை பெருந்துறை யடைந்தார்." என்பதனுனும், அன்புஞ்சிவமும் அபேதமாதலை ‡ "அன்புஞ் சிவமுமிரண்டென்ப ரறிவிலா - ரன்பே சிவமாவ தாரு மறிகிலா - ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி-னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே." என்பதனுனும், சிவபோகம்விளையச்சொரியும் மாமழையென்பதனை ० "பேசுபுகழ் வாதவூர்ப் பிறந்துபெருந் துறைக்கடலுண்-டாசிலெழி றடித்தயா வஞ்செழுத்தா லதிர்ந்தெழுந்து - தேசமலி தரப்பொதுவார் சிவபோக மிகவிளைவான் - வாசகமா மாணிக்க மழைபொழிமா முகில்போற்றி." என்பதனுனும் அறிக. (கசு)

---

* கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்-௩௭௨. † திருவிளையாடல் வாதவூரடிகளுக்குபதேசித்தபடலம்-உக. ‡ திருமந்திரம் அன்புடைமை. ० சேரமிற்புராணம் பாயிரம்.

பயனாகு நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தா - முயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு.

(இ-ள்.) சிரபுரத்து நாவலன் சம்பந்தன் இயம்பு திருப்பாட்டு- சிரபுரத்தவதரித்த முத்தமிழ் விரகரருளிய திருப்பாடல்கள்,—நல் ஆண் பனைக்கு பயன் ஆகும் - பண்புமிக்க ஆண்பனைகளுக்குப் பழமாகும்;—விடத்திற்கு மயில் ஆகும் - நஞ்சத்திற்கு மஞ்ஞையாகும்;—நோய்க்கு மருந்து ஆம் - பிணிக்குப் பெருமருந்தாகும்;—சிந்தும் எலும்பிற்கு உயிர் ஆகும் - உருச்சிதைந்துதிர்ந்த என்பிற்கு உயிராகும். எ-று.

புத்தநந்திதலையுருளுதற்குப் பொருதும் இடியாதன்முதலியவற்றை இன்னும் இத்திருப்பாட்டு எதற்கு எதுவாகுமென உய்த்துணர்தலின்பாற்படுத் தொழிந்தார்; இச்செய்யுளில் இடம்பெறுமையின், பாற்கடல்கடைந்தெடுத்து அமுதம்பகிருங்கால், அசுரரிருவர் தேவரினுருமாறி ஒருங்கிருந்துண்ணுதலைத் திருமால் சந்திரசூரியர்களாலுணர்ந்து, சட்டுவத்தால்வீச; வெட்டுண்ட அவ்வசுரர்சிரங்களே, அவ்வற்ப அமிர்தசம்பந்தத்தானே அழிவின்றி இத்தலத்திறைவரருளான் இராகுகேதுக்களாய்க் கிரகநிலைமையடைந்து, வணங்குவார்கிலேசத்தை மாற்றிவிளங்குமாயின், தேவியாரளித்த ஞானமிர்தத்தைப்பருகித் தெய்வீகமுற்ற ஞானசம்பந்தவள்ளலருளிய பாடலினற்புதங்கள் இத்துணையவெனப் பகரலாகுங்கொலென்பார் இங்ஙனம் கூறினர்.

கூறவே, விடம் நோய்முதலியன தாமே நிவர்த்தித்தலின் கர்த்திருத்துவமும், சமணரைக்கழுவேற்றல் புத்தநந்திதலையையுருள்வித்தல்முதலியன அன்பராலியற்றினமையின் அகர்த்திருத்துவமும், ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கல் பாலையைநெய்தலாக்கல் என்பை

ப் பெண்ணுக்கல்முதலியன ஒன்றை மற்றொன்றாகச் செய்தமையின் அந்நியதாகர்த்திருத்துவமும், இன்னும் இவற்றையே வேறுபடுத்துணரின் என்பைப்பெண்ணுக்கல் சிருட்டியும், விடம் நோய்முதலிய நிவர்த்தித்தல் திதியும், கழுவேற்றல் தலையுருள்வித்தல் முதலியன சங்காரமுமாகலின், சிவபெருமானுக்குரிய பிரபுத்துவ சாமர்த்திய முக்குணங்களும் சிருட்டியாதி முத்தொழில்களுமுடைய முதல்வரென்பது குறிப்பித்தவாறாயிற்று.

அற்றேல், திருநனிபள்ளிக்கெழுந்தருளுங்கால் அடியவர்க்கு வெப்பமகலப் பாலையை நெய்தலாக்கியதைச் சேக்கிழார்பெருந்தகை செப்பாததென்னையெனின்,—இன்னோரன்ன சரித்திரங்கள்பல தலபுராணங்களுள் விரிந்திருத்தலின் தாம்விரித்திலரேனும் * "நாத னனி பள்ளி சூழ்நகர் கானக மாக்கியஃதே-போதின் மலிவய லாக்கிய கோன்" என்றும், † "கள்ளம் பொழினனி பள்ளி தடங்கட மாக்கியஃதே - வெள்ளம் பணிநெய்த லாக்கிய வித்தகன்." என்றும், பாலையை முல்லையுமருதமுங்கலந்ததொரு நெய்தலாக்கினரென நம்பியாண்டார் நம்பிகள் விதந்திருத்தலின் அந்நம்பிகள் திருவாக்கைத் தாம்கூறும் சரித்திரங்கட்கு ஆதாரமாகக்கொண்ட அப்பெருந்தகைக்கு இத்தகையவும் உடன்பாடேயாமென்பது.

உடன்பாடுபெற்றியன்றே அந்நம்பிகள் "கூற்றுக் கெவனோ புகறிரு வாரூரன் பொன்முடிமே - லேற்றுத் தொடையலு மின்னடைக் காயு மிடுதருமக் - கோற்றொத்து கூனனுங் கூன்போய்க் குருடனுங் கண்பெற்றமை - சாற்றித் திரியும் பழமொழி யாமித் தரணியிலே." எனத் திருத்தொண்டர்திருவந்தாதியிலருளிய ஆளுடையநம்பிகள் சரித்திரத்தைத் தாம் விரியாதிருந்தும், அவர்போலவே, கூற்றுவநாயனார்புராணத்திறுதியில் "தேனுங்குழலும் பிழைத்ததிரு மொழியாள் புலவி தீர்க்கமதி - தானும்பணியும் பகைதீர்க்குஞ் சடையார்தூது

* திருஞானசம்பந்தர் திருவந்தாதி-௧௭. † திருஞானசம்பந்தர் திருச்சண்பைவிருத்தம்-௪.

தருந்திருநாட் - கூனுங்குருடுந் தீர்த்தேவல் கொள்வார்குலவு மலர்ப் பாதம் - யானும்பரவித் தீர்க்கின்றேனேழுபிறப்பின் முடங்குகூன்" என்றருளியதூஉமெனக. இப்பிள்ளையார்சரித்திரங்கள் போலவே, ஆங்காங்குள்ள மற்றைமூவர்களின் சரித்திரங்களனைத்தும், ஒருங்கு தொகுத்து முறைப்படுத்தி, அவர்களும் ஈண்டுணர்த்திய முக்குணங்களும் முத்தொழில்களுமுடைய முதல்வராதல், உய்த்துணர்க. விரிக்கிற்பெருகும்.

பாட்டின்விளைவைப் பாட்டுவிளைவாக வுபசரித்தார். சிரபுரமென்பது அசுரரிருவர்சிரங்கள் அருச்சித்தபுரமென்னும் பொருளதேயாயினும் ஈண்டு ஏனைப்புரங்களுட் டலைமைபெற்றபுரமென்னும் குறிப்பின்மேற்று. பாட்டு பனை விடம் நோய் என்பன சாதியொருமை. பனைக்கு விடத்திற்கு நோய்க்கு எலும்பிற்கு என்பவற்றில் முறையே சிறத்தல் ஒழித்தல் நீக்கல் உருக்கொள்ளலென்பன நடுவேபெய்து பொருளுரைத்துத் தமர்த்தமெனக்கோடலும் ஒன்று. இங்ஙனங் கோடலைப் பிரயோகவிவேகம் "உடனிகழ்கின்ற" என்னும் செய்யுளுரையிற்காண்க. நன்மையாவது-முத்தமிழ்விரகராற் பாடப்பெற்று முத்திபெறற்குரிய முதுதவமுடைமை. விடநிவர்த்தித்தமை திருமருகலிலெனப் பெரியபுராணத்தும் திருப்புறம்பயத்திலெனத் திருவிளையாடற்புராணத்தும் கூறுவது மலைவாம்பிறவெனின்,—அற்றன்று; அவ்விருசரித்திரங்களும் ஒன்றற்கொன்று அணுத்துணையும் ஒவ்வாமையானும், பாரிலெதிர்ந்த பல்விடங்கள் தீர்த்தருளினரெனத் திருஞானசம்பந்தர்திருவுலாமாலையில் நம்பியாண்டார்நம்பிகள் அருளியவாற்றானும் வெவ்வேறெனக்கோடலே மேலோர் துணிபென்க. நோய் - கொல்லிமழவன்மகட்குநேர்ந்த குமரகண்டவலியும் பரிசனங்களின்பக்கற்பரவிய நளிர்சுரமும் கூன்பாண்டியர்பாலுற்ற கொடுஞ்சுரமும் கூனும் பிறவுமாம்.

பனைகள்முத்திபெற்றமையை * "பிள்ளை யார்தந் திருவாக்கிற் பிறத்த லாலே தாலமுமுன் - புள்ள பாசம் விட்டகல வொழியாப் பிறவி தனையொழித்துக் - கொள்ளு நீர்மைக் காலங்கள் கழித்துச் சிவமே கூடினவாம் - வள்ள லார்மற் றவரருளின் வாய்மை கூறின் வரம்பென்னும்." என்பதனுனும், பாட்டினற்புதங்களை † "பெறுப யன் மிகப்புவியு ளருளுவன பிறைமுறை பெருநெறி யளிப்பனபல் பிறவியை யொழிச்சுவன - வுறுதுய ரழிப்பனமு னுமைதிரு வருட் பெருக வுடையன நதிப்புனலி னெதிர்பசிறி யுய்த்தனபு - னறமுறு குரைச்சமணை நிரைகழு நிறுத்தியன நனிகத வடைத்தனது னரு விட மகற்றியன - துறுபொழின் மதிற்புறவ முதுபதும னெப்பரிய தொழில்பல மிகுத்ததமிழ் விரகன கவித்தொகையே." என்பதனு னும் அறிக. (கஎ)

பாட்டான் மறைபுக ழும்பிறை சூடியைப் பாடிமகி
ழூட்டா மகிழ்சொல் லிறைவனைப் பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே.

(இ-ள்.) மறை புகழும் பிறை சூடியை பாட்டால் பாடி - வேதங் கள்புகழும் பிறைசூடியவிமலரைத் தேவாரங்களாற்றுதித்து—மகிழ் ஊட்டா மகிழ் சொல் இறைவனை பாடி - திருவுளமுவப்பித்துத் தாமு ம் உவந்த வாகீசவள்ளலைப்புகழ்ந்து—உவப்பு உறுக்க வேட்டான் - அவருக்குக் களிப்பை உறுவிக்கவேண்டுமென ஆர்வமிக்கவன்,—அவ ன்போல மிதப்பன் என - அவ்வாகீசவள்ளலைப்போலவே யானும் மித ப்பேனென்று,—மலி பெருங்கல் பூட்டா விழ - மிகப்பருத்ததொரு கல்லைத் தனதுடலிற்பிணித்துக்கொண்டு வீழ்தற்கு—மறி திரை வார்

* பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திபுராணம்-கூஅச.
† திருஞானசம்பந்தர்திருக்கலம்பகம்-கூ௫.

கடற்கே போதுவன் - சுருண்டுவீசும் அலைகளையுடைய நெடியகடலுக்கே துணிந்துசெல்வன். எ-று.

இருக்காதிவேதங்கள் இறைவர்திருவாக்கினுதித்து வழிபட்டும், இன்னும் அவ்விறைவரியல்பை யாமும் அறிகிலேமெனப் புகழாநிற்பவென்பார், 'மறைபுகழும், என்றும், சோடசகலாரூபனாகியசந்திரன், தன்மனைவிய ரிருபத்தெழுவரையும் ஒப்பநாடாது, உரோகணிபால் ஆர்வமிக்கமையின், தக்கனாற் கலைகுறையச்சாபமேற்றுச், சரண்புக்கானாக; அவை வளரவும் குறையவும் வரமளித்து, எஞ்சியவோர்கலை என்றும் நிலைபெறுவான், அவனைத் தந்தலைமைநாடாது, திருமுடியிற்றரித்த திருவருட்சால்பினரென்பார், 'பிறைசூடி, என்றும், அவ்வேதங்களுமறியா விமலரியல்பனைத்தையும் சிற்றறிவினருந்தெளியுமாறு தேவாரங்களினமைத்துத் துதித்து, அவ்விமலரைத் திருவுளமுவப்பித்தவரென்பார், 'பாட்டாற்பாடிமகிழூட்டா, என்றும், தம்பாடலையேற்றுத் தலைவருவந்தமைகண்டு, தாம் சாலவுவந்தனரென்பார், 'மகிழ்' என்றும், இவ்வாகீசமூர்த்திவழிபாடு மற்றையவற்றினும் எளிது கதிபயக்கும் ஏதுவாகலின், இவரைத்துதித்து இனிதுவப்பித்தல் வேண்டுமென்பார், 'சொல்லிறைவனைப்பாடியுவப்புறுக்க, என்றும், இந்நெறி இகபரவாஞ்சை யொழிந்தவர்க்கன்றி ஏனையர்க்கெய்தாதென்பார், 'வேட்டான், என்றும், கல்விற்பிணிப்புண்டு கடலைக்கடத்தலின் வருத்தம் கண்டறிந்துள்ளாராகலின், பிறிதுதொழில்பேணாது அத்தொழிற்பேணின், உடனருள்புரிவரென உய்த்துணர்வரென்பார், 'மலிபெருங்கற்பூட்டாகடற்சேவிழ, என்றும், சிவகதியின் அருமைகண்டோர் தேகாதிப்பிரபஞ்சத்தைச் சிறிதும் குறிக்கொளாரென்பார், 'போதுவன், என்றும் கூறினர்.

இங்ஙனமியற்றியேனும் இவரருள்பெறவேண்டுமென்பது கருத்து. வேட்டால் (யான்) போதுவனென நூலாசிரியர் தம்மைச்சுட்டி நுவன்றதாக உரைப்பாருமுளர்; இதுவும் அப்பொருளிலடங்கலின்

இஃதுரையன்மையறிக. கடற்கேயென்னும் ஏகாரம் தேற்றம். மற்றையது ஈற்றசை. வேட்டான் பூட்டாக் கடற்கே போதுவன் என இயையும்.

மறைபுகழ்தலை *"நின்னுன் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும் - பன்னு ளருச்சித்தும் பாதந் தலைசுமந்து - முன்னுமம் வாசித்து முன்னையறி யேனென்று - சொன்னு லடியனேன் சோதனைத்தோ நின்னியல்பே." என்பதனுனும், பிறைசூடி யென்பதனை †"நெற்றியங் கண்ணுடை நிமலத் தெம்பிரா - னுற்றவர்க் கருள்புரி கின்ற வுண்மையைத் - தெற்றென வுணர்த்தல்போற் றிங்க ளின்கலை- கற்றையஞ் சடைமிசைக் கவின்று பூத்ததே. நின்ன தொல்கலை யைந்துமுப் பகலிடை நிரம்பிப் - பின்ன ரவ்வழி தேய்ந்துவந் தோர்கலை பிரியா - தின்ன பான்மையே நிகழுமெக் காலமு மென்றுன்-முன்னை யாவிதோ திருந்தெலா மியற்றிய முதல்வன்." என்பதனுனும், கதி பயக்கும் ஏதுவாதலை ‡"நன்று மாதர நாவினுக் கரசடி நளினம் வைத் துயினல்லா - லொன்று மாவது கண்டில முபாயமற் றுள்ளன வேண்டாமா - லென்று மாதியு மந்தமு மில்லதோ ரிகபரத் திடைப்பட்டுப் - பொன்று வார்புகுஞ் சூழலிற் புகேம்புகிற் பொறியிலைம் புலனேடே." என்பதனுனும் அறிக. (கஅ)

போதமுண்ட பிள்ளையென்பு பொருகண்மாது செய்ததோ
காதல்கொண்டு சொல்லின்மன்னர் கன்மிதப்ப வுய்த்ததோ
வாய்திறந்து முதலைகக்க மகனைநீய ழைத்ததோ
யாதுநம்பி யரிதுநன்றெ னக்கியம்ப வேண்டுமே.

(இ-ள்.) நம்பி - நம்பியாரூரவள்ளலே! - போதம் உண்ட பிள்ளை என்பு பொருகண் மாது செய்ததோ-ஞானப்பாலையருந்திய ஞானச

*திருவிளையாடல் கல்லானைக்குக்கரும்பருத்தியபடலம் உஎ.

† கந்தபுராணம் சந்திரசாபப்படலம்-சங-சே. ‡திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை-கக

ம்பந்தவள்ளல் எலும்பைப் பெண்ணாக இயற்றியதோ?—சொல்வின் மன்னர் கல் மிதப்ப காதல்கொண்டு உய்த்ததோ - திருநாவுக்கரசு வள்ளல் கல் தெப்பமாகமிதப்ப அதைக் காதலிற்செலுத்தியதோ? முதலை வாய் திறந்து கக்க மகனை நீ அழைத்ததோ - முதலை தன்வாயைத்திறந்துமிழப் புதல்வனைத் தேவரீர்மீட்டதோ?—யாது அரிது இம்முத்தொழிலுள் எத்தொழிலரிது?—நன்று எனக்கு இயம்ப வேண்டும்-தெளியச் சிறியேனுக்குத் தெரிவிக்கவேண்டும். எ-று.

பிள்ளையாரருந்தியது பாலுருவாய்த்தோன்றினும் அது ஞானமேயென்பார், 'போதமுண்ட பிள்ளை' என்றும், கவினெலாந்திரண்டுள கன்னிகையாகப் படைத்தனரென்பார், கணவரைப்பிணித்தலிற் சிறந்தகருவியாகும் கடைக்கணியல்பைக் குறிப்பித்துப், 'பொருகண் மாதுசெய்ததோ' என்றும்,அமணர்கள் பிணித்தகல்லே அஞ்செழுத்துண்மையாற் பாசமகன்றமையிற் றெப்பமாகமிதப்ப, அதனை வருணனும் தாங்கலின் மனமகிழ்ச்சியிற்செலுத்தினரென்பார், 'கன்மிதப்பக்காதல்கொண்டுய்த்ததோ' என்றும்,உண்டமதலையை உருச்சிதைவின்றி உடனுமிழ்தலும் முதலைக்கியலாதாக, அதுவே, சின்னாட்சென்றபின், சென்றவாண்டுகட்குரிய வளர்ச்சிநிரம்பிய மதலையாகவுமிழ, அழைத்தனரென்பார், 'முதலைகக்கமகனைநீயழைத்ததோ, என்றும், இம்முச்செயலுஞ் செயற்கருஞ் செயலேயாயினும், கன்னிகையாக்குதற்கென்பும் மிதத்தற்குக்கல்லும் ஆதாரமாயிருக்க, மகனையழைத்தற்கு அஃதில்லையாகவும், பாடலொன்றுன் அஃதுளதாக்கி,அழைத்தமையின் அவற்றினும் இஃதற்புதமுடைத்தென்பார், 'யாதுஅரிது, என்றும், இவை தேவரகசியமாகலின் யானே சிந்தித்துணர வல்லனே தேவரீரே செவ்விதிற் றெருட்டியருளவேண்டுமென்பார்,'நன்று எனக்கு அரிது இயம்பவேண்டும், என்றும் கூறினர்.

பொருதல் - காதளவுசென்றுதாக்கல். மாதென்பது அழகுடைமையிற்போந்தபெயர். கொண்டு மூன்றும்வேற்றுமைச் சொல்லுருபு.

வாய்திறந்தென வேண்டாதுகூறினர்; உமிழ்தற்கரியசேயை உமிழ்ந் தமையுணர்த்தற்கு. ஓகாரங்கள்மூன்றும் வினப்பொருளவேனும் இறு தியது பிரிநிலையின்மேற்று.

போதமுண்டபிள்ளையென்பதனை * ஆனதன்மையி னத்திருப் பாட்டினி னடைவே-போன வாயுவும் வடிவமும் பொலிவொடு நிர ம்பி - யேனை யக்குடத் தடங்கிமுன் னிருந்தெழு வதன்முன்-ஞான போனகர் பின்சமண் பாட்டினை நவில்வார்'என்பதனானும், வருணனு ம்தாங்கியதை † "அருணயந் தஞ்செழுத் தேத்தப் பெற்றவக் - கரு ணைநா வரசினைத் திரைக்க ரங்களாற்-றெருணெறி நீர்மையிற் சிர த்திற் றாங்கிட - வருணனுஞ் செய்தனன் முன்பு மாதவம்," என்ப தனானும், ஆதாரமுளதாக்கி மகனையழைத்ததை ‡ "வறந்திடு பொய் கைமுன் னிரம்ப மற்றவ - னுறைந்திடு முதலைவந் துதிப்ப வன் னதா- லிறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன் - றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்." என்பதனானும் அறிக. (கசு)

வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு
மருள்செய் சிவனே யலந்தே னந்தோ
முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்த
னருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டும்
நீயே கோட னின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்

---

* பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திபுராணம்-௪0௧0.
† ஷை யில் வாகீசமூர்த்திபுராணம்-௪௩0.
‡ கந்தபுராணம் கடவுள்வாழ்த்து-௨௨.

பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே.

(இ-ள்.) இள ஏறு உகந்து ஏறியை பரிமாமிசை வர பண்ணிய வித்தக - இளமைவாய்ந்த இடபத்தை விரும்பியிவர்ந்த இறைவரைப் புரவிமீதெழுந்தருளப்புரிந்த வித்தகரே!—பெருந்துறை இடத்து பெருஞ்சீர் குருந்து உறு நீழலில் - திருப்பெருந்துறையென்னும்தலத்திலே மிக்கமேன்மையுடைய குருந்தமரத்தின் விரிந்தநீழலில்—திருந்திய வேதசிரம் பொருள் முழுதும்-திருத்தமுற்ற வேதமுடிவிற்செறிந்த சைவசித்தாந்தப்பொருண்முற்றும்—கொள்ளை கொள்வோயே-சிவபெருமான்பக்கற்பெற்ற திருவாதவூரண்ணலே!—சிவனே நின் அடியார் மெய்யன்பு எனக்கும் வேண்டும்-சிவனே! உம்முடையதிருத்தொண்டர்களின் உண்மையன்பு எனக்கும் உரித்தாகவேண்டும்;—அருள்செய் அலந்தேன் - அருள்செய்வீர்; இதில் ஆவல்மிகுந்தேன்;-அந்தோ முறையோ முறையோ இறையோனே என்று அழுது - அந்தோ! (அருள்பாலியாமை) முறைமையோ! முறைமையோ! முதல்வனே!என்றுபுலம்பி,—செம்பொன் அம்பலம் கூத்தன் அருளால் பெற்ற அன்பினில்-செவ்விய கனகசபையில் நடித்தருளும் சிவபெருமானருளாற்பெற்றஅன்பிலே, - அடியனேற்கும் ஒருசிறிது அளித்தல் வேண்டும்-அடியேனுக்கும் மிகச்சிறிது தந்தருளல்வேண்டும்:—நீயே கோடல் நின் அருட்பெருக்கிற்கு ஏற்றது அன்று-முற்றும் தேவரீரேகொள்ளுதல் உமது கிருபைமிகுதிக்கு முறைமையன்று. எ-று.

தருமதேவதையை இடபமாகவுடைய தம்பிரானாரை அதனது தாயென்றுபசரிக்கப்படும் வேதப்பரியிலிவர்வித்த வித்தகரென்பார், 'இளவேறுகந்தேறியைப்பரிமாமிசைவரப்பண்ணியவித்தக' என்றும்,

பிறவிக்கடலைக்கடக்குந் துறையென்பார், 'பெருந்துறை' என்றும், தவச்சினைகணெருங்க, அறக்குழைதழைத்து, மெய்ம்மைபூத்து, விளங்குவதென்பார், 'பெருஞ்சீர்க்குருந்து, என்றும், சார்ந்தார்க்கு ஆதிபௌதிகமுதலிய தாபத்திரயங்களைத் தவிர்ப்பதென்பார், 'உறுநீழல்' என்றும், வேதமுடிவிற்செறிந்த சித்தாந்தப்பொருள்களே திருத்தமுடையன; ஏனையவைபிணக்குடையனவென்பார், 'திருந்தியவேதசிரப்பொருள், என்றும், அவைமுற்றும் ஒருங்குபெற்றவரென்பார், 'முழுதுங்கொள்ளைகொள்வோய், என்றும், * "மெய்கலந்த வன்பரன் பெனக்குமாக வேண்டுமே" எனவும் † "அலந்துபோனே னருள்செய்யாய்" எனவும் ‡ "அந்தோ வலறிடே னுலறிடே னுவிசோரேன் முனைவனே முறையோ" எனவும் இங்ஙனம் ஒருகாலன்றி ஆங்காங்கும் மிகப்பல காலழுதவரென்பார், 'இறையோனேயென்றழூது' என்றும், பஞ்சகிர்த்தியநடம் புரிந்தருள்பரமராகலின் அவரால்அநுக்கிரகிக்கப்பெற்றனரென்பார், 'செம்பொனம்பலக்கூத்தனருளாற்பெற்ற, என்றும், பெற்றது எல்லையிறந்த அன்பென்பார், 'அன்பினில்' என்றும், அற்ப நல்கினும் அதுகொண்டுய்வேனென்பார், 'ஒருசிறிது' என்றும், பரிபாகியல்லாதயானும் உமது சந்நிதிவிசேடத்தால் பரிபாகியேயென்பார், 'அடியனேற்கும், என்றும், மெய்த்தொண்டர்க்குரிய மெய்யன்பு எனக்கும்வேண்டுமென்றழுது, சிவன்பாற் பெற்றீராகலின், அங்ஙனமே வேண்டுமெனக்கும், சிறிதளிப்பதேமுறைமையென்பார் 'அருளல்வேண்டும், என்றும், தக்காரையும் தகாரையும் ஒப்பப்புரக்கும் அருளின்முதிர்ந்து, உலகினர்க்கிருளோட்டி உண்மைவிளக்குவான், ஞானுதித்தனுகவுதித்த தேவரீர், நல்காதுகோடல், தகுதியன்றென்பார், 'நீயேகோடனின்னருட்பெருக்கிற்கேற்றதன்று, என்றும் கூறினர்.

கூறவே, × "அன்பு மருளு மறிவுக் கடையாள-மென்பருணர்ந் தோர்சிவன்வாக் கீண்டு." என்றபடி o "கற்று மனமெனக் கதறியும்

* திருவாசகம் திருச்சதகம்-எந. † ஷை பிரார்த்தனைப்பத்து-க. ‡ ஷை திருச்சதகம்-உஉ
× சைவசமயநெறி பொதுவிலக்கணம்-சஉஅ. o திருவாசகம் போற்றித்திருவகவல்.

பதறியு - மற்ருேர் தெய்வங் கனவினு நினையா - தருபரத் தொருவ னவனியில் வந்து - குருபர ஞகி யருளிய பெருமையைச் - சிறுமை யென் றிகழாதே திருவடி யிணையைப் - பிறிவினை யறியா நிழலது போல - முன்பின் ஞகி முனியா தத்திசை - யென்புநைந் துருகி நெ க்குநெக் கேங்கி - யன்பெனு மாறு கரையது புரள-நன்புல ஞென் றி நாதவென் றரற்றி - யுரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக் - கரம லர் மொட்டித் திரதய மலரக் - கண்களி கூர நுண்டுளி யரும்பச் - சாயா வன்பினை நாடொறுந் தழை" த்தலுடைமையும், அதை அனை வர்க்கும் பாலிக்கும் அருட்டிறமுடைமையும் ஒருங்கியைந்தமை,அறி வித்தவாருயிற்று.உம்மைகளிரண்டும் இழிவுசிறப்பு. ஓகாரங்களிரண் டும் முறைப்பாட்டில்வந்தன. பரிமா இருபெயரொட்டு. வித்தகமென் பது விசித்திரத்தையும் அறிவையுஞ் சுட்டி இரட்டுறமொழிதலாய் நின்றது. நீயேயென்னும் ஏகாரம் பிரிநிலை. மற்றையது அசை. திருந் தியகொள்வோயென வினையெச்சமுடிபாக்கலும் ஒன்று.

வேதம் தருமதேவதைக்குத்தாயாதலை * "சதுர்மறையிடத்திற் ருேன்றுந் தருமதேவதை" என்பதனுனும், வேதப்பரியிவர்ந்ததை † "அண்ட கோடிக ளனைத்துமோர் பிண்டமா வடுக்கி-யுண்ட நீரதா முதுகின்மேலுபநிடக் கலனை-கொண்ட வாலிய வைதிகப்புரவிமேற் கொண்டான்-ருண்டர் பாசவன் ருெடரவிழ்த் திடவருஞ் சோதி" என்பதனுனும், பிறவிக்கடலைக்கடக்குந்துறையாதலை ‡ வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்க ளெல்லா-நம்புசிவ நாமமெனு நற்புணை பிடி த்தா-லெம்பர னருட்கரையி லேறுதுறை யாமா - லம்புவி மொழிந் திள பெருந்துறை யதன்பேர்." என்பதனுனும், குருந்து தவச்சினை முதலியவுடைமையை ○ "வாய்த்தவள மிவ்வகை வயங்குமத னுப்ப-

*திருவாவடுதுறைப்புராணம் தருமதேவதைக்கிடபவாகனப்பேறருளியவத்தியாயம்-௧.
† திருவிளையாடல் நரிபரியாக்கியபடலம்-௧௬. ‡ திருவாதவூரர்புராணம் திருப்பெருந் துறைச்சருக்கம்-௧0. ○ ஷை-௧௫.

ணைத்தரு தவச்சினைக ளெங்கணு நெருங்க-மீத்திகழறக்குழை தழைத்துமிளிர் மெய்ம்மை - பூத்தறிஞர் போன்றெழில் பொருந்துமொர் குருந்தம்.” என்பதனானும், வேதசிரப்பொருள் சைவசித்தாந்தப்பொருளாதலை *“வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க - ளாதிநூ லநாதியம லன்றருநூலிரண்டு மாரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலா - நீதியினாலுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத் - தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.” என்பதனானும், சந்நிதிவிசேடத்தாற் பரிபாகமெய்துதலை † “கருட னுருவங் கருதுமளவிற்-பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோற்-குருவி னுருவங் குறித்தவப் போதே - திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே.” என்பதனானும், ஞானாதித்தனாகவுதித்தமையை ‡பொய்ம்மையா முலகின் மாயப் பொங்கிரு ளகல வன்னோர்-தம்மையாழ் நரகிற் றள்ளுஞ் சமயதா ரகைமழுங்க-வெம்மையா னுடையா னன்பரிதயதா மரைக ளெல்லாஞ்-செம்மையாய் மலர ஞான தினகர ருதயஞ்செய்தார்.” என்பதனானும் அறிக. (௨௦)

கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தா—வெள்ளமிடு
மேடேறப் பால்குறைந்த தென்றழுவ ரேகழுவின்
காடேறப் புக்கவரு கர்.

(இ - ள்.) கொள்ளை கொள்ள வீடு உதவி - எவரும்கைக்கொள்வான் முத்தியையீந்து,—கூற்றை பிடர் பிடித்து தள்ளும் திருஞான சம்பந்தா - இயமனை எய்தாதகற்றிய திருஞானசம்பந்தவள்ளலே!—

* சிவஞானசித்தி எட்டாஞ்சூத்திரம்-கரு.

† திருமந்திரம் ஞானகுருதரிசனம்-ச. ‡ திருவாதவூரர்புராணம் மந்திரிச்சருக்கம்-௯.

கழுவின் காடு ஏற புக்க அருகர் - கழுக்கூட்டத்தில் இவரத்துணிந்த அமணர்கள்,—வெள்ளம் இடும் ஏடு ஏற - வைகைநதிப்பெருக்கிலிட்ட "வாழ்கவந்தணர்" என்னும் திருப்பாசுரத்திருப்பதிகம் வரைந்த ஏடு எதிரேறிச்செல்லக் (கண்டு),—பால் குறைந்தது என்று அழுவரே-தம்பக்கங் குறைந்ததென்று அழத்தக்கவரே. எ-று.

இவ்வியல்பினரென்னும் வரையறையின்றிப்புக்க எண்ணிறந்தவர்பெறவென்பார், 'கொள்ளைகொள்ள, என்றும், பாலித்தது பதமுத்தியன்று; பற்றகன்றபரமுத்தியேயென்பார், 'வீடுதவி, என்றும், அது பெற்றோர் இரும்புண்டநீரிற்றிரும்பாமையின் இயமனை அவர்மாட்டு என்றும் எய்தாதவனுக்கினரென்பார், 'கூற்றைப்பிடர்பிடித்துத்தள்ளும், என்றும், எவரையும் ஞானசம்பந்தராகச் செய்தவரென்பார், 'திருஞானசம்பந்தா' என்றும், வேகவதியென்பதற்கிணங்கப் பெருகிவிரையும் வைகையில் இட்டவேடு, சிவபெருமானே பரம்பொருளெனத்தெளிய, எதிரேறிச்சென்றதென்பார்,'வெள்ளமிடுமேடேற,என்றும், தீயிற்றேல்வியுற்றும் செய்வகைபறிந்துய்யாச் சிதட்ராகலின், அவர் ஏடேறப் பால்குறையுமென்பது முணராது,முயலத்தகாத அதின்முயன்று,அழத்தக்கவரேயென்பார்,'பால்குறைந்ததென்றழுவரே' என்றும், எண்பெருங்குன்றத்து எண்ணாயிரவரும் அவர்மாணாக்கரும் ஏறுதற்குத்தொகுத்த எண்ணிலாக்கழுமரங்களென்பார், 'கழுவின் காடு, என்றும், * "இன்ன மறத்தா றிசைக்கின்றே னீரேன் வாளாவிறக்கின்றீர் - அன்னை யனையா னெம்மிறைவ னவனுக் காளா யுய்மின்கள்." என்று பிள்ளையாரருளவும், இழித்து, வலிந்தேறிய வன்மையரென்பார், 'ஏறப்புக்க, என்றும், திருத்தொண்டர் திருமடத்திற் றீயிட்ட இவர்க்கிது தகுமெனப் பின்விலக்காமையின் அத்தண்டனைக் குரியவரேயென்பார், 'அருகர், என்றும் கூறினர்.

---

* திருவிளையாடல் சமணரைக்கழுவேற்றியபடலம்-இகூ.

இதனாற்போந்தது: பிள்ளையாரைவழிபடும் பெருந்தவமிலாத அறிவிலிகள் பலசிந்தையராய், இயலாதனவியலுமென முயலாதன வற்றின் முயன்று, மோகத்தழுந்திப், பிறவியினுழலாநிற்பர்; அறிவுடையார் அங்ஙனமாகாது, *"பாரகலத் துன்பங் கடந்தமர ராற்பணியு - மேரகலம் பெற்றானு மின்னாதாற்—காரகிலின் - றாமங் கமழ்மாடத் தோணி புரத்தலைவ - னாமஞ் செவிக்கிசையா நாள்.,, என்னுந்துணிவுடையராய் வழிபட்டுய்யாநிற்பரென்பது.

பிடர்பிடித்துத்தள்ளுதலென்பது அணுகாதகற்றலென்னும்பொருட்டாய் உலகவழக்குப்பற்றிவந்தது. ஏடேறப்பால்குறைந்ததென்பதும் அருகரென்பதும் † சிலிஷ்டமாய்நின்றன. பால் ஈண்டுத் தங்கொள்கை.எகாரம் தேற்றம்.எண்பெருங்குன்றங்களாவன அஞ்சனம் கவுஞ்சம் கோவர்த்தனம் திரிகூடம் காஞ்சி குஞ்சரசையம் ஏமகூடம் விந்தமென்பன; இவை சமண்குரவருறையும் தானங்கள்.

வீடுபெற்றோரெண்ணிறந்தவரென்பதனை ‡"அணிமுத்தின் சிவிகைமுத லணிதாங்கிச் சென்றோர்கண் - மணிமுத்த மாலைபுனை மடவார்மங் கலம்பெருகும் - பணிமுற்று மெடுத்தார்கள் பரிசனங்கள் விளைப்பாசந் - துணிவித்த வுணர்வினராய்த் தொழுதுடன்புக் கொடுங்கினர். ஆறுவகைச் சமயத்தி லருந்தவரு மடியவருங் - கூறுமறை முனிவர்களுங் கும்பிடவந் தணைந்தாரும் - வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தாரு - மீறில்பெருஞ் சோதியினு ளெல்லாரும் புக்கதற்பின்." என்பதனானும், வழிபடுவோர் எத்துணைத்தீமையராயினும் அவர்மாட்டும் இயமனணுகாமையை o "கடலன்ன பொய்ம்மைகள் செய்யினும் வெய்ய கடுநரகத் - திடநம னேவுதற் கெவ்விடத் தானிருஞ் செந்தமிழாற் - றிடமன்னு மாமதிற் சண்பைத் தலைவன்செந் தாம

* திருஞானசம்பந்தர்திருவந்தாதி-கoக. † சிலிஷ்டம்-இருபொருட்பதம்.
‡ பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திபுராணம்-கஉகஉ-கஉகூ.
o ஷை அந்தாதி-உக.

ரையின்-வடமன்னு நீண்முடி யானடிப் போதவை வாழ்த்தினமே.” என்பதனுனும், அறிவிலிகள் வீண்முயல்வுடையராவ ரென்பதனை *“இபலா தனபல சிந்தைய ராயிய லுங்கொலென்று-முயலா தனவே முயன்றுவன் மோகச் சுழியழுந்திச் - செயலார் வரைமதிற் காழியர் கோன்றிரு நாமங்களுக்-கயலா ரெனப்பல காலங்கள் போக்குவ ரா தர்களே.” என்பதனுனும், சிவபெருமானே பரம்பொருளெனத் தெ ளிவித்தமையை † “பொருப்பே சிலையாப் புரங்கடந்த புனித னே யெத் தேவர்க்கும் - விருப்பேய் போகம் வீடுதரு மேலாங் கடவு ளெ னநான்கு - மருப்பேய் களிற்றுன் முடிதகர்த்தான் மருமா னறியக் குருமொழிபோ - னெருப்பே யன்றி வேகவதி நீரும் பின்னர்த் தே ற்றியதால்.” என்பதனுனும் அறிக. (உக)

அருகக் கடல்கடந் தேறிய தோசிலை யம்பியெனப்
பெருகக் கடல்கடந் தேறிய தோசொல் பெருமிடறு
கருகக் கடல்விட முண்டோ னடியிற் கசிந்துமன
முருகக் கடலன்பு பெற்றசொல் வேந்த வுனக்கரிதே.

(இ-ள்.) கடல் விடம் பெரு மிடறு கருக உண்டோன் அடி யில் - பாற்கடலினுதித்தநஞ்சத்தைப் பருத்தகண்டம் கறுக்கப்பருகிய பரமருடைய திருவடிகளில்—மனம் கசிந்து உருக கடல் அன்பு பெ ற்ற சொல்வேந்த - மனம் உருகிக்கசியக் கடல்போலும் அன்பைப் பெற்ற வாகீசமூர்த்தியே!—அருகக் கடல் கடந்து ஏறியதோ - சம ணக்கடலைநீந்திச் சைவமென்னுங்கரையில் இவர்ந்ததோ?—சிலை அம்பி என பெருகு அக்கடல் கடந்து ஏறியதோ - கல் தெப்பமாக மிதப்பக்கொண்டு பெருகிய அக்கடலைநீந்திக் கரையேறியதோ?— உனக்கு அரிதுசொல்-தேவரீருக்கு அரியதுயாதுசெப்புவீராக?எ-று.

* ௯௪௯௫. † ௯௪சமணரைக்கழுவேற்றியபடலம்-௬௫,

அச்சுதனாதியர் அமரரருட்பேறின்றிச்சென்று பாற்கடல்கடைந்தழி அதினின்றும் அந்தகாரவடிவாய் ஆலகாலந்தோன்றி அவனி முற்றும் நீளுகப்பரவி அனலிற்சீறி வருதல்கண்டஞ்சித், திருக்கைலயிற் சரண்புக்காராக; திருவுளமிரங்கி அதைப்பருகி அவர்பிரார்த்தனைப்படி கண்டத்துஇருவிய கருணையாளரென்பார், 'பெருமிடறுகருகக்கடல்விடமுண்டோன்' என்றும், அவர் திருவடிகளில் ஒப்பிகந்த உழுவலன்புடையரென்பார், 'கடலன்பு' என்றும், காட்சியான் அளவுகாணப்படுதலின்மையும், கருநிறமுடைமையும், கண்டார்க்கு அச்சம்பயத்தலும், தாகமுற்றுச்சார்ந்தார்க்குப் பயன்படாமையும், தீநாற்றமுடைமையும்,பிறவும் செறிந்திருத்தலின், கடலைநிகர்ப்பவரென்பார் 'அருகக்கடல்' என்றும், நீற்றறையிலிடுவித்தல் நஞ்சூட்டுவித்தல் யானையாலிடறுவித்தல் கல்லிற்பிணித்துக்கடலிலிடுவித்தல்முதலிய கடுந்தொழிலுடைய அவ்வருகக்கடலை,அருட்பெருக்கமும் வாக்கின்முதிர்வுமின்றிக் கடந்தமை அரிதன்றி, இவ்வியல்பின இடுக்கண்புரிதலில்லாத இக்கடலை, அருட்பெருக்கமும் வாக்கின்முதிர்வுங்கொண்டு கடந்தமை, அரிதன்றென்பார், 'உனக்கரிதுசொல்' என்றும் கூறினர்.

அற்றேல்,உழுவலன்புடையராயின் சமண்சமயம்சாராராகலின் கடலன்பு பின்னர்ப்பெற்றதாதல்வேண்டும்: அங்ஙனமாக, இவர்பாலது உழுவலன்பென்பது எங்ஙனம்பிறவெனின்,—நன்றுகடாயினாய்! சமணாதிகளைக்களைந்து சைவத்தைநாட்டுவானவதரித்த இவ்வாசிரியர் உலகநிலையாமைகண்டு, அறங்கள்செய்வாராயொழுகுங்கால், சாதனங்களுள் நீறுசிறந்தாங்குத் தவங்களுட் கொல்லாமை சிறந்ததாகலின்,அதுவே சிவகதிக்குரியநெறியெனத்தேர்ந்து, ஆய்ந்தவழி, சமண்சமயிகள்நடிப்பால் அது அச்சமயத்தின் மிக்குளதாகத்தோன்ற, அமலரும் அதனையழிப்பிப்பான் அதிற்பிரவேசிப்பிக்குந்திருவுளத்தால் உண்மைநெறியின்னதென் றுணர்த்தியருளாமையின்,அதிற்புக்கு, அதற்குரியவிஞ்சைகளிற் பயின்றாரேனும், அதனுண்மையுணர்தற்க

ன்றி, உள்ளபடி பிரவேசித்தவரன்றாகலின், மானசிகமாகச் சிவபெருமானை வழிபட்டுவந்தாரென்பது, * ''ஏற்றாயடிக்கே யிரவும்பகலும் பிரியாதுவணங் குவனெப்பொழுதும்'' எனவும், ''நெஞ்சம்முமக்கே யிடமாகவைத்தே னினையாதொருபோ துமிருந்தறியேன்'' எனவும் ''சலம்பூவொடுதூ பமறந்தறியேன் றமிழோ டிசைபா டன்மறந்தறியே - னலந்தீங்கினுமுன் னைமறந்தறியே னுன்னாமமென்னா வின் மறந்தறியேன்'' எனவும், இவரருளிய திருவாக்குக்களான் வெளிப்படுதலின் உழுவலன்புடையரேயென்க.

அற்றேல், கொடிய குடர்நோயணுகியவழி இச்சிவோபாசனையிருந்தும், அச்சமண்சமயவிச்சைகளான் அகற்றமுயன்றதென்னையெனின், அவற்றிற்பழகித் தேர்ச்சியுற்றுச் சிலசித்திபெற்றமையின் இவ்விச்சையின் இதுவும் அகலுங்கொலென எண்ணிமுயன்றாரென்பது. இன்னோரன்ன ஆசங்கைகள் எழாமைப்பொருட்டுப் பெரியபுராணத்தில் ஆங்காங்குக் குறிப்பித்திருத்தலின் ஆய்ந்துய்த்துணர்க. விரிக்கிற் பெருகும். வினாப்பொருள்பயக்கும் ஓகாரமிரண்டும், முறையே உயர்த்தற்கண்ணும் இழித்தற்கண்ணும்வந்தன. அகரச்சுட்டும் இழித்தற்பொருட்டு. கசிந்துஉருகவென்பன முன்பின்னாகப்புணர்ந்த எச்சத்திரிபுகள். ஒப்பிகந்த அன்புக்கு ஒருபுடை ஒப்புக்கூறினமையின் கடல் ஒப்பலொப்பாய் நின்றது. ஏ-அசை.

விடம் அந்தகாரவடிவாய்ச்சிறியனாக அதைக் கண்டத்திருவியதை † ''ஈற்றுக் கோடியி னெழுமுகிற் கோடியி னிருண்டு - கூற்றுக் கோடியின் மறங்கொடு திசைதொறுங் குலவும் - காற்றுக் கோடியின் விரைவினால் வடவையங் கடுந்தீ - நூற்றுக் கோடியிற் பரந்ததவ் விடமெலா நொய்தின். முடிவிலா வுனக்கே யன்றோ முன்னுறு பாகமெல்லாம்-விடமதே யெனினு மாக வேண்டுது மிதனை வல்லே-யடி

* தேவாரம் திருவதிகைவீரட்டானம். கூற்றாயினவாறு.

† கந்தபுராணம்ததீசியுத்தரப்படலம் ௬௨அ. ௩௭அ.

யரே முய்யு மாற்ற லருந்திணை யருண்மோ வென்னக்-கடிகம ழிதழி வேய்ந்தோன் கலங்கலீ ரினிநீ ரென்றான். என்றனன் விரைவிற் றன்கை யேந்திய விடமுட் கொள்ளச் - சென்றது மிடற்றி லன்ன திறத்தினை யாரு நோக்கி-யின்றெம துயிர்நீ காத்தற் கிங்கிது சான்ற யங்க-ணின்றிட வருடி யென்றே நிமலனைப் போற்ற லுற்றார்.'' என வருவனவற்றானுணர்க. (உஉ)

உனற்க ரும்புகழ் மேவிய சுந்தர னும்பன் மீதிவரா
நினைப்ப ருங்கயி லாயம டைந்தமை நின்று காண்குறவே
யெனக்கு வந்துறு மோமக வென்றழு கின்ற நாளலைபா
றனித்த ருந்துபு மாலை யுமிழ்ந்திடு தம்பி ரானலனே.

(இ-ள்.) உனற்கு அரும்புகழ் மேவிய சுந்தரன் உம்பல்மீது இவரா - சிந்தித்தற்கரிய சீர்த்திபடைத்த சுந்தரமூர்த்திநாயனார் வெள்ளை யானைமேலெழுந்தருளி—நினைப்பு அரும் கயிலாயம் அடைந்தமை நின்று காண்குற-எண்ணுதற்கரிய திருக்கைலையினெய்தியதை எதிர் நின்றுதரிசித்தற்கு—மகவு என்று அழுகின்ற நாள் - குழந்தையெனக்கூறுமாறுவிளங்கி அழுத அப்பருவத்திலேயே—பால் அலை தனித்து அருந்துபு மாலை உமிழ்ந்திடு - பாற்கடலைத் தனித்துப்பருகி அதின்மிதந்தணுகிய திருமாலை ஆங்குமிழ்ந்த—தம்பிரான் நலன் எனக்கு வந்து உறுமோ - உபமன்னியமுனிவர்பாலுற்ற உயர்ந்தசிவானுக்கிரகம் எளியேனுக்குவந் தெய்துமோ! எ-று.

திருக்கைலையிற் பெருமான் தந்திருவுருப்பொலிவை அடியினோக்க, அதிற்பிரதிவிம்பித்துத் தோன்றினவராய்ப், பாற்கடலினுதித்த நஞ்சத்தைக்கொணர்ந்து பரமர்கரத்தீந்தமையின், ஆலாலசுந்தரரெனப் பெயர்பெற்ற அவ்வவதாரத்தும், இவ்வவதாரத்தும், அளவிறந்த அற்புதப்புகழுடையரென்பார், 'உனற்கரும்புகழ்மேவியசுந்தரன்,என்றும்,அவனிமுற்றும் அழியுங்காலத்தும்மேருவாதியபோலழிதலின்றி

அண்டத்தினடிமுடிகாறும் நிலைபேறுடையதாய், விமலர்வீற்றிருக்கப்பெற்று, எவர்க்கும் விழையும் இஷ்டசித்திகளையீந்து விளங்கலின், சிவநேசர்க்கன்றி மற்றையர்க்குமனத்தினும்சிந்தித்தற்கரிதென்பார், 'நினைப்பரும்' என்றும், திருமாலாதியர் சேவித்துவரத், துணைவர்முற்செல்ல, வெள்ளையானையிவிவர்ந்துசெல்லும்வித்தகக்காட்சியாகலின், இதுஏனைக்காட்சிபோல்வதன்றென்பார், 'கயிலாயமடைந்தமைகாண்குற' என்றும், உபமன்னியமுனிவர் சிறுவர்போற்றோன்றினும், சிறுவரன்று, தேவசித்தரென்பார், 'மகவென்று' என்றும், இவர் தந்தாயுடனுதித்த வசிட்டமுனிவராச்சிரமத்தே காமதேனுவின்பாலைநுகர்ந்து சுவைகண்டாராய், அன்னைபாலணுகிப் பால்வேண்டியழுதலும், அவர் வறுமையிற்கவன்று, மாவைக்கரைத்தளித்து உரைத்தவாறு, அம்பிகாபதியை வழிபட்டுப், பெற்ற பாற்கடலைப் பருகுங்கால், அதினடைந்த அச்சுதமூர்த்தியைத் துரும்புபோன்றுமிழும் ஆற்றல், அழும்பருவத்திலேயே அமைந்தவரென்பார், 'அழுகின்றநாளைபாறனித்தருந்துபுமாலையுமிழ்ந்திடு, என்றும், பாற்கடலையேயன்றி இறவாப்பதத்தை இறைவியாலும், பாசுபதஞானவிரதயோகங்களையும், ஆகமங்களைவகுத்துமொழிந்தருளும் ஆசிரியத்தலைமையையும், இறைவராலுமெய்திக், கண்ணபிரானுக்கும் திருவடிதீக்ஷைபுரிந்து, திருக்கையிலையினடியிற், பல்லாயிரமுனிவர்களும் சுத்தயோகிகளும் சூழவீற்றிருக்கும் தலைமைபெற்றவரென்பார், 'தம்பிரான்' என்றும், இத்துணைச்சிவானுக்கிரகம் அவர்க்கிருந்தமையின், ஆயிரஞாயிறுபோன்றொளிதிகழ இவ்வாளுடையநம்பிகளெழுந்தருளுங்கால் ஐயுற்ற முனிவராதியர்க்கு, *"தம்பிரானைத்தன்னுள்ளந்தழீஇயவ - னம்பியாரூரனுந்தொழுந்தன்மையான்" எனச்செவியறிவுறுத்து, எதிர்சென்று தரிசிக்கப்பெற்றார்; அங்ஙனமே, ஆவலுற்றயானும் தரிசித்தற்கு அவர்பெற்றசிவானுக்கிரகம் வந்தணுகுங்கொலென்பார், 'நலனெனக்குவந்துறுமோ, என்றும் கூறினர்.

---

* பெரியபுராணம் திருமலைச்சிறப்பு-கக.

காண்குற நலன் உறுமோவென இயையும். உறின், எக்காலத்தேனும் அரிது தரிசிக்கப்பெறலாமென்ப திசையெச்சம். ஏ-அசைகள். ஓ - எதிர்மறை. என்று எச்சத்திரிபு.அலே சினையாகுபெயர். தனித்தருந்துபு என்பது அருந்துதற்கருமைதோன்றநின்றது, தம்பிரான் அலனெனக் கண்ணழித்துரைப்பாருமுளர்; அது நலவலிவாதலூரென முன்னர்த்தொடங்கும் அந்தாதித்தொடக்கு இயைபின்மைமேலும் போதப் பொருட்பொலிவின்மையும் தெளிக.

தேவசித்தராதல்முதலியவற்றை * "உலகில் வாழுஞ் சிறுவரைப்போற் சிறுவ ேைமற் றிவேனுங்கி - நிலவு வானி லுறைசித்தனிலவு மந்த வானீங்கி - யலகி றவத்து வியாக்கிரபா தனுக்கு மகவாயடைந்தனனற் - கலேவெண் டிங்கண் முடித்தசடைக் கண்மூன்றுடையோ னருளினல்." எனவும், "பணிந்த வவனே யுழைக்கூவியுச்சி மோந்து பரமேட்டி - பிணங்கு விழிமா தினைநோக்கி யுன்றன் பிள்ளை யிவனென்ன - வணங்கு மருங்குன் மற்றவளு மலர்க்கை யவன்றன் றலேமேல்வைத்-துணங்கி யிறவாப் பதந்தன்னே யடைகி யென்ன வுதவினளால்." எனவும், "அரன்றன் பாசு பதஞானம் விரதம் யோக மழிவின்றித் - திருந்தி விரிந்த சங்கிதையா கமங்கள் செய்யுஞ் செயல்கொடுத்து-விரிந்த வானத் துறையமரர் முனிவர் விழைந்து போற்றிசைப்பப் - பொருந்தி யடைந்தான் வடகயிலேப் பொன்னஞ் சார லெனப்புகன்றான்." எனவும் வருவனவற்றானும், பாற்கடல்பருகித் திருவடிதீக்ஷை செய்தமையை † "அத்தர் தந்த வருட்பாற்கட லுண்டு-சித்த மார்ந்து தெவிட்டி வளர்ந்தவன்." எனவும், "யாத வன்றுவ ரைக்கிறை யாகிய-மாத வன்முடி மேலடி வைத்தவன்." எனவும் வருவனவற்றானும் அறிக. (உரு)

---

* வாயுசங்கிதை உபமன்னியுவின்பேறுரைத்தவத்தியாயம்-உ.கக-கரு

† ஷ்ை திருமலேச்சிறப்பு-கடு-கச.

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
னொருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னொன்று விழிப்பி னெரியு
மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வெண்பணி வானே.

(இ-ள்.) நலம் மலி வாதவூர் நல் இசை புலவ-வளநிரம்பிய திருவாதவூரிலவதரித்த செவ்வியசீர்த்திபெற்ற புலமையுடையவரே;—மனம் நின்று உருக்கும் மதுரம் வாசக - (உன்னுந்தோறும்) உளத்தினிலவி அதையுருக்கும் இனியதிருவாசகத்தை இசைத்தருளியவரே! கலங்குறு புலன் நெறி விலங்குறு வீர - நிலைதவறுதற்கேதுவாகும் ஐம்புலநெறிகளினீங்கிய ஆண்மையையுடையவரே!—திங்கள் வார் சடை தெய்வநாயகன்-சிறுமதிமிலைந்த நெடுஞ்சடையையுடைய தேவாதிபர்,—ஒரு கலையேனும் உணரான்-வேதமுதலியகலைகளுள் ஒன்றும் உணரார்;—அதான்று கைகளோ முறி படும் கைகள்-அதுவன்றித், திருக்கரங்களோவெனின், முறிபடுந்திறத்தவாம்;—கண்களோ காணின்-திருக்கண்களோவெனில்,தேர்ந்துணரின்,—ஒன்று காலையில் காணும்-ஒன்று காலையிற்றோன்றும்;—மாலையில் ஒன்று வயங்கி

தோன்றும்-மற்றொன்றுமாலையில்விளங்கும்;—பழிப்பின் ஒன்றுவிழிப்பின் எரியும்-பழிப்பினையுடைய பிறிதொன்று விழித்தவழி அப்பார்வையிற்பட்டவை நீறாகும்;—ஆயினும் தன்னை நீ புகழ்ந்து உரைத்த-இங்ஙனமிருப்பினும், தம்மைத் தேவரீர் புகழ்ந்திசைத்த,— பழுது இல் செய்யுள் - பழுதற்றதிருப்பாடல்களை—இகழ்ச்சி அறியா என்பு அணிவானே எழுதினன் அதனால் - இகழ்வு சிறிதும்பெறாத என்பையணிபவராகிய அவ்விறைவரே எழுதினாராகலின்,—புகழ்ச்சி விருப்பன் போலும்-அவர் புகழ்ச்சிக்கண் அதிகாதலர்போல்வர். எ-று.

வேதமுதலிய எண்ணெண்கலைகளையும் ஈரெட்டாண்டு எல்லையிற்பயின்று, தக்கார்மாட்டுத் தருபொருளுணர்வான் தருக்கித்தொழுகிய சால்புடையரென்பார், 'நல்லிசைப்புலவ' என்றும், புறப்பகையனைத்தையும் பொருதுவென்றார்க்கும் உட்பகையாய்நின்று உறுகண்விளைக்கும் ஐம்புலன்களைவென்ற பேராண்மையரென்பார், 'புலனெறிவிலங்குறுவீர' என்றும், திங்களினோர்கலையாற் றிருமுடிகாணப்பட்டாரேனும் சுருதியாதியகலைகளுள் ஒன்றானும் துணியப்படாதவரென்பார், 'திங்கள் வார்சடைத்தெய்வநாயகனொருகலையேனுமுணாரான்' என்றும், திருக்கரங்களுண்மூன்று,முத்தொழிற்கிணங்கத் துடியும் அனலும் ஏந்துதலானும் அமைத்தலானும் சிறிதுவளைவுற்றவாக; மற்றொன்று, ஒருகாற்கும்பிட்டாற்போதும் கதிகூடுமென்னும் அபிநயக்குறிப்போடு, டோளமாகக் குஞ்சிதபதத்தைக் குறித்துநிற்பதென்பார், 'கைகளோமுறிபடுங்கைகள்' என்றும், சூரியசோமாக்கினிகளென்னும் முக்கண்களில் இரண்டு, உலகின்தோற்றநிலைகட்கேதுவாகிய பகலிரவுகளைத் தோற்றுவிக்கப், பிறிதொன்று, அவ்வுலகிறுதிக்கேதுவாவதென்பார், 'ஒன்றுகாலையிற்காணும் ஒன்றுமாலையிற்றோன்றும் ஒன்றுவிழிப்பினெரியும், என்றும், இவ்வியல்புடைய இறைவராயிருந்தும், தம் அளவிடாப்புகழை ஒருவாறு அளவிட்டுரைத்தலின், உலகினர் ஓதியுணர்ந்துய்வான், தந்தலைமைநாடாது தாமேவந்து

வரைந்தனரென்பார், 'ஆயினுமெழுதினன்'என்றும், அவை ஒவ்வொருபாடலும் தப்பாதுபயன்படுதலுடைய திருவாசகமும் திருக்கோவையுமென்பார், பொதுப்படப் 'பழுதில்செய்யுள்' என்றும், வரைதலினுட்கிடை உய்த்துணரார்க்கு, இச்செயலாற் புகழ்ச்சிவிருப்பரிற் புலப்படுவரென்பார், 'அதனாற்புகழ்ச்சிவிருப்பன்போலும்' என்றும், அவர், தம்மாட்டுநிகழ்வவெல்லாம் ஆன்மாக்களுய்தற்குரிய அருட்செயல்களேயாகலின், என்றும் அணுத்துணையும்இகழ்வெய்திலராய், இறுதிக்காலத்து அச்சுதனாதியரையுமழித்து, அவரென்பையுமணிந்துவிளங்கும் முதற்கடவுளேயென்பார்,'இகழ்ச்சியறியாவென்பணிவானே' என்றும் கூறினார்.

கல்லாதவராய் முறிபட்டகரத்தராய்க் காலைமாலைகளில்விளங்கலும் எதிரியவற்றை நீற்றலுமியைந்த கண்ணராயிருப்பினும், தம்மைவிசேடித்துவியந்தமைநோக்கி, இகழ்ச்சியறியா எனும்பணிந்த அவரே வரைந்தனரெனவும் பொருள்பட்டு, இது நிந்தாஸ்துதியாகவும் நிற்பதுணர்க. இகழ்ச்சியறியாவென்பதும் இப்பொருட்கிணங்க இகழ்ச்சிபயக்கும் குறிப்புமொழியாதல் உலகவழக்கிற் கொள்க. கலங்குறுபுலனெறியெனக் காரியத்தைக் காரணமாகவுபசரித்தார். புலனெறிவிலங்குதலாவது அவற்றின்கட்சென்ற மனத்தைமீட்டு அருட்குரவன்பணியி னிறுவல். கலங்குறு விலங்குறுவென்பன ஒருசொன்னீர்மைய. உணரானென்னும் செய்வினை தனக்குரிப்பொருளையன்றிச் செயப்பாட்டுவினைப்பொருளையும், விழிப்பினென்பது என்றும் விழித்தலின்மையையும், ஆயினுமென்பதின் உம்மை கொண்ட இருபொருட்கியைய உயர்வுதாழ்வுகளையும், என்பணிவானென்பது அவனென்னும் சுட்டுப்பொருளையும் குறித்துநின்றன. அஃதன்றியெனற்பாலது அஃதான்றெனத்திரிந்தது; செய்யுளாகலின். ஓகாரங்கள் வினா. முறி தளிருமாம். தீக்கண்ணாகலின் பழிப்பினோன்றென்றார். எவரும்புகழப் படுதலின் இகழ்ச்சியறியா என்பென்னலும் ஒன்று. ஏகாரம்பிரிநிலை.

* ''கற்க கசடறக் கற்பவை.'' என்றபடி உண்மைநூலாராய்ச்சியின் உவப்புடையராய் முதனூலிரண்டனுள் வேதமானது, பத்திசெய்து அரனருட்பெறும் பத்தருக்கன்றி முத்தியெய்தரிது எனமொழியும் பொதுநூலும், சிவாகமம், அப்பொதுநூற் சத்தியப் பொருட்டெளிவெலாம்சத்திநிபாதர்க்கு உய்த்துணர்த்திய சிறப்புநூலுமாகலின், அவ்வாகமவுணர்ச்சியுடையோரே அளவுபடாச்சிவனியல்புட் சிறிதறிந்தோராவரெனத் துணிந்து, ஏனைநூலாராய்ச்சியினும் அவ்வாராய்ச்சியின்மிக்குத் தேர்ந்தவரென்பதுதோன்ற, நல்லிசைப்புலவரென்றாரெனினும், அமையும்.

தருபொருளுணர்வான் தருக்கித்தொழுகியதை † ''மற்கட விலங்கு தன்னால் வளங்கெழு விளவின் மேவு - நற்கனி கொள்ள வேண்டி நயந்துகல் லெறிவார் போலச் - சற்குரு வுளனே வென்று நாடுவார் தருக்க மெல்லாஞ் -சொற்கலை ஞான சைவர் தம்முடன் சொல்லலுற்றார்.'' என்பதனானும், அருட்குரவன்பணியினிறுவலை ‡ ''பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீ - ராட்டிச் சொன்மல ரணிந்துதற் போதவின் னமுதை - யூட்டித் தற்பர ஞானமா மோம வெங் கனலை - மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சிய ரானார்.'' என்பதனானும், ஒருகலையுமுணராமையை + ''வேதக் காட்சிக்கு முபநிடத் துச்சியில் விரித்த - போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன் - மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவா - யாதிக் காதியா யுயிர்க்குயி ராய்நின்ற வமலன்.'' என்பதனானும், சிருட்டியாதிநிகழ்வை × ''தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்-சாற்றிடு மங்கியிலே சங்கார - மூற்றமா - யூன்று மலர்ப்பதத்தே யுற்ற திரோதமுத்தி - நான்ற மலர்ப்பதத்தே நாடு.'' என்பதனானும், குஞ்

* திருக்குறள்-௩௯௧. † திருவாதவூரர்புராணம் மந்திரிச்சருக்கம்-௨௩.

‡ திருவிளையாடல் வாதவூரடிகளுக்குபதேசித்தபடலம்-௫௧.

+ கந்தபுராணம் சூரனமைச்சியற்படலம்-௧௨௭. × உண்மைவிளக்கம்-௩௬.

சிதபதத்தைக் குறித்தலை * "கூடுங் கதியொருகாற் கும்பிட்டாற் போதுமென - நாடு மபிநயத்தை நண்ணிற்றா—லோடியகட் - காதனார் காணவொரு கால்காட்டிக் கையமைத்து - நாதனார் செய்யு நடம்." என்பதனானும், செய்யுளெழுதிய குறிப்பை † "அங்கவ ருரைத்த வெல்லா மம்பலத் தாடு மையர் - செங்கையி லேடு வாங்கித் தெளிவுற வரைந்த பின்னர்ப் - பொங்கிய வருளி னாரும் புகன்றிட ரகலத் தையல் - பங்கினர் தம்மைக் கோவை பாடுதல் வேண்டு மென்றார். மன்னிய தவத்தின் மிக்கா ரதற்குள மகிழ்ந்து கூற - முன்னுற விருந்து கோவை யெழுதினர் முடிந்த பின்னர்ப் - பொன்னவிர் வேணி யார்தாம் புத்தகஞ் சேமித் தங்கண்-மின்னென மறைந்தார் சொன்ன வித்தக ரயற்சி கொண்டார்." என்பதனானும், என்பணிந்த இயல்பை ‡ "பரம னிவ்வகை யடுந்தொறு மடுந்தொறும் பலவாம் - பிரமனாதியோ ரென்பினைத் தரிக்குமப் பெரியோர் - சிரமெ லாந்தொடுத் தணியலா வணிந்திடுஞ் சிகைதன்-னுரமு லாவுமுந் நூலென வேயணிந் துறையும். ஆத லாற்றனை வியப்பதற் கன்றவை யணித - விதலாதொரு திறமுள தியாவரு மெவர்க்கு-நாத னேயிவ னென்றுதன் பாங்கரே நண்ணித் - தீதெ லாமொரீஇ முத்திபெற் றுய்ந்திடுஞ் செயலே." என்பதனானும், ஆகமவாராய்ச்சி முதன்மையாக்கொண்டமையை + "மிக்கலையுஞ் செழுநீரு மதிக்கலையு மிலைக்குமவ - ரக்கலையுந் தோளர்புலி யதட்கலையர் நல்லருளா - லொக்கலையும் பிறக்கலையு மொழித்திடுமா கமகலையு - மெக்கலையுங் கற்றுணர்ந்தா ரீரெட்டாண் டெல்லையினில்." என்பதனானும், ஆகமம் சத்திநிபாதர்க்குணர்த்தியதென்பதனை × "சத்திநிபா தர்க்கமலன் சாற்றினா னாகமநூல் - மற்றையர்க்குக் காண்வேத வாக்கு." என்பதனானும், ஆகம்வுணர்ச்சியோ

---

* சிதம்பரமும்மணிக்கோவை-உக.

† திருவாதவூரர்புராணம் திருவடிபெற்றசருக்கம், கக-கஉ.

‡ கந்தபுராணம்ததீசியுத்தரப்படலம்-கஉ. + திருவாதவூரர் புராணம் மந்திரிச்சருக்கம்-கஉகூ.

× இறைவனூற்பயன் பதிசாதகவியல்-சO.

ரே சிவனியல்பு சிறிதறிவரென்பதனை * "தத்த மாற்றங்க ணிறுவிய சமயிகள் பலருங்-கத்து புன்சொலை வினவின ரவன்செயல் காணார்-சுத்த வாதுள முதலிய தந்திரத் தொகுதி - யுய்த்து ணர்ந்திடு நீர ரே யொருசிறி துணர்வார்." என்பதனானும் அறிக. (உச)

வானும் புகழ்புகலி மன்னன் றொடர்பொன்று
தேனுந் திதழியோன் சீரேடு—தானுங்
கரியாய் மொழியுங் கரியாய் விடாம
லெரியா ரழல்வீழ்ந் தெழுந்து.

(இ-ள்.) வானும் புகழ் புகலி மன்னன் - தேவருந்துதிக்கும் திருப்புகலியிலவதரித்ததிருஞானசம்பந்ததேசிகரருளிய—தொடர்பு ஒன்று ஏடுதானும்-திருப்பதிகமெழுதிய திருவேடுதானும்,—எரி ஆர் அழல் வீழ்ந்து கரி ஆய்விடாமல் எழுந்து - எரிதலார்ந்த தீயில்விழுந்து கரியாகி நீறுபடாமல், பசுமையுற்றுஇனிதுவிளங்கி,—தேன் உந்து இதழியோன் சீர் - மதுவையொழுக்கும் கொன்றைமாலிகையணிந்த பரமருடைய பாத்துவரிலையை—கரி ஆய் மொழியும் - தானே சான்றாகநின்று சாற்றும். எ-று.

திருமாலாதியபெருந்தேவர்களும் சிவபிரானுணர்த்தியவாறு நித்திய நைமித்திக காமியங்களால் இத்தேசிகரைவழிபட்டுய்ந்தாரென்பது சீகாழிமான்மியமென்பது விளக்குவார், 'வானும்புகழ்புகலிமன்னன்,என்றும், இன்பம்பயக்கும் இதழி பிரணவவடிவத்ததாகலின், அப்பிரணவப்பொருளாகிய தாம் அதனை உரிமையிற்புனைந்தனரென்பார், 'தேனுந்திதழியோன், என்றும்,இழிந்த ஏடுதானும் திருப்பதிகமெழுதப்பெற்றமையின் தெய்வீகமுடையதாயிற்றென்பார், 'தொடர்பொன்றேடுதானும், என்றும், அமணர்களெண்ணாயிரவரும் தாம் ஏடிடுங்கால் அக்கினியைத் தம்பனஞ்செய்துகொள்ளுஞ்சிந்தனையாற் சால

* கந்தபுராணம் சூரனமைச்சியற்படலம்-கஉக

மூட்டினரென்பார், 'எரியாரழல், என்றும், அவர் தம்பனஞ்செய்து கொண்டு அதிற்றனித்தனியிட்ட ஏடுகளெல்லாம், கருகிச்சாம்பராக வும், தான் சிவபெருமானையே பொருளாகவுடைமையின், பசுமையுற் றுவிளங்கிற்றென்பார், 'வீழ்ந்தெழுந்து, என்றும், பரத்துவநிலையைத் தான் சான்றாகாமலே சான்றாயுரைத்ததென்பார், அந்நயமுந்தோன் றக், 'கரியாய்விடாமற் கரியாய்மொழியும், என்றும் கூறினார்.

கூறவே, ஏடுதானும் இத்தன்மையதாகுமேல், * "வல்லமண ரொல்லைக் கழுவி லுலக்கவு—மெல்லையின் - மாதவத்தோர் வாழவும் வையகத்தோ ருய்யவு மேதக்க வானோர் வியப்பவு—மாதியாம்-வென்றிக் கலிகெடவும் வேதத் தொலிமிகவு மொன்றிச் சிவனடியா ரோங்கவுந்—துன்றிய - பன்னு தமிழ்ப்பதினா றாயிர நற்பனுவல் மன்னு புவியவர்க்கு வாய்ப்பவு—முன்னிய - சிந்தனையாற் சீரார்கவுணியர்க் கோர் சேயென்ன வந்தங் கவதரித்த வள்ள" லும், இவ்வள்ளலைவழி படும் சம்பந்தசரணாலயர் முதலிய தகுதியுடைத்தொண்டரும் சிவப ரத்துவநாட்டியநிலைமையைச் செப்பலாகுங்கொலென்றாயிற்று.

உம்மைகள் முறையே உயர்வுசிறப்பும் இழிவுசிறப்புமாம். 'தொ டர்பென்பது செய்யுட்கு, எழுத்து அசை சீர் தளை அடி தொடை என் பவற்றின் தொடர்புடைமையிற்போந்தபெயர். இது, ஈண்டு "போக மார்த்தபூண்முலையாள்" என்னும் திருநள்ளாற்றுத் திருப்பதிகத்தின் மேற்று. ஒன்று வினைத்தொகை. அன்றி, இரண்டனுருபும் பயனும் உடன்றொக்கதொகையாக்கித்தொடர்பொன்றையுடைய ஏடென்ன லுமொன்று. சீர்-பரத்துவம். தான் கட்டுரைக்கண்வந்த அசை. கரி- சாட்சி. கரியாய்விடாமலென்பது இரட்டுறமொழிதலாய் நின்றது. ஆய்விடல் ஒருசொன்னீர்மைத்து. எரி முதனிலைத்தொழிற்பெயர்.

* திருஞானசம்பந்தர் திருவுலாமாலை.

எரியாரழலென்பதனை * "ஈட்டுவெஞ்ச நெஞ்சரே யெழீஇநகர்ப் புறம்புபோய்க் - கிட்டி சைக்க ணோரழற் கிடங்குதொட்டெடுூந்துவா- னீட்டுகோட ரங்குறைத்து நிறையவிட்டு நெட்டெரி - மூட்டினார்த மாதரார் வயிற்றுமிட்டு மூட்டினர்." என்பதனானும், அமணரிட்ட ஏடு எண்ணில வென்பதனை † "ஆறிரேண டிரண்டடுத்த வாயிரஞ் சமணரும் - வேறுவேறு தாமுயன்ற மந்திரங்கள் வேறுவே - றாறு நீர் சுரந்தவோலை யிற்பொறித் தொருங்குபோய்ச்-சீறிவா னிமிர்ந்தெ ழுந்த தீயின்வாய் நிரப்பினர்." என்பதனானும், பசுமையுற்றுவிளங்கி யதை ‡ "இட்ட வேட்டினி லெய்திய செந்தமிழ்ப் பதிக - மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள் பாகத் - தட்ட மூர்த்தியைப் பொ ருளென வுடைமையா லமர்ந்து - பட்ட தீயிடைப் பச்சையாய் விள ங்கிய தன்றே." என்பதனானும் அறிக. (உரு)

துடைவாழை மேன்மட வாரல்குற் பாம்பு தொடமயங்கி
நடைவாய் பிணமெனப் பட்டார் பெறுகிலர் நச்சுகுலை
யுடைவாழை மேலுர கந்தீண்ட மாய்ந்த வொருவனுயி
ரடைவா னருள்புரி யுந்திரு நாவுக் கரசினையே.

(இ-ள்.) மடவார் துடை வாழைமேல் - மங்கையர்களுடைய தொடையென்னும் வாழைமீதுள்ள—அல்குல் பாம்பு தொட மயங் கி - நிதம்பமென்னும் அரவுதீண்ட நினைவழிந்து,—நடை வாய் பிணம் எனப்பட்டார் - நடைவாய்ந்த பிணமென நவிலப்பட்டவரெல்லா ம்,—குலை உடை வாழைமேல் நச்சு உரகம் தீண்ட மாய்ந்த - தாறு டைய வாழையிற்றங்கிய விடவரவுதீண்ட வீந்த—ஒருவன் உயிர் அடைவான் - மூத்ததிருநாவுக்கரசு முன்போலுயிர்பெறும்படி,— அருள் புரியும் திருநாவுக்கரசினை பெறுகிலர் - திருவருள்பாலித்த திருநாவுக்கரசுதேவரைப் பூர்வம் வழிபடுதல் பெறுதவரே. எ-று.

* திருவிளையாடல் சமணரைக்கழுவேற்றியபடலம்-நச. † ஷை கஎ.

‡ பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திபுராணம்-எஅகூ.

பூர்வம் வழிபட்டிருப்பரேல், மாநிலத்துதித்து மங்கையர்மைய லின்மூழ்கி மயங்காராகலின், இங்ஙனமுழல்வாரெல்லாம்,வழிபடாத வரேயென்பார், 'திருநாவுக்கரசினைப்பெறுகிலர்,என்றும், அவர் உயி ரெய்தற்குரிய பயனெய்தாமையின் பிணத்தொடொப்பரேனும், பிறர் க்குப் பயன்பாடின்றி, உண்டுடுத்துழலாநிற்றலின், அதனின் வேற்று மையுடையரென்பார், 'நடைவாய்பிணம், என்றும் கூறினர். நடை வாய்பிணமென்றது * "உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில் லார் - மரமக்க ளாதலே வேறு." என்றுங்கு, இழித்தற்கண்வந்தது.

வழிபடுதலென்பது சொல்லெச்சம். * "பெற்றாற் பெறிற்பெறு வர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் - புத்தேளிர் வாழு முலகு." என்னும் திருக்குறளிற்போல. வாய் - வினைத்தொகை. பெறுகிலரென்புழித் தேற்றேகாரம் விகாரத்தாற்றொக்கது. அன்னியயோகவியவச்சேத மென்னும் பிறிதினியைபுநீக்குதலாகிய விசேடணந்தந்து நச்சுரகமெ ன்றார்; ஈண்டு உருவகிக்கப்படுமாகம் நச்சிலதென்பதறிவித்தற்கு. எ னவே, அவ்வரவம் நச்சுடையதேனும், அதுதீண்ட மடிந்தமகன் திரு நாவுக்கரசினை வழிபடுதல்பெற்றான்; இவ்வல்குலரவம் நச்சிலதேனும் இதுதீண்டியவழி மடியாது மயங்கியுழல்வோர் பெறுகிலர் ஆகலின், பயனையிழப்பித்தலில் அதனினும் கொடிதாகிய இத்தகையமயலைக் கடத்தற்கும் வாகீசமூர்த்தியின் தியானமே மருந்தென்பதும் கொ ள்ள வைத்தவாறாயிற்று. பட்டார் பெறுரென்னலும் ஒன்று.

வழிபடுவோர் மாநிலத்துதித்துழலாரென்பதனை † "திருநாவுக்க ரசடி யவர்நாடற்கதிநிதி தெளிதேனைத்தினியசொன் மடவாருற்பசி முதல்-வருவானத் தரிவையர் நடமாடிச் சிலசில வசியாகச் சொலும வை துகளாகக் கருதிமெய்-யுருஞானத் திரண்மன முருகாநெக்கழுது கண் ணுழவாரப் படைகையி லுடையான்வைத் தனதமிழ் - குருவா

* திருக்குறள்-கூOO. † திருநாவுக்கரசுதேவர்திருவேகாதசமாலை-உ.

கக் கொடுசிவ னடிசூடத் திரிபவர் குறுகார்புக் கிடர்படு குடர்யோ னிக் குழியிலே.'' என்பதனானும், அம்மயலைக்கடத்தற்கு மருந்தா தலை ‡ ''குழிந்துசுழி பெறுநா பியின்கொண் மயிர் நிரையார் குரும் பைமுலை யிடையே செலுந்தகைநன் மடவா - ரழிந்தபொசி யதிலே கிடந்திரவு பகனீ யலைந்தயரு மதுநீ யறிந்திலைகொன் மனமே - கழிந் தகழி கிடுநா ளினங்கிதய நெகவே கசிந்திதய மெழுநூ றரும்பதிக நிதியே - பொழிந்தருளு திருநா வினெங்களர சினையே புரிந்துநினை யிதுவே மருந்துபிறி திலையே.'' என்பதனானும் அறிக. இவ்வுதாரணத் திருப்பாடலில் எழுநூறரும்பதிகமென் றிருக்கவேண்டியபாடம் பிறழ்ந்திருக்கின்றது: சிவானுபூதிமான்கள் திருவாக்கை இஃதித்தன் மைத்தெனத் திருத்தவல்லார் யாவர்? (உகூ)

அரசன் பரிமேல் வரநெடுநல் யானையெருத்தத் தமர்ந்துபோய்
வரதன் கயிலை மலையடைந்த மணியே மணிநீ ரிடுபசும்பொன்
றிரைசங் கெறியுங் குளத்துவரச் செங்கற் செம்பொனாப்பாடும்
பரிசின் றெனக்குன் செம்பவளத் திருவாய்மலர்ந்தருள்வாயே

(இ-ள்.) அரசன் பரிமேல் வர - (உயிர்த்துணைவராகிய) சேரமா ன்பெருமானாயனார் குதிரையிலிவர்ந்து உடன்செல்ல—நெடு நல் யா னை எருத்தத்து அமர்ந்து போய் - உன்னதமுதவிய உத்தமவிலக்க ணங்களமைந்த வெள்ளையானையின்பிடரியில் விளங்கிச்சென்று—வர தன் கயிலை மலை அடைந்த மணியே - சிவபிரானமரும் திருக்கைலைவ ரையையெய்திய செம்மணிபோல்பவரே!—மணி நீர் இடு பசும்பொன் திரை சங்கு எறியும் குளத்து வர - (முதுகுன்றத்திலே) மணிமுத்தந தியிலிடப்பட்ட பன்னீராயிரம் பசும்பொன்னும் அலைகள் சங்குகளை யொதுக்கும் திருவாரூர்க்குளத்தில் அணுகவும்—செங்கல் செம்பொ ன் ஆ பாடும்பரிசு-(திருப்புகலூரிலே திருமுடிவைத்துத்துயிலப்பெற்

‡ ஷை ௩.

ற) செங்கற்கள்பலவும் செம்பொன்னாகவும்பாடுந்திறத்தை—உன் செம்பவளம் திருவாய் மலர்ந்து இன்று எனக்கு பகர்வாய் - தேவரீருடைய செவ்வியபவளம்போலும் திருவாயைத்திறந்து இன்று சிறியேனுக்குச் செப்புவீராக. எ-று.

மலவாதனையற்றுரும் பூமியில் மானுடவுருக்கொண்டு சிலபகல் வதிவரேல், அவ்வாதனைவந்து சேருதலின், அவ்வுருவை ஞானாக்கினியாற்றகித்து, விசுத்தவுருப்பெற்றுச் சேறல் மரபாக, இவ்வாளுடைய நம்பிகள், தம்முருவம் இயற்கையே விசுத்தவுருவாதல்பற்றி, அவ்வுருவோடு திருக்கைலையை அடைந்தாராகலின் மாசிலாமணியேயென்பார், மாசறுதலாதி அடைகொடாது, 'மணியே, என்றும், தூரத்துள்ளதைச் சமீபத்தழைத்தலாகிய ஆகருஷணமும், இவர்பால் அருள்விளையாட்டாக நிகழ்ந்ததென்பார், 'மணிநீரிடுபசும்பொன்குளத்துவர, என்றும், இரும்புமுதலிய உலோகங்களையேயன்றிச், செங்கல்லைப்பொன்னாக்கல், எத்தகையவாதிகளுக்கும் இயலாதாக, அதுவும் இவர்மாட்டு நிகழ்ந்ததென்பார், 'செங்கற்செம்பொனு' என்றும், இவை முயலுதற்றெழிலின்றிப் பாடுமளவானே முடிந்தவென்பார், 'பாடும்' என்றும், செம்மொழிபயிலும் தேவரீர்திருவாக்கினன்றிப் பிறர்பாற்கேட்டறிதலிற் பெட்பிலேனென்பார், 'உன்செம்பவளத்திருவாய்மலர்ந்து' என்றும், அறிந்துவைத்தலினன்றி இயற்றுதலில் ஆவலுடையனல்லேனென்பார், பரிசுசித்திக்கப்பகர்வாயென்னாது, 'பரிசுபகர்வாய்' என்றும் கூறினார்.

கூறவே, இவர் எல்லாம்வல்ல சித்தரியல்பும் உடையரென்பது குறிப்பித்தவாறு. முறைவேண்டுவாரும் குறைவேண்டுவாருமாகிய திருமாலாதியர்க்கும், முனிவரர்க்கும், வேண்டும்வரங்களும் ஞானோபதேசமும்பாலித்து, விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள் திருநந்திதேவர்முதலியோர் புடைசூழ, அம்பிகைபாகராய்ச், சிவபெருமான் திருக்கைலையிற் றிருவோலக்கங்கொண்டு, காட்சிக்கெளியராய் வீற்

திருக்கின்றனரென்பது, வேதசிவாகமங்களின் துணிபாகலின், வரத னென்றார். வரதன் - வரத்தைக்கொடுப்பவன். ஆகவென்பது ஈறு குறைந்தது.

வரதனுதலை *"எழுதரும் பனுவ லாகம மேனைக் கலைகளு மிரு டிகண் முதலா - முழுவலன் புடையார்க் கருளவுந் திருமா லூற்று தேந் தாமரைக் கிழவன் - முழுதுடல் விழிக்குங் கடவுளா திபர்க்கு முன்னிய வரங்கொடுத் திடவுஞ் - செழுமணிக் களத்துத் தெய்வதக் குரிசி றேவியோ டாங்கிருந் ததுவே." என்பதனானும், மலவாதனை வந்துசேருதலை † "மலமகல் பவரும் புவிமீதே மானுட வடிவந் தனை யெய்திச் - சிலபக லெனினும் பயில்காலைச் சேர்தரு மலவா தனையெ ன்றே - பலமலர் கமழுந் தடமீதிற் பரவரு ஞான வனல்சேர்வித்- தில்தென நீடுஞ் சடம்வேவித் திவ்வுட லீந்தே மிந்நாளில்." என்பத னானும், மானுடவுருவோடு திருக்கைலையடைந்தமையை ‡ "ஞான வவ் வாரூ ரரசரை யல்லது நாமறியோ - மானவ வாக்கை யொடும் புக் கவரை வளரொளிப்பூண் - வானவ ராலு மருவற் கரிய வடகயி லைக் - கோனவன் கோயிற் பெருந்தவத் தோர்தங்கள் கூட்டத்தி லே." என்பதனானும் அறிக. (உஎ)

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரி னழுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
யன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத லாலே

* திருத்தணிகைப்புராணம் அகத்தியனருள்பெறுபடலம்-எ௦. † திருவாதவூரர்பு ராணம் திருவம்பலச்சருக்கம்-உ௦. ‡ திருத்தொண்டர் திருவந்தாதி-அசு.

தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவ்ல மிலர்." எனுஞ்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே.

(இ-ள்.) அன்னம் ஆடும் அகன் துறை பொய்கை - அன்னங்கள்விளையாடும் அகன்றதுறைகளார்ந்த திருக்குளங்கள்செறிந்த—வாதவூர் அன்ப - திருவாதவூரிலவதரித்த அன்பரே!—பகிர் மதி தவழும் பவளம் வார் சடையோன் - இளம்பிறையூரும் பவளநிகர்த்த நெடுஞ் சடைகளையுடைய இறைவரது—பேரருள் பெற்றும் பெறாரின் அழுங்கி - தெய்வத்திருவருளைப்பெற்றிருந்தும், அதனைப்பெறுதார்போன்றுவருந்தி,—நெஞ்சம் நெக்கு உருகி நீயே நிற்பை - மனநெகிழ்ச்சியுற்றுருகித் தேவரீரே வாடிநிற்கின்றீர்;—பேயேனே பெறாது - பேய்த்தன்மையுடையயானே அவ்வருளைப்பெறாதிருந்தும்,—பெற்றார் போல களிகூர்ந்து - பெற்றவர்போன்று பெரிதும் மகிழ்ச்சியிற்றிளைத்து,—உள்ளம் கவலை தீர்ந்தேன் ஆதலால்-அகத்தில் துயர்வையொழிந்தேன்; ஆகையால்,—தெய்வப்புலமை திருவள்ளுவனார்-தெய்வப்புலமையையுடைய திருவள்ளுவநாயனார்—நன்று அறிவாரில் கயவர் திருவுடையர்-தமக்கு உறுதியாவன அறிவாரின் அவையறியாதகீழ்மக்கள் நன்மையுடையர்;—நெஞ்சத்து அவலம் இலர் எனும் - அவர்போல அவைகாரணமாகத் தந்நெஞ்சத்தின்கண் கவலையிலராகலான். என்றருளிய—செஞ்சொல் பொருளின் தேற்று அறிந்தேன்-திருக்குறளின் பொருட்டெளிவைத் தேர்ந்துணர்ந்தேன். எ-று.

சந்திரன் தன்கலைக்குறைவானுணி மெல்லப் புடைபெயர்தலுடையனென்பார், 'பகிர்மதிதவழும்' என்றும், துகிர்க்கொடிபோலும் நீட்சியும் நிறமும் துன்னியவென்பார், 'பவளவார்சடை' என்றும், இவர்பெற்றது பசுத்துவநீக்கிப் பதித்துவம்பயக்கும் தெய்வத்திருவரு

ளென்பார், 'பேரருள்' என்றும். ஆட்பாலவர்க்கருளுந்திறம் அளவி ன்மைநோக்கி, அத்தகையவருளை மேன்மேற்பெற அவாவல், அருட் பேறுடையார்க் கியல்பாகலின், இவர்தாமும்,அங்ஙனம் அவாவிநின் றனரென்பார், 'பெற்றும்பெறாரினமூழ்கிநிற்பை, என்றும், அமைதியி ன்றிச்சலிக்கும் சித்தத்தனாகலின், அவ்வருளின்றிறம் இத்தகையவெ னவறியாது உண்டுடுத்துமகிழ்ந்து உழலாநின்றேனென்பார், 'பேயே ன்பெறாதுபெற்றார்போலக் கவலைதீர்ந்தேன்' என்றும், திருவள்ளுவ நாயனார் தெய்வப்புலமையராகலின், அவரருளிய திருக்குறள்களின் சொற்பொருளன்றி, அப்பொருட்டெளிவறிதல், தெய்வப்புலமையர் க்கே உரியதாக, ஈண்டு உதாகரித்த திருக்குறளின்பொருட் டெளி வைத்,தேவரீருக்கும் சிறியேனுக்குமுள்ள அநுபவத்தையொட்டி ஒரு வாறறிந்தேனென்பார், 'பொருளின்றேற்றறிந்தேன்' என்றும் கூறி னார்.

உம்மை உயர்வுசிறப்பு. இன் உவமவுருபு. ஏகாரங்களுள் முந்தி யவிரண்டும், முறையே உயர்வினும் இழிவினும் வந்த தேற்றம். ஏனை யவை அசைகள். தீர்ந்தேனேயென்பதின் ஏகாரம் பேயேனென்பு ழிக் கூட்டப்பட்டது. செஞ்சொல் அடையடுத்தகருவியாகுபெயர். தேற்றமென்பது ஈறுகுறைந்தது. தேற்றமாவன-இம்மைமறுமைவீடு கட்குரிய உறுதிப்பொருள்களாகிய புகழறஞானங்களின் இயல்பறி வார் அவற்றையீட்டாநின்றே மிக ஈட்டப்பெறுகின்றிலேமென்றும், ஈட்டுகின்ற இவைதமக்கு இடையூறுவருங்கொலென்றும், இவற்றின் மறுதலையாய பழிபாவம் அறியாமையென்பவற்றுள் யாதுவிளையுமோ வென்றும், இவ்வாற்றாற் கவலையெய்துவர்; கயவர் அப்புகழ்முதலிய வொழித்துப், பழிமுதலிய ஈட்டாநின்றும்,யாதுங்கவலையெய்திலராக லான்,இவர்திருவுடையரென்று குறிப்பாலிகழ்ந்தனரெனக், கோடல் முதலியவை. பேயேனென்பதற்கு, தேவரீரது தெரிசனவுத்தேசமாத் திரத்தானே செல்வேன் செல்வேனென்று செல்லும் ஆசைப்பேயும்,

தெரிசித்தவழிச்செல்வேனென்று செல்லுதலின்றிச்செல்லும் ஆணவப்பேயும், தெரிசித்தும், விரோதமின்றிச் சின்னாளிருந்து செல்வேனென்னும் பிராரத்தவினைப்பேயும், இதனோடு யானுஞ்செல்வேனென்று இரந்துநிற்கும் மாயைப்பேயுமாகிய இவற்றாற் பீடிக்கப்பட்டுள்ளேனெனப் பொருள்கோடலும் ஒன்று. அரும்பொருளடங்கினும், ஆசிரியவசனமில்வழிச் சிறவாதாகலின், இத்தெய்வத் திருக்குறளைப் பொன்போற் பொதிந்து வைத்தாரென்க.

பேரருள்பெற்றமையை *"சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி - வந்தனையுமம் மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார-வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்-தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித் தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே." எனவும், † "தந்ததுன் றன்னைக் - கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுரரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே னியாதுநீ பெற்றதொன் றென்பாற் - சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான் றிருப்பெருந்துறையுறை சிவனே-யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா யானிதற் கிலனோர்கைம் மாறே." எனவும், பெருரினமுங்கினமையை ‡ "யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய் - யானால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே - தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கு - மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே." எனவும், 0 "வன்பராய்முரு டொக்குமென்சிந்தை மரக்கணென்செவி யிரும்பினும்வலிது." எனவும், இவ்வாசிரியர் ஆங்காங்கு விளக்கிய அருட்டிருவாக்குக்களான் அறிக. (உஅ)

---

*திருவாசகம் திருச்சதகம்-உசு. † ஷை கோயிற்றிருப்பதிகம்-க0,
‡ ஷை திருச்சதகம்-கூ0, 0 ஷை செத்திலாப்பத்து-ச.

தேனே றலர்சூடிச் சில்பலிக்கென் றூர்திரியு
மானேறி யாண்டுப்பெற் றான்கொனீ—தானேறும்
வெள்ளைமணி யென்று வினவுவோம் வாங்கியவப்
பிள்ளையையாங் காணப் பெறின்.

(இ-ள்.) தேன் ஏறு அலர் சூடி - வண்டுகள்செறியும் மலர்களை யணிந்து—சில் பலிக்கு என்று ஊர் திரியும் ஆனேறி - சிறுபலியின் பொருட்டென முனிவர்பத்தினிகளின் இருக்கைதோறும் திரிந்த இடபத்திவர்ந்தபெருமான்—நீ ஏறும் வெள்ளை மணி - தேவரீர் ஊரும் வெண்முத்துச்சிவிகையை—யாண்டு பெற்றான் என்று வினவுவோம்- யாங்குப்பெற்று உமக்கீந்தாரென்று கேட்போம்;—வாங்கிய அப்பிள்ளையை யாம் காணப் பெறின் - அச்சிவிகையையேற்ற அத்திருஞானசம்பந்தப்பிள்ளையாரை யாம் தரிசிக்கப் பெறுவேமாயின். எ-று.

தேன்விழையும் மலராதியவற்றன்றித் தேவர்மனிதராதியர்விழையும் அணிமுதலியவற்றில் ஆர்வமிலரென்பார், 'தேனேறலர்சூடி' என்றும், வேண்டியவுணவை ஒருமனையிற்பெறும் பெரும்பலியன்றிப் பலமனையிற்பெறும் சிறுபலியேவிழைந்ததென்பார், 'சில்பலி, என்றும், அது தம்பொருட்டன்று அடியவரனுட்டித்து உய்தற்பொருட்டென்பார், பலிக்கென்னாது, 'பலிக்கென்று' என்றும், தேவதாருவனத்துள்ள நாற்பத்தெண்ணாயிரமுனிவரும் (பிரபஞ்சம் அநாதிநித்தியம்; சிவன்முதலாயினாரெல்லாம் அநித்தியர்; வேதம் ஒருவராற்செய்யப்பட்டதன்றி நித்தியமாயுள்ளது; அதில்வகுத்த இட்டியாதிகளையியற்றின் அவையே துறக்கமுதலிய பயன்களைப்பயக்கும்; அப்பயனை நுகர்விப்பான் ஆன்மாக்களுக்குவேறாய் இறைவனொருவனில்லை.) என்று கூறும் மீமாஞ்சைநூலே உண்மைநூலெனக்கொண்டு, சுவதந்திரராகிய சிவபெருமானை வழிபடுதலொழிந்து, பரதந்திரராகிய தங்களைச் சுவதந்திரராகத் துணிந்து, இட்டியாதிகளையியற்றி, ஒழுகாநிற்ப;

அவர்மனைவியரும், அவர்கற்பித்த அக்கொள்கைவழிநின்று, கற்பிற் சிறந்து, தேவமங்கையரை அவமதித்தொழுகலின், அவ்வழிப்பட்டு உலகம் அவலமுறுதபடி, அவரியற்றும் இட்டியாதிகள் பயன்பாடின்மையைவிளக்கி அவர்மயக்கவுணர்வையொழித்து ஆட்கொண்டருளுதற்பொருட்டே, அச்சுதக்கடவுளை அவர்மயங்கமோகினியுருக்கொண்டுசெல்ல ஏவி, தாம் மங்கையர்மயங்கப் பிக்ஷாடனமூர்த்தியாய்ச் சென்றாராகலின், அவரிருக்குமிடமுற்றும் சரித்தனரென்பார், 'ஊர்திரியும்' என்றும், இடபத்திவர்ந்து பலிக்கெழுந்தருளினரென்பதும் புராணசித்தமென்பார், 'ஆனேறி' என்றும், கொண்டகோலத்தால் முத்துச்சிவிகையிழ்ந்தவரெனக் குறிக்கப்படாராயினும், எல்லாமுடையராகலின் அவரே அருள்விளையாட்டான் ஈந்தனர்போலுமென்பார், 'யாண்டுப்பெற்றான், என்றும், மேகமுதலியவையினுமுத்தம் செம்மையாதியநிறத்தவாகலின் அவற்றானன்று; சங்கினும்வெண்முத்தாற் சமைந்ததென்பார், 'நீயேறும்வெள்ளைமணி, என்றும், பிறராற்காணுதற்கரியபெருந்தகையரென்பார், 'காணப்பெறின்' என்றும், பெற்றால், சிவிகைவந்தமை கேட்டுத் தெளியலாமென்பார், 'வினவுவோம்' என்றும் கூறினார்.

கூறவே, அப்பிள்ளை *"ஞாலத் தினரறிய மன்னுகனி பள்ளியது பாலை தனைநெய்த லாக்கியுங்—காலத்து-நீரெதிர்ந்து சென்று நெருப்பிற் குளிர்படைத்தும் பாரெதிர்ந்த பல்விடங்க டீர்த்துமுன்—னேரெழுந்த-யாழை முரித்து மிருங்கதவந் தானடைத்துஞ் சூழ்புனலி லோடத் தொழில்புரிந்துந்—தாழ்பொழிற் - கொங்கிற் பனிநோய்ப் பரிசனத்தைத் தீர்ப்பித்துந் துங்கப் புரிசைத் தொகுமிழலை—யங்கதனி-னித்தன் செழுங்காசு கொண்டு † நிவா நெல்வாயின் முத்துச் சிவி

* திருஞானசம்பந்தர்திருவுலாமாலை.

† நிவாநதி நிவாவெனநின்றது; அது வெள்ளாறு: எனவே, வெள்ளாற்றங்கரையிலுள்ள நெல்வாயிலென்க.

கை முதல்கொண்டு—மத்தகுசீர் - மாயிரு ஞாலத்து மன்னாவடுதுறை புக்காயிரஞ் செம்பொனதுகொண்டு—மாய்வரிய - மாண்பு திகழ்பெருமான் மன்னுதிரு வோத்தூர்புக் காண்பனைகள் பெண்பனைகளாக்கியும்—பாண்பரிசிற் - கைப்பாணி யொற்றிக்கா ழிக்கோலக் காவிற் பொற் சப்பாணி கொண்டு தராதலத்து—ளெப்போது-நீக்கரிய வின்பத் திராக மிருக்குக்குற ளேத்தரிய பாசுரம்பல் பத்தோடு—மாக்கரிய - யாழ்மூரி சக்கரமாற் றீரடி முக்காலும் பாழிமையாற் பாரகத்தோர் தாமுய்ய—வூழி - யுரைப்பமரும் பல்புகழா லோங்கவுமை கோனைத் திருப்பதிகம் பாடவல்ல சேய்" ஆகலின், காணப்பெறுவது எளிதன்றென்பதுதோன்றப் பெறினென்றாரென்பது.

சில் சிறுமை. பலிக்கென்றென்பது உள்ளபடி பலிக்குச்சென்றதன்றென்பதூஉம், யாண்டுப் பெற்றானென்பது சொல்லாற்றலான் யாண்டும் பெற்றிலனென்பதூஉம் படநின்றன. ஆனேறி வினைக்குறிப்புப்பெயர். பெறுதல் அதன்காரியமாகிய ஈதலையுமுணர்த்திற்று. கொல் தான் அசைகள். வெள்ளை-சங்கும் வெண்மையுமாம்; மணி கருவியாகுபெயர். அகரம் தலைமைச்சுட்டு. பலரறிபழிச்சொலுடையராய்ச் சிறுபலிப்பொருட்டு ஊர்திரிதலைக்கொண்டு உயர்ந்தவாகனமின்றி எருதேறியுழலுமவர்க்குச் சங்குமணிதானும் ஏது? ஆயினும், அவர்க்குக் குபேரனாதியர் உரிமையரெனக் கூறப்படுதலான், அவர்மாட்டுப் பெற்றும் அளித்திருக்கலாமாகலின், யாண்டுப்பெற்றாரென்று கடாவுவோம்; வாங்கிய அவ்வறியாப்பிள்ளையை யாம் காணின். எனவும் பொருள்பட்டு இதுவும் நிந்தாஸ்துதியாகவும் நிற்பதுணர்க.

சில்பலியேற்றமை அடியவருய்தற்கென்பதை *"பரந்துலகேழும் படைத்த பிரானை - யிரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்கு - நிரந்தர மாக நினையு மடியா - ரிரந்துண்டு தன்னடி யெட்டச்செய்

* திருமந்திரம் பிக்ஷாவிதி-௧.

தானே." என்பதனானும், மீமாஞ்சமதத்தராதலை † "முன்புதா ருகவ னத்தின் முனிவரர் யாரு மீசற்-கன்பில ராகி வேள்வி யளப்பில புரி ந்து தாமே-யின்புறு முத்தி தன்னை யெய்துவா னுன்னி யங்கண்-துன் புற வாளா ரோற்றுத் துணிவினு லொழுக லுற்றார்."என்பதனானும், இடபத்திவர்ந்து பலிக்கெய்தினமையை ‡ "பெற்ற மேறிப் பலிக்கு வரும் பெருமான்" என்பதனானும், முத்தியல்பை + "மாடவெண் புறவின் முட்டை வடிவெனத் திரண்ட பேழ்வாய்க் - × கோடுகான் முத்தம் வெள்ளை நிறத்தன கொண்மூ முத்த-நீடுசெம் பரிதி யன்ன நிறத்தது கிளைமுத் தாலி - பீடுசா னிறத்த ராவின் பெருமுத்த நீலத் தாமால். ஏனமா வாரஞ் சோரி யீர்ஞ்சுவைச் சாலி முத்த - மானது பசுமைத் தாகும் பாதிரி யனைய தாகு - மீனது தாளம் வேழ மிரண் டினும் விளையு முத்தம் - தானது பொன்னின் சோதி தெய்வதஞ் சாற்றக் கேண்மின்." என்பதனானும் அறிக. (உகூ)

பெற்றா னினைப்பெற் றவர்போற் பெறலும் பிறப்பதுண்டே
னற்றா ரணியி னினைப்பேரற் பிறப்பது நல்லகண்டாய்
செற்றார் புரமெரி செய்தவில் வீரன் றிருப்பெயரே
பற்றா மறிவெண் டிரைக்கட னீந்திய பாவலனே.

(இ-ள்.) செற்றார் புரம் எரிசெய்த வில் வீரன் - பகைவர் முப்பு ரங்களையும் நீறாக்கிய பருப்பதவில்லையேந்திய பரமருடைய—திருப் பெயரே பற்றா-திருநாமமாகிய பஞ்சாக்கரமே செவ்விய துணையாக—மறி வெண் திரை கடல் நீந்திய பாவலனே - மடங்கிவீசும் வெள்ளிய அலைகள்வாய்ந்த கடலைக்கடந்த வாகீசமூர்த்தியே!—நல் தாரணியில் பேற்றால்-உயர்ந்த இந்நிலவுலகத்திலே (ஒருபுதல்வனைப்)பெறின்,—நினை பெற்றவர்போல் பெறலும் - உம்மைப்பெற்ற பிதாமாதாக்களைப்

† கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்-௯௦.
‡ பெரியபுராணத்தில் மூர்க்கநாயனார்புராணம்-எ.
+ திருவிளையாடல் மாணிக்கம்விற்றபடலம்-௩௫-௩௬. × கோடு - சங்கும் இப்பியும்.

போல (உம்மையொத்த ஓர்புதல்வனைப்) பெறுதலும்,—பிறப்பது உண்டேல் நினைப்போல் பிறப்பதும் நல்ல - உதித்தலுளதாயின் உம்மைப்போல (ஒருபுதல்வனாகி) உதித்தலுமே சிறந்தன. எ-று.

தாரகாக்கன் கமலாக்கன் வித்துன்மாலியெனும் அசுரர் மூவரும், கோடியாண்டு தவமியற்றி, பிரமதேவராற் பொன் வெள்ளி இரும்புகளானாகிய மூவரண்கள், முறையே சுவர்க்கம் அந்தரம் பூமியென்புழி நிலைபெற்றிருந்து வேண்டுமிடங்கட்கு உடன்வரவும், அவை ஆயிரம் யாண்டுக் கோர்கால் ஒருமுகூர்த்தநேரம் ஒருங்குதொகவும், அக்காலத்தில் ஒருகணைவிடுத்து அழிப்பினன்றி வேறெவ்வகையானும் அழியாதிருக்கவும், திருமாலாதிய ரெதிர்ப்பினும் தோற்றோடவும், வரமேற்று, மயன்வகுத்த மாளிகைகளோடுகூடிய அவ்வரண்களினுற்று,விபூதிருத்திராக்ஷதாரணமும் பஞ்சாக்ஷரசெபமுமுடையராய்ச், சிவபிரானை வழிபட்டாரேனும், தேவராதியர்க்கு இடுக்கண்புரிதலுடைமைபற்றி, அச்சுதமூர்த்தி புத்தகுருவாய்ச்சென்றுமயக்க; அக்கொள்கையின்மயங்கிச் சிவபத்தியில் வெறுப்புற்றனரென்பார்,'செற்றார், என்றும், செற்றவழி, மேருச்சிலையாதியவுடையராய்ச்சென்று, அவர்நிலைமைகண்டு முறுவலிக்க, அதிற்றோன்றிய அனலான் முப்புரங்களும்தீப்பட்டும்,அத்திருமாலாதியர்க்கு அபசயமுறுதபடி அவருருவாகிய கணையையும்விடுத்த அருளாளரென்பார், புரமெரிசெய்தவீரனென்னுது 'வில்வீரன், என்றும், பஞ்சாக்கரம் பரசிவரூபமாய்விளங்கித்தியானிப்பாரைத் தற்சொரூபமாக்கலின், அது அப்பரமர்க்குரிமையுடைத்தென்பார், 'திருப்பெயர், என்றும், சிறுமையுடையாரையும் பவக்கடல் கடப்பிக்கும் அத்திருமந்திரம் திருநாவுக்கரசுதேவரை இத்திரைக்கடல் கடப்பியாது விடுமோவென்பார், 'பற்று, என்றும், சிவாகமாதிகட்கும் மூலமாதலைத் தேர்ந்து, அதனியல்பைச் "சொற்றுணைவேதியன்" என்னும் திருப்பதிகத்தமைத்துத்துதித்துக் கடலைக்கடந்த அத்தகையரென்பார், 'நீந்தியபாவலன், என்றும்,இந்நி

லவுலகத்திலே புதல்வர்ப்பேற்றினருள் எவரானும்புகழ்பெற்றது புகழனாரும் மாதினியாருமேயென்பார், 'பெற்றா னினைப்பெற்றவர்போற்பெறலும்,என்றும்,புதல்வராயினாருள் எவரானும் புகழ்பெற்றது தேவரீரேயென்பார், 'நினைப்போற் பிறப்பதுநல்ல, என்றும் கூறினார்.

ஏனைப்பேறும் பிறப்பும் நல்லவன்றென்பது குறிப்பெச்சம். எனவே, "நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே - யிம்மையிலும் பிழைப்பதென வெம்போல்வா ருந்தெளிய" மற்றை ஆசிரியரினும் அநுபவத்தில் விளக்கிய அருட்டிறநோக்கி, எவரும்பேணப்படும் இவர்பெருமையையும் ஈன்றார்பெருமையையும் இனிது நிகழ்த்தியபடி. இம்மையிலும்பிழைத்தலைவிளக்கினமை:—சமணரால் இடப்பட்ட நீற்றறையினும், விடங்கலந்தவுணவினும், ஏவப்பட்டயானையினும், கல்விற்பிணித்துவிடப்பட்ட கடலினும், தப்பியுய்ந்தமையும் பிறவுமாம். முத்திபெறற்குரியது இத்தாரணியேயாகலின் நற்றாரணியென்றார். பிறப்பதுமேயென்னும் பிரிநிலையேகாரம் தொக்கது. நல்ல வினைக்குறிப்புமுற்று. கண்டாய் முன்னிலையசை. நல்லவாகச்செய்தாயெனினும் அமையும். செற்றார்புரத்துளொருங்கிருந்தும், செறாதார்புரத்தை எரிசெய்திலரென்பார், இதனையுள்ளுறையாக்கிச் 'செற்றார்புரமெரிசெய்த வில்வீரன், என்றார்; இக்குறிப்பு அமணர்களென்னும் செற்றார்புரத்துளொருங்கிருந்தும் செறாராகிய இவர்புரத்தைப் புரந்தமைமேற்று. ஈண்டுச் செறாதாரென்றது சிவபத்தியில் வழாதுய்ந்து சிவபெருமானது வாயிற்காவல்பெற்ற சுதன்மன் சுசீலன் சுபுத்தியென்னும் மூவரையும். செற்றல்-வெறுத்தல். புரம்-ஊரும் உடலுமாகலின் ஏற்றபெற்றிகொள்க. ஏகாரங்களுள் முன்னையது தேற்றம்; பின்னையது விளியுருபு. ஆகவென்பது ஈறுகுறைந்தது.

கணையையும்விடுத்தமையை * "இவைகண்டு கணையாகு முகுந்தனும்வா யுவுமதியு மனலு மெய்ம்மை - நவைகொண்டார் புரத்தேவு

* இலிங்கபுராணம்,திரிபுரமெரித்தவத்தியாயம்-௩௫.

கெனவிரந்து சொலவீசன் விடுப்ப நண்ணி - யவையுண்ட வழலைமிக வெழமூட்டி மீண்டுமெல ரடியிற் ருழத் - துவர்வென்ற செங்கனிவாய் பங்கனுநல் லருள்கூர்ந்து துலங்கி நின்ருன்." என்பதனுனும், பரசிவனுதலை † "சிவனரு ளாய சிவன்றிரு நாமஞ்-சிவனரு ளான்மாத் திரோதமல மாயை - சிவன்முத லாகச் சிறந்து நிரோதம் - பவம தகன்று பரசிவ னுமே." என்பதனுனும், பவக்கடல்கடப்பித்தலை‡ "இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின் - வருபவக் கடலில்வீழ் மாக்கனேறிட-வருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கட-லொருகன்மே லேற்றிட வுரைக்க வேண்டுமோ." என்பதனுனும், சிவாகமாதிகட்கு மூலமாதலை + "அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையு-மஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்து—மஞ்செழுத்தே - யானந்தத் தாண்டவமு மாருறுக் கப்பாலா-மோனந் தவாமுத்தி யும்." என்பதனுனும், மூவருய்ந்தமையை × "முப்புரங்களின் மூவர்புத்தன் மொழித்திறத்து மயங்கிடா - தப்பணிந்தவர் தாள்பணிந்தரு ளாற்றினின்றன ராதலாற்-பொய்ப்புரந்தபு காலைநீற்றறை நாவின்மன்னவர் போலெரி-தப்பிவாழ்ந்தன ரீசனுணையி னிற்பவர்க்கிடர் சாருமோ." என்பதனுனும் அறிக. (௫0)

பாவாய்ப் பொழிந்த வானமுதப் பவளத் திருவாய் நம்பி நீ, சேவாய்ப் பொருதுந் தருமமுடைத் தேவன் மலைக்குப் போம்பொழுது, காவாய்ப் பயந்த தடக்கைமலர்க் கழறிற் றறிவார் கடாவிவரு, மாவாய்ப் பிறக்கக் கிடையாதே மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே.

(இ-ள்.) வான் அமுதம் பா ஆய்ப் பொழிந்த-சிறப்புற்ற முத்தி சாதனங்களைத் திருப்பாடல்களாகச்சொரிந்த—பவளம் திருவாய் நம்

---

† திருமந்திரம் சூக்குமபஞ்சாக்கரம்-௧

‡ பெரியபுராணத்தில் திருநாவுக்கரசுநாயனுர்புராணம்-௧௨௪.

+ உண்மைவிளக்கம்-௪௫. × காஞ்சிப்புராணம் முப்புராரிகோட்டப்படலம்-௨.

பி - செந்துகிர்போலும் திருவாயையுடைய நம்பியாரூரவள்ளலே! — பொருதும் சே ஆய்த் தருமம் உடை - சண்டையிடும் இடபமாகத் தருமதேவதையையுடைய—தேவன் மலைக்கு நீ போம் பொழுது - சிவபிரானமரும் திருக்கைலைவரைக்குத் தேவரீரெழுந்தருளுங்கால்,- கா ஆய்ப் பயந்த - கற்பகத்தருவைநிகர்த்துக் கருதுவார் கருதுவன வெறுப்ப நல்கிய—மலர் தடம் கை - செந்தாமரைமலர்போலும் பெருமைவாய்ந்த திருக்கரங்களையுடைய—கழறிற்றறிவார் கடாவி வரும் மா ஆய்ப் பிறக்க - சேரமான்பெருமாணாயனார் செலுத்திவரும் குதிரையாயுதிக்கும்படி,—மா ஆய்ப் பிறக்கும் திருமாற்கு கிடையாது - இனி உகமுடிவிற் குதிரையாயுதிக்கும் திருமாலுக்குக்கிட்டாது. எ-று.

இவ்வுலகன்றி எவ்வுலகுமுய்வான் முத்திசாதனங்களை யாண்டும் முற்றுவித்தவரென்பார், ‘வானமுதம் பாவாய்ப்பொழிந்த நம்பி, என்றும், சென்றவோர் தேயுப்பிரளயத்தில், அச்சுதனுதிய பிரபஞ்சம், அனலான்முடிவுற்றதாக, அதுகண்ட தருமதேவதை, யானும் இறப்பன்கொலென்று இனைந்து, இடபவுருவி னெய்திப் பிரார்த்திக்க; அதனை ஊர்தியாகக்கொண்டு, இவ்வடிவோடு எங்கும் எம்முன் வதிகவென்று உரியவரமுநல்கிச், சங்காரகர்த்தாவாகிய அத்தலைமைக் கடவுளமர்தலின், நொடித்தான்மலையென நுவலப்பெற்றதென்பார், ‘சேவாய்த்தருமமுடைத்தேவன்மலை, என்றும், மன்னுயிர்வெஃகியவற்றை வரையாது கொடுத்த வள்ளன்மையரென்பார், ‘காவாய்ப்பயந்தடக்கை, என்றும், அனைத்துயிரும் உளத்தொடுசாவலையறிந்து அவற்றின் உண்ணிலவிய துயர்களையும் ஒழிப்பவரென்பார், ‘கழறிற்றறிவார், என்றும், திருமால் போரில் தம்மாற் றுரத்தப்பட்ட தானவரைப் புரந்தமைகாரணமாகப், பிருகுமுனிவர் மனைவியாகிய கியாதியைக்கொன்றமையின், அம்முனிவரிட்ட சாபத்தானேர்ந்து, சிவபிரானால் நிக்கிரகாநுக்கிரகங்கள் புரியப்பெற்ற பத்தவதாரத்துள், ‘உகமுடிவிலுறுதற்கு எஞ்சிநிற்குங்கற்கியவதாரத்தும், அப்பிரானைவழிபட்

டே அநுக்கிரகம் பெறவேண்டுமென்றே, இவரூருங் கற்கியாயுதிப்பின், அவ்வழிபாடின்றி அப்பொழுதே அநுக்கிரகமுற்று, அப்பிறப்பும் அகன்றிருக்கலாம்; அதற்குத் தவப்பேறின்மையிற்றென்பார், 'மாவாய்ப்பிறக்கக்கிடையாது, என்றும் கூறினர்.

கூறவே, இவர் சிவகணத்தலைவராகும் சீர்மையுடையராகலின் இவர்கடாவிய மாவாகப்பெறுதல் எளிதன்றென்பது கருத்து. பாவாய்சேவாயென்புழி ஆய்செயவெனெச்சத்திரிபுகள். வான்-சிறப்பு. அமுதம்-முத்தி: அதுஆகுபெயராய் அதற்குரியசாதனங்களையுணர்த்திற்று. பொருதலில்வல்லதாகலின் 'பொருதுஞ்சே' எனப்பட்டது * "பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி." எனப் பிறண்டும் வருதல்காண்க. உடையவென்பது ஈறுதொக்கது. காவாயென்புழி ஆக்கச்சொல் உவமைப்பொருட்டு. பெருமை - கொடையாற்பெற்ற மேன்மை. கழறல் பேசலேயாயினும் ஈண்டு மனத்தொடுசாவலின்மேற்று. மாவாகச் சிந்தித்திருப்பரேல் அங்ஙனமே கொண்டிருப்பரென்பது தோன்றக் கழறிற்றறிவாரென்றார். கடாவல் - விரைவிற்செலுத்தல். ஏகாரங்கள் அசைகள். நொடித்தல் - அழித்தல். † "நோக்காதுநோக்கிநொடித்தன்றே" என்பதனானும் உணர்க.

இவ்வுலகன்றி எவ்வுலகுமுய்வித்தமையை ‡ "பித்தாபிறை சூடியெனப் பெரிதாந்திருப் பதிக - மித்தாரணி முதலாவுல கெல்லாமுயவெடுத்தார்" என்பதனானும், தேயுப்பிரளயத்தில் அச்சுதனுதியவரைத்துமொடுங்குதலை + "ஆய தன்மையி லச்சுதற் காயுவு- மாயு மெல்லையின் மன்னுயிர் யாவையுந்-தேயு மண்டஞ் சிதைந்திடு மெங்கணும்-பாயி ருங்கன லேபரந் துண்ணுமால்" என்பதனானும், ஊர்தியாகக் கொண்டு உரியவராயீந்தமையை × "இறத்தலே யின்மையும் யான மா

* தேவாரம் கோயில். பாளையுடைக்கமுகு-உ. † சிவஞானபோதம் முதற்சூத்திரம்.
‡ பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்டபுராணம்-௯௫.
+ கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்-௧0௧. × ஷை படலம்-௧0௬.௧௧0.

ய்த்தனைப் - பொறுத்திடுந் தன்மையும் பொருவில் வன்மையு - மு
றைத்திடு மன்பும்வா லுணர்வு நல்கியே - யறத்தனிக் கடவுளுக் கண்
ணல் கூறுவான். மைதவி ரடியர்செய் பவமு மற்றுளார் - செய்திடு
தருமமுந் திரிப தாகியே - யெய்திடு கின்றதி யாமுன் றன்னிடை -
மெய்திக ழுயிரென மேவும் பான்மையால்.'' என்பதனானும், சங்கார
கர்த்தாவே முதற்கடவுளாதலை, * "பின்னுற முடிப்பான் றன்னைப்
பிரானெனத் தேற்றுந் தன்மை - யென்னென வுரைத்தி மைந்த வெ
ங்களைச் சுரரை யேனைத் - துன்னிய வுயிர்க டம்மைத் தொலைவுசெ
ய் திடுவ னீற்றி - லன்னவ னென்னின் முன்ன மளித்தவ னவனே
யன்றே. அந்தநா ளொருவ னாகி யாருயிர்த் தொகையைத் தொன்னா
ள் - வந்தவா றொடுங்கச் செய்து மன்னியே மீட்டு மன்னை - தந்தை
யா யுயிர்கட் கேற்ற தனுமுத லளிக்கு முக்க - ணெந்தைதன் செய்
கை முற்று மினையதென் றிசைக்கற் பாற்றே'' என்பதனானும், கொ
டித்தான்மலையென நுவலப்பெற்றதை † "தானெனை முன்படைத்
தான தறிந்துதன் பொன்னடிக்கே - நானென பாடலந்தோ நாயி
னேனைப் பொருட்படுத்தி - வானெனை வந்தெதிர்கொண் மத்த யா
னை யருள்புரிந்து - வூனுயிர் வேறுசெய்தா னொடித் தான்மலை யுத்த
மனே.'' என்பதனானும், கழறிற் றறிந்து துயரொழித்தமையை × அள
வில் பெருமை யகிலயோ னிகளுங் கழறிற் றறிந்தவற்றி - னுளமன்
னியமெய் யுறுதுயர மொன்று மொழியா வகையகற்றிக்-களவு கொ
லைகண் முதலான கடந்து கழறிற் றறிவார்தாம் - வளவர் பெருமா
னுடன்செழியர் மகிழுங் கலப்பில் வைகுநாள்.'' என்பதனானும், நிக்
கிரகாநுக்கிரகங்கள் நிகழப்பெற்றமையை + "பெருகு மன்பினு லெ
ம்மைநீ வழிபடும் பேற்று - விருமை சான்முனி சபித்திடு மையிரு

---

* ஷை புராணம் உபதேசப்படலம்-அ-கூ, † தேவாரம் திருநொடித்தான்மலை.
× பெரியபுராணத்தில் சேரமான்பெருமாணயனர்புராணம்-௪0.
+ காஞ்சிப்புராணம் அரிசாபபயந்தீர்த்ததானப்படலம்-௧௭.

பிறப்புந் - திரிபு முதல வினுக்குப காரமாந் தெளிநீ - யருளு மைந்தி னி லேந்தினிற் றண்டமும் புரிகேம்." என்பதனுனும் அறிக. (ந க)

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
னீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலிற்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே.

(இ-ள்.) திரு ஆர் பெருந்துறை செழுமலர் குருந்தின் நீழல்வாய் உண்ட - திருப்பெருந்துறையிலே செழித்தமலர்கள்செறிந்த குருந்தமரநீழலிற்பருகிய—நிகர் இல் ஆனந்தம் தேன் தேக்கு எறியும் - ஒப்பிகந்த சிவானந்தத்தேன் உவட்டெடுக்கும்—செய்ய மாணிக்கவாசகன் - ஞானவொழுக்கச்சிறப்பையுடைய மாணிக்கவாசகவள்ளலார்—புகன்ற மதுரம் வாசகம் - அருளிச்செய்த இனிய திருவாசகம்—யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின் - எவரும் ஓதும் இயல்புடையதாகலான்,—பொன் கலம் நிகர்க்கும் - பொற்பாத்திரத்தைப்போலும்;—பூசுரர் நால் மறை - அவனிக்குரியதேவராகிய அந்தணரோதும் நான்குவேதங்களும்—மண் கலம் நிகர்க்கும் - மட்பாத்திரங்களைமானும்; (அஃதன்றி;)—மதுரம் வாசகம் ஓதின் உறுபயன் முத்தியே- இனிய திருவாசகத்தையோதின் அதனுலெய்தும்பயன் முத்தியே:—வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே - அவ்வேதங்களையோதின் அவற்றுலெய்தும் உண்மைப்பயன் விண்ணுலகாதிபதங்களே. எ-று.

உண்டசிவானந்தத்தேன் ஊவட்டெடுப்ப, அதனை இடையறவின்றி அருந்தாநிற்றலிற், றிருமேனியேயன்றித் திருவாசகமும், அத்தேன்மயமாகி, எவர்க்கும் சிவானந்தம் பயப்பதென்பார், 'நிகரிலானந்தத்தேன்றேக்கெறியுமதுரவாசகம்' என்றும், இது இன்னவருணத்தாருக்கு உரித்தென்பதின்றி, அந்தணர்முதலிய பலதிறத்தாயுள்ள சைவசமயிகள்பலர்க்கும், பயன்படுவதென்பார், 'யாவருமோதுமியற்கைத்து, என்றும், பலரும்பரிசிக்கினும் இழிக்கப்படாது, உயர்வுற்றதென்பார், 'பொற்கலநிகர்க்கும், என்றும், வேதநான்கும், வைதிகநெறியைமேற்கொண்ட அந்தணர்முதலிய மூவர்க்கும் உரியவென மொழியப்படினும், மற்றையிருவர்க்கும், ஓதுதற்கன்றி ஓதுவித்தற்கு உரிமைநுவலாமையானும், அவ்வோதுதருனும், இக்காலத்தின்மையானும், அந்தணரொருவர்க்கே உரித்தாயவென்பார், 'பூசுரர்நான்மறை, என்றும், இவற்றுட்சிலகூறு, ஏனையராற் கேட்கவும்படாதவென அந்தணரான் மறைக்கப்படுதலின், உற்றணுகற்கும் உரிமையுறுதவென்பார், 'மறைமட்கலநிகர்க்கும், என்றும், பலர்க்கும் ஓதற்குரித்தாயதன்றி, உயர்கதியையுநல்குவதென்பார், 'மதுரவாசகமோதின்முத்தியே, என்றும், முத்திபயத்தல் முதுமறைகட்கின்றென்பார், 'வேதமோதினறமே, என்றும், இது திருவாசகத்தையுயர்த்திய துதிபரமன்று உண்மையேயென்பார், 'மெய்ப்பயன்' என்றும் விதந்தாரென்க.

அற்றேல், * "வேதத்தை விட்ட வறமில்லை வேதத்தி - னோதத் தகுமற மெல்லா முளதர்க்க - வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற - வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே." என ஆசிரியர் திருமூலநாயனார் அருளியிருக்க; வேதமோதினறமேயென்பது மிகுமுரணன்றேவெனின்,—அறியாதுகூறினாய்: வேதங்களையோதின் விண்ணுலகாதிபதங்களும், வேதமுடிவாகும் உபநிஷத்துக்களையோதின் விழுமியமுத்தியும், சித்திக்குமென்பது நூற்றுணிபாகவும், ஒற்றுமைப்படுத்

* திருமந்திரம் வேதச்சிறப்பு.

துத் தொகுத்தோதினாரேனும், அவ்வேதமுடிவு பூர்வபக்கமென்னுமுதலைகளும் சித்தாந்தமென்னுமீன்களும் செறியப்பெற்றதொரு சமுத்திரமாகலின், அதின்முற்றுமமுழ்ந்தி, மெய்ப்பொருளோர்ந்து, பரிபாகமுற்றுச், சிவானுபவம்பெறாது, சிலகற்றுத்துணையானே, அப்பூர்வபக்கசித்தாந்தவாதத்தைப் பூண்டொழுகின், முத்திசித்தியாதென்பதனை அதில் உள்ளுறையாக்கி உணர்த்தியருளினாராக; இவ்வாசிரியர், அவ்வுள்ளுறை தெள்ளிதின் விளங்க, 'வேதமோதின்மெய்ப்பயனறமே, எனவும், அத்தருக்கவாதத்தைத்தவிர்ந்துள்ள உபநிஷத்துக்களின்சாரமே திருவாசகமாகலின், இதனையோதின் முத்திசித்தித்தல் ஒருதலையாதல்பற்றி 'மதுரவாசகமோதின்முத்தியுறுபயன், எனவும், வேற்றுமைப்படுத்து வகுத்து, வியந்தாராகலின், முரணின்மையறிக. *"ஆணவ மம்மர் சழீஇநுக ரனுபவ மடைகில்லார் — வீணினி லுச்சி வெடிக்க வரற்றுவர் வேதாந்தஞ் - சேணுறு பூருவ பக்க விடங்கர்கள் சித்தாந்த - மாணுறு மீன மிடைந்துள வேலையம் மறையந்தம்." என்றதூஉம் அச்சிவானுபவம் பெறாதாரைச்சுட்டி இகழ்ந்தமையேபோலும்.

உற்சர்ப்பிணியாகலான், அக்காலத்தோர்க்கு, வேதமுற்றும் உணர்ந்து தெளிதற்கேற்ற ஆயுணீட்சியும், உணர்வுவலியும், இருந்தன. அவசர்ப்பிணியாகலான், இக்காலத்தோர்க்கு, அவையின்மையின், எவரும் ஓர்ந்து எளிதிற் கதிபெறுமாறு, அத்தருக்கவாதத்தையொழித்து, முத்திபெறற்குரிய உபநிஷத்துக்களின்சாரமே திருவாசகமாக மொழிந்துவைத்தருளினாரென்பது. இஃதுணர்த்தற்கன்றே, உய்யவந்ததேவநாயனாரும், † "பாய்பரியோன் றந்தப் பரமானந்தப்பரனைத் - தூயதிரு வாய்மலராற் சொற்செய்து — மாயக் - கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய் - திருவாத வூராளுந் தேன்." என்றருளியதூஉம் என்க. சொற்செய்தல் - சொற்களானுணரப்

* சேதுபுராணம் சடாதீர்த்தச்சருக்கம். † திருக்களிற்றுப்படியார்-௭௨.

படாத அக்கடவுளை அவற்றானுணரப்படுபவராக்கல். உற்சர்ப்பிணியாவது - உலகம், வாழ்நாள் போகமுதலியவற்றான் வளர்பிறைபோலப் பெருகுங்காலம். அவசர்ப்பிணியாவது - அஃது, அவற்றாற் றேய்பிறைபோலச் சுருங்குங்காலம்.

திரு ஆர்ந்த பெருந்துறை—திருப்பெருந்துறை. வாய் ஏழனுருபு. செம்மை - ஞானவொழுக்கச்சிறப்புடைமை. வேதநான்கும், உதாத்தம் அநுதாத்தம் சுவரிதமென்னும் சுரங்களின்வழுவாமல் ஓதவேண்டுமென்னும் நியதியவாகலின், அவற்றை ஏட்டினெழுதிவைப்பின் வலியில்லாரும் ஓதுதலான் அவற்றின் சொற்செறிவின் றிட்பம் குறையுமென ஏட்டினெழுதாது, வாய்ப்பாடமாகப் போற்றிவருதலின், அச்சுரங்களில்வல்ல பூசுரரே அவற்றிற்கு அதிகாரிகளாயினர்; இதற்கு அந்நியதியின்மையான், வல்லுநரும் வல்லாருமாகிய சைவசமயிகள்பலரும் ஏட்டிலெழுதி ஓதுகின்றாராகலின், அவரனைவரும் அதிகாரிகளேயென்பதுதோன்ற, யாவருமென்றார். மறையென்பது இரகசியப் பொருளுடைமையிற் போந்த பெயரேயாயினும், ஈண்டு மறைக்கப்படுவதென்னும் பொருட்குறிப்பின்மேற்று. அறமென்றது அறப்பயனை. அறமேயென்னும் தேற்றேகாரம் முத்தியென்புழியுங் கூட்டப்பட்டது. உறுமெய்ப்பயனென ஈரிடத்தும் பிரித்தும் கூட்டியும் முடித்தலும் ஒன்று. திருவாசகத்தேன் சிவானந்தம்பயத்தலைமேலே விதந்தாம். கடைப்பிடிக்க.

ஆனந்தத்தேன் தேக்கெறிதலை * "குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தனுரு வெழுத்தைந்தின் கொடுவா ளோச்சிப் - பொறிகரணக் காடெறிந்து வீசிமனப் புலந்திருத்திப் புனிதஞ் செய்து - நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங் களைந்தருணன் னீர்கால் பாய - வறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த வமுதருந்தா தருந்தி நின்

* திருவிளையாடல் மண்சுமந்தபடலம்-கூ௬.

ரூர்." என்பதனானும், வேதமோதின் அறமேயென்பதனை * "சுருதி வழி யொழுகினர்கள் சுவர்க்கத்தார்." என்பதனானும், ஏட்டிலெழு தாமையை † "ஆற்ற லழியுமென் றந்தணர்க ளான்மறையைப்-போ ற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்." என்பதனானும் அறிக. (௩௨)

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"யை—மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து.

(இ - ள்.) சம்பந்தன் சிவிகை பரித்தார்—சம்பந்தப்பெருமான து சிவிகைதாங்கப்பெற்றவர்,—உந்தும் சிவிகையினை ஊர்ந்து திரி குவர் - செலுத்துஞ்சிவிகையைநடாத்தி (இப்பொழுதும் சிறந்ததே வராய்த்) திரிகின்றாராகலான்,—அறத்து ஆறு இது என வேண்டா- அறத்தின்பயன் இதுவென்று யாம் ஆகமவளவையான் உணர்த்தல் வேண்டுவதில்லை;—சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடையை மறுத்தார்-சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சி யளவைதன்னானே உணரப்படும். என்னும் பொருளமைந்த திருக்கு றளை மறுத்தவராயினர். எ-று.

பரித்தார் திரிகுவராகலான் மறுத்தாரென இயையும். ஆகலா னென்பது சொல்லெச்சம். எனவென்னுமெச்சத்தாற் சொல்லாகிய ஆகமவளவையும், பொறுத்தானோ டூர்ந்தானிடையென்றதனாற் காட் சியளவையும், உணரப்படுமென்னும் சொல்லெச்சமும், திருக்குறளில் உய்த்துணரக் கிடப்பதுணர்க. இடையென்னுந் திருக்குறளையெனற் பாலது இசையெச்சமாய் இடையையெனக் குறைந்துநின்றது. மற் று வினைமாற்று. சம்பந்தன்சிவிகைபரித்தார் இம்மையின்பெய்தியபி

* கோயிற்புராணம் இரணியவன்மசருக்கம்-௫. † திருவள்ளுவமாலை-௧௫.

ன்னர், அம்மையிற் சிறந்ததேவராகி, இன்னவிடத்திற்செல்கவென்ற துணையானே ஆண்டுச்சேறற்குரிய தேவயானமூர்வ ரென்பார், தாங் குஞ்சிவிகையென்னது உந்துஞ்சிவிகையென்றார். அற்றேல், இந்தி ரன்சிவிகை அகத்தியமாமுனிவர்முதலிய முனிவரெழுவரால் ஏந்த ப்படுவதென்ப தென்னையெனின்,—இந்திரனென்னும்பெருமை அ வனுக்குளதாக அவரால் ஓர்கால் ஏந்தப்பட்டதன்றி எப்பொழுதும் ஏந்தப்படுவ ததற்கியல்பன்றென்க.

திரிகின்றாரென்னது திரிகுவரென்றார்; விழாவில் இப்பொழுது பரித்தாரும் விண்ணுலகடைவரென்ப தறிவித்தற்கு. திரிகுவரென்ப தற்கு, சின்னாள் நுகர்ந்தபின் அத்தேவவின்பத்தினும் வெறுப்புறுவ ரெனப்பொருள்கொண்டு, வெறுப்புறுவரேல், மேலெங்ஙனமெய்து வரென்னுங்கடாவை ஆசங்கித்து, சிவிகைபரித்தலாதிய வழிபாடு டையார், சிவலோகமெய்துவது திண்ணமாகலின், இம்மைமறுமை வீடென்னும் மூன்றனுள், எய்தாதெஞ்சிநிற்கும் அவ்வீட்டை, எய்தா நிற்பரென் றிசைத்தலும் ஒன்று. அறமுடையார் சிவிகையையூர்த லும், அஃதிலார் அதனைப்பரித்தலும், விழுமியவேதநூற்றுணிபும், அநுபவமுமாயினும், சம்பந்தன்சிவிகைபரித்தல், அறமில்வழிக் கிட் டாதாகலின், அஃதுடைமையிற்பரித்தார், அம்முப்பயனுமெய்தத லின், அங்கியதியைக் கடந்தவராயினாரென்பார், மறுத்தாரென வகுத் தார். உவகைமேலீட்டால் வாகீசமூர்த்தியும் ஓர்காற்பொறுத்த அச்சி விகைபொறுக்கப்பெறுவது எவர்க்கும் எளிதன்றென்பது கருத்து.

இந்திரனென்னும்பெருமை அவனுக்குளதாதற்கே பரித்தலை *"மாதவ ரெழுவர் தாங்க மாமணிச் சிவிகை மீது - போதரி னவனே வானோர் புரந்தரன்." என்பதனானும், சிறந்ததேவராதலை† "மேனாட் டமரர் தொழவிருப் பாரும் வினைப்பயன்க - டானாட் டருநர கிற்ற ளர் வாருந் தமிழ்நர்தங்கள் - கோனாட் டருகர் குழாம்வென்ற கொச்

* திருவிளையாடல் இந்திரன்பழிதீர்த்தபடலம்-கக. † திருஞானசம்பந்தர்திருவந்தாதி-கசு.

லையர் கோன்கமலப் - பூநாட் டடிபணிந் தாருமல் லாத புலையரு மே.'' என்பதனானும், சிவபதமெய்துவது திண்ணமாதலை * ''பெறு வது நிச்சய மஞ்சனெஞ் சேபிர மாபுரத்து - மறுவறு பொற்கழன் ஞானசம் பந்தனை வாழ்த்துதலான் - மிறையறு வான்மதி யுண்ட டந் தோள்வல் விடையெடுத்த - பொறியுறு பொற்கொடி யெம்பெரு மானமர் பொன்னுலகே.'' என்பதனானும் அறிக. (ஙந)

ஊர்ந்து வருமிள வேறுடை யான்ற னுளத்தருளாற்
சார்ந்து சமண்விட் டுறுமுனக் கேவருஞ் சைவநலங்
கூர்ந்து மிளிர்தரு நாவர சேநல் குரவுமுனஞ்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வமுமே.

(இ - ள்.) நாவரசே - வாகீசப்பெருந்தகையே!— இள ஏறு ஊர்ந்து வரும் உடையான்றன் - இளமைவாய்ந்த இடபவாகனத் தைச் செலுத்திவரும் இறைவருடைய—உளத்து அருளால் சமண் சார்ந்து - திருவுளக்குறிப்போடு கூடிய திருவருளானே சமண்சமயத் தையடைந்து—அருளால் விட்டு உறும் உனக்கே - அத்திருவரு ளானே அதனைநீங்கிச் சைவசமயத்தைச்சார்ந்த தேவரீருக்கே,—வரு ம் சைவம் நலம் கூர்ந்து மிளிர்தரும் - சின்னாள் நீங்கிப் பின்னர்ச்சே ர்ந்த அச்சைவத்தின் சிறப்புச் சிறந்துவிளங்கும்;— நல்குரவு முனம் சேர்ந்து மருவினர்க்கே - தரித்திரத்தை முன்னர்ச்சார்ந்து பின்னர்ச் செல்வமெய்தப் பெற்றவர்க்கே,—செல்வமும் சிறந்து ஓங்குறும் - அச்செல்வமும் அருமையுடைத்தாய் விளங்கும். எ-று.

அமண் அடைவித்தமை அருளாமைபோலினும், உய்த்துணரின் அருளேயாமென்பார், 'அருளாற்சார்ந்துசமண்விட்டு, என்றும், இய ற்கையே சைவசமயத்தராயிருந்து அருள் காரணமாகச் சமண்சார் ந்துமீண்ட இவர்க்கு ஒருவாறிணைகூறியது, இயற்கைச்செல்வராயி

* ஷி - சஉ.

அ

ருந்து, வினைகாரணமாக அதனையிழந்து, பின்னரெய்தப்பெற்றவரை யேயென்பார், 'நல்குரவுசேர்ந்து மருவினர், என்றும், இயற்கைச்செல்வர்க்கும், அஃதில்வழிப்படும்சிறுமையும் அஃதுள்வழிப்படும் பெருமையும், விளங்குமாயினும், சிறந்துவிளங்கா; இழந்துபெற்றார்க்கே விளங்கும்; அதுபோல, சைவசமயமெய்தாவழிப்பெறும் சிறுமையும், எய்தியவழிப்பெறும் பெருமையும், ஏனையாசிரியரினும், இவர்க்கு மிகவிளங்குமென்பார், 'உனக்கேகூர்ந்துமிளிர்தரும்' என்றும் கூறினர்.

அற்றேல், * "நம்பரருளாமையினாற் சமண்சமயங்குறுகினர்." எனவும், † "ஈசரருள்கூடுதலால் திலகவதியாரிருந்த திருமடத்தைச் சென்றணைந்தார்." எனவும், தொண்டர்சீர்பரவுவார் சொற்றதென்னையெனின்,—இவர்க்கு அருளாமையினாலென்றது, 'நல்லாறுதெரிந்துணர அருளாமையினால்' எனவிதத்தலின், அவ்வமணையழிப்பிக்கும் திருவுளக்குறிப்பால் அதிற்பிரவேசிப்பித்தற்பொருட்டு நல்லாறு தெரியாவகை திரோபவித்தனரென்றதன்றி, அருளிலராயினரென்றதன்றெனக. உளத்தருள் - உளத்தோடுகூடிய அருள். ஈண்டு உளமென்பது (அவ்வமணையழிப்பிக்கும்) உளக்குறிப்பின்மேற்று. அருளாற்சார்ந்து அருளால்விட்டெனத் தனித்தனிக்கூட்டுக. சமணென்பது தாப்பிசையாய்நின்றது. சமண் - சமணர்குழாம். உனக்கே மருவினர்க்கே என்னும் ஏகாரங்கள் தேற்றம். ‡ "தருசொல் வருசொல்லாயிரு கிளவியும்—தன்மை முன்னிலை யாயீ ரிடத்த." என்னும் சூத்திரத்திற்குமாறாகப் படர்க்கையிடத்திற்கு வந்தமையின் வரு இரண்டும் இடவழுவமைதி. + "சரித்தார்க்குச் சைவ சமய நெறியி - னுரித்தாங்கு புத்திமுத்தி யும்." என்பது சிவாகமநூற்றுணிபாகலின், ஈண்டு நலமென்றது சார்ந்தாரை அவ்விருபேற்றிற்கும் உரியராகப்புர

* பெரியபுராணத்தில் வாகீசமூர்த்திபுராணம். 3௭. † ௪௨ ௫௯.
‡ தொல்காப்பியம் கிளவியாக்கம். + சைவசமயநெறி பொதுவிலக்கணம்-௨௯௦.

க்குந்தகைமையையென்க. முனமென்பது காலத்தின்பழமைசுட்டாது பிற்பெறுஞ்செல்வத்திற்கு முற்படுங்காலத்தைச் சுட்டிநின்றது. சிறந்தோங்குறுமதுபோலக் கூர்ந்துமிளிர்தருமென இயையும். நல்குரவுசார்தற்கும் செல்வமெய்தற்கும் வினை ஏதுவாதல் * "கூத்தாட்டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்-போக்கு மதுவிளிந் தற்று." என்னும் சுருதியாற்பெறற்கும். வறுமைமல்கிச் செல்வமெய்தியார் அதனருமையறிந்துபோற்றலின் அவர்மாட்டே அதுசிறத்தல்போன்று தேவரீர்மாட்டே அச்சைவத்தின்பொலிவு அரிதுசிறக்கும் என்னலும் ஒன்று. இப்பொருட்கண் நான்கனுரு பிரண்டையும் ஏழனுருபாக்குக.

சைவநலங்கூர்ந்து மிளிர்ந்தமையை † "பொய்வாய் மைபெருக்கியபுன் சமயப் பொறையில் சமணீ சர்புறத் துறையா-மவ்வாழ் குழியின் கண்விழுந் தெழுமா றறியா துமயங் கியவம் புரிவேன் - மைவாசநறுங் குழன்மா மலையாண் மணவா ளன்மலர்க் கழல்வந் தடையு-மிவ்வாழ் வுபெறத் தருசூ லையினுக் கெதிர்செய் குறையென் கொலெனத் தொழுதார். இத்தன் மைநிகழ்ந் துழிநா வின்மொழிக் கிறையாகியவன் பருமிந் நெடுநாட் - சித்தந் திகழ்தீ வினையே னடையுந் திருவோ விதுவென் றுதெருண் டறியா - வத்தன் மையனு யவிரா வணனுக் கருளுங் கருணைத் திறமா னவதன்-மெய்த்தன் மையறிந் துதுதிப் பதுவே மேல்கொண் டுவணங் கினர்மெய் யுறவே." என்பதனானும், இங்ஙனம் அதனருமையறிந்துபோற்றலின் அப்பொலிவுசிறந்தமையை ‡ "மையற் றுறையே றிமகிழ்ந் தலர்சீர் வாகீ சர்மனத் தொடுவாய் மையுடன் - மெய்யுற் றதிருப் பணிசெய் பவராய் விரவுஞ் சிவசின் னம்விளங் கிடவே - யெய்துற் றதியா னமரு வுணர்வு மீறின் றியெழுந் திருவா சகமுங் - கையிற் றிகழும் முழவா ரமுடன் கைத்

* திருக்குறள்-கக௨. † ஷெ. புராணம்-எ௩-எ௫. ‡ ஷெ-எஎ.

தொண் டுகலந் துகசிந் தனரே." எனவும், * "கையுந் தலைமிசை பு
னையஞ் சலியன கண்ணும் பொழிமழை யொழியாதே-பெய்யுந் தகை
யன கரணங் களுமுட னுருகும் பரிவின பேறெய்தி -மெய்யுந் தலைமி
சை விழுமுன் பெழுதரு பின்றும் சடையொடு நின்றுடு - மையன்
திருநட மெதிர்கும் பிடுமெவ ரார்வம் பெருகுத லளவின்றால்."எனவும்,
ஆங்காங்கு வருவனவற்றானும் அறிக. (௩௪)

செல்வநல் லொற்றி யூரன் செய்யசங் கிலியா லார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற வமிழ்த்து மேனு
மல்லுநன் பகலு நீங்கா தவன்மகி ழடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்ப னம்பியா ரூரன் றானே.

(இ-ள்.) செல்வம் நல் ஒற்றியூரன் - செல்வமல்கிச் சிறந்த திரு வொற்றியூரில் அமர்ந்தருளும் சிவபெருமான்—செய்ய சங்கிலியால் ஆர்த்து - பெருமையுற்ற சங்கிலிநாச்சியாராற் பிணிப்புடையராக்கி,— மல்லல் அம் பரவை தன்கண் - பண்புமிக்க அழகையுடைய பரவை நாச்சியாரிடத்தே,—மாழ்கு உற அமிழ்த்துமேனும் - ஆர்வமீதூரக் கண்டு அவர்பாற் பொருத்துவித்தாராயினும்,—நம்பியாரூரன் - சுந்த ரமூர்த்திசுவாமிகள்,— மகிழ் அவன் அடியில்-உவகையைப்பயக்கும் அக்கடவுளின் உபயதிருவடிகளில்,—அல்லும் நன்பகலும் நீங்காது எய்தி-இரவும்பகலும் இடைவிடாதொடுங்கி,—நல்ல இன்பு அடைந்து இருப்பன் - சிறந்த இன்பநுகர்ந்து திகழ்வார். எ-று.

சங்கிலிநாச்சியாரை மணம்பேச விடுக்கப்பட்டாரோடு விடுத்தா னும் மடிந்தானுகலின் அவர் மற்றை மாதர்போல மதிக்கற்பாலரல்ல ரென்பார் 'செய்யசங்கிலி' என்றும், இவர்மாட்டு நெடுநாளுறுவித்தில ரென்பார், 'ஆர்த்து' என்றும், அமரருட்சிறந்தார்க்கும் அணுகுதற் கும் அரியராகி, அருளானெய்திய அற்புதக்காந்தி யுடையரென்பார்,

* ஷை கசஎ.

'மல்லலம்பரவை' என்றும். ஆரூரருக்கு ஆர்வமேலீடுகொண்டு இவர்மாட்டு நெடுநாள் எய்துவித்தனரென்பார், 'அமிழ்த்துமேனும்' என்றும், அவ்விருவரையும் தாம் அவாவியவாசனையகலத் திரோபவித்து, இங்ஙனம் சேர்த்தினாரேனும், அவ்வின்பத்தைச் சிற்றின்பமாக நுகராது, அக்கடவுளின் திருவடிகளென்னும் ஞானசத்திகிரியாசத்திகளின் வியாபகத்தில் தம்முடைய ஞானசத்திகிரியாசத்திகள் வியாப்பியமாக இரவும்பகலும் இடையீடின்றித் தாடலைபோலடங்கிப், பேரின்பமாக நுகர்ந்தனரென்பார், 'அல்லுநன்பகலு நீங்காதவன்மகிழடியிலெய்தியின்படைந்து' என்றும், ஏனையின்பமுற்றும் அவற்றின்மிக்கவற்றை நோக்கத் துன்பமாய்முடிதலின் அவ்வின்பமனைத்தும் ஒருங்குதிரளினும் அணுத்துணையுமொவ்வா இச்சிவாநுபவவின்பமே இன்பமாவதென்பார், 'நல்லவின்பு' என்றும், இப்பொழுதும் ஆலாலசுந்தரராய் இவ்வியல்பின் இருக்கின்றனரென்பார், 'இருப்பன்' என்றும் கூறினார்.

பகல் பலவுமெய்தற்குச் சாதனமாகலின் நன்பகலெனப்பட்டது. மகிழ் இரண்டனுருபும் பயனும் உடன்றொக்கதொகை. இருப்பன் காலமயக்கம். ஒற்றியூரர் சங்கிலியாலார்த்துப் பரவையிலழுத்தினும், ஆரூரர் அவரையேநம்பி அவரடியினெய்தி இன்புற்றிருப்பரென இதுவும் நிந்தாஸ்துதியாகவும் நிற்பதுணர்க. தான்-ஏ-அசைகள்.

நாச்சிமாரிருவரையும் விசேடித்தமையை * "தைய லார்சங்கிலியார்தந் திறத்துப் பேசத் தகாவார்த்தை-யுய்ய வேண்டு நினைவுடையா ருரையார்" எனவும், "அணங்கேயாகு மிவள்செய்கை யறிந்தோர் பேசவஞ்சுவர்" எனவும், † "நங்கைபரவையார்-சென்றும்பர் தரத்தார்க்குஞ் சேர்வரியார்" எனவும், "பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகு-மாசை மேலுமொ ராசை யளிப்பதோர்-தேசின் மன்னியென்

* பெரியபுராணத்தில் கலிக்காமநாயனார்புராணம். உகசு-உகஎ.

† ஷ புராணத்தில் தடுத்தாட்கொண்டபுராணம், கசஎ-கஙஉ.

சிந்தை மயக்கிய - வீச னாரரு ளெந்நெறிச் சென்றதே." எனவும் வருவனவற்றானும், அடியிலெய்தி இன்புற்றமையை * "தன்னையாளுடையபிரான் சரணார விந்தமலர் - சென்னியிலுஞ் சிந்தையிலு மலர்வித்துத் திருப்பதிகம் - பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையென - மின்னிடையா ளுடன்கூடி விளையாடிச் செல்கின்றார்" எனவும், † "இந்நிலையிற் பேரின்ப மினிதமர்வா ரிறையுறையு - மன்னுபுக ழொற்றியூ ரதனின்மகிழ் சிறப்பினாற் - சென்னிமதி புனைவார்தந் திருப்பாதந் தொழுதிருந்தார் - முன்னியகா லங்கள்பல முறைமையினால் வந்தகல" எனவும் வருவனவற்றானும், சிவானுபவ இன்பமே எவற்றினும் சிறந்தமையை ‡ "நரர்கடமி னரசரவர் தமினினிய திவவியாழ் நண்ணுநர கந்த ருவர்தா - நவிலுமவர் தமினமர கந்த ருவ ரவர்தம்மி னுடரிய தேவ ரவரிற் - சுரரதிப னவனினுயர் சுரர்குரவ னவனினயன் சொன்முறையி னூறு மடிமேற் - றுன்னுசுக மொருதிவலை யளவுமின் றாகமிகு சுகவேலை" என்பதனானும் அறிக.

தானே முத்தி தருகுவன் சிவனவ
னடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே.

(இ-ள்.) சிவன் அவனடியன் வாதவூரனை - சிவபெருமான் தனதடியவராகிய திருவாதவூரடிகளை,—கடிவு இல் மனத்தால் கட்டவல்லார்க்கு - நீக்கமின்றிய உள்ளத்தால் நேசித்துப் பிணிக்கவல்லவர்க்கு,—தானே முத்தி தருகுவன் - தாமே முற்பட்டுப் பரமுத்தியைத் தந்தருளுவார். எ-று.

இவ்வாதவூரடிகளார் உலகையீடேற்றுவான் அவதரித்த அருட்குரவராகலின், பிறசிறுதேவரைத் தெய்வமெனப் பேணுவாரைக்

* ஷை ஷை கஅஉ. † ஷை கலிக்காமநாயனார்புராணம்-உகக.
‡ இஷ்டலிங்கவபிஷேகமாலை-௪0.

காண்டற்கும் அஞ்சுதலுடையராய்ச், சிவபெருமானையே முதற்கடவுளென எவருந்தெளியுமாறு தெருட்டி,ஆனந்தமேலீட்டான் அக்கடவுளை அன்புடனோக்கிநிற்றலும் அழுதலும் தொழுதலுமுதலிய அமைந்தவரென்பார், 'அவனடியன், என்றும், இவ்வுண்மையுணர்ந்து மனவொருமையுற்று, இடையறவின்றி இவரைவழிபடல், சிவபுண்ணிய முதிர்வினர்க்கே சித்திக்குமென்பார், 'வாதவூரனைக்கடிவின்மனத்தாற்கட்டவல்லார்க்கு, என்றும்,பாலர் பித்தர் பசாசர்போன்று தற்போதமிழந்து, இறைவர்பணியினின்றூராகலின், இவர்செயலெல்லாம் இறைவர்செயலாக முடிதலான் இவரைவழிபடுவோர்க்கு அவ்விறைவர்தாமே அவற்றையேற்று முத்தியளிப்பரென்பார், 'தானேமுத்திதருகுவன், என்றும் கூறினர்.

நுகர்வுநாடி விழைதலின்மையாற் பாலரையும், நன்மை தீமை சீலம் அகன்றிடுதலாற் பித்தரையும்,செய்யுஞ்செயல் சிவன்செயலாய் முடிதலாற் பசாசரையும் உவமித்தவாறு. செயலறவொழுகற்கும், ஒருகாற்செய் தொருகாலொழிதற்கும், செயலிழப்பினின்று செய்தற்கும் மூவரையும் முறையே ஒப்பித்ததென்னலும் ஒன்று. தானே முத்திதருகுவன் சிவனென்பது எவர்க்கும் முத்தியளிக்கவல்ல முதற்கடவுள் சிவபெருமானொருவரேயென்னும் வேதநூற்றுணிபையுஞ் சுட்டி இரட்டுறமொழிதலாய்நின்றது. இல் எதிர்மறைவினைத்தொகை. ஏகாரங்களுள் முன்னையது தேற்றம்; பின்னையது அசை. அன்றி, வல்லார்க்கேயல்லது பிறர்க்குத் தருவரல்லரெனக்கொண்டு பின்னையதைப் பிரிநிலையாக்கலும் ஆம்.

பிறதெய்வங்களைப்பேணுவாரைக் காண்டற்கும்அஞ்சினமையை *"புற்றில்வா ளரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன் - கற்றைவார் சடையெம் மண்ணல் கண்ணுதல் பாத நண்ணி-மற்றுமோர்

* திருவாசகம் அச்சப்பத்து-அக.

தெய்வந் தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மாற் - கற்றிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே." என்பதனானும், அன்புடனேக்கிநிற்றலாதி யுடைமையை * "அன்புட னேக்கி நிற்ப ரழுவர்கை தொழுவர் வீழ்வ - ரின்புற வெழுவர் பின்பா லேகுவ ரிரங்கி மீள்வர்-நன்பகற் கங்குல் காணார் ஞானநல் லறிவே கொண்டு - கொன்புனை பித்தர் பாலர் பசாசர்தங் கொள்கை யானார்." என்பதனானும், அரன் பணியினின்றமையை † வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ - வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டி யென்னைப் பணிகொண்டாய் - வேண்டி நீயா தருள்செய்தா யானு மதுவே வேண்டினல்லால் - வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே." என்பதனானும், சிவபெருமானே முத்தியளிக்கவல்லரென்பதை ‡ "அன்றியு மொன்று கேண்மோ வம்புயனாதி யாகி - நின்றவர் தம்மை யெல்லா நீக்கியச் சிவனென் றுள்ள-வொன்றொரு முதல்வன் றானே யுய்த்திடு முத்தி வேண்டி - னென்றுமஃ தியம்பிற் றென்னின் யாவரே தேவ ராவார். பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும் - விரவிய துயர்க்கீறெய்தி வீடுபே றடைது மென்ற - லுருவமில் விசும்பிற் றோலை யுரித்துடுப் பதற்கொப் பென்றே - பெருமறை யியம்பிற் றென்னிற் பின்னுமோர் சான்று முண்டோ." என்பதனானும் அறிக. (நசு)

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்க - ளெல்லாந்
திருஞான சம்பந்தன் சேவடியே யென்னு
மொருஞான சம்பந்த முற்று.

(இ-ள்.) வண்மை நலம் இன்பம் - பொருளும் அதனாலெய்தும்புண்ணியமும் அப்புண்ணியப்பயனாகிய இம்மைமறுமையின்பங்களும்—

* திருவாதவூரர்புராணம் திருப்பெருந்துறைச்சருக்கம்-அ௦.
† திருவாசகம் குழைத்தபத்து-சு. ‡ கந்தபுராணம் உபதேசப்படலம். உச-உ௫.

கல்வி நல்லாதரவு ஞானங்கள் எல்லாம் - கல்வியும் அதனலெய்தும் அன்பும் அவ்வன்பின்பயனகியஞானமும் ஆகிய யாவும்—திருஞானசம்பந்தன் சேவடியே என்னும் - திருஞானசம்பந்தப்பெருமானுடைய செவ்விய திருவடிகளே எனக்கொள்ளும்—ஒரு ஞானசம்பந்தம் உற்று-இத்தகைய ஒரு ஞானசம்பந்தத்தை எய்தி,—வல்லார் பிறப்பு அறுப்பர் - வல்லுநரல்லாரும் பிறப்பையொழிப்பார். எ-று.

வண்மைமுதலியன அவரவர்பரிபாகத்திற்கேற்ப இம்முறைபிறழவருதலும் உண்டேனும், இதுவேநியதியாகலின், இவ்வாறிசைத்ததென்பது. அற்றேல், இங்ஙனம் முறைப்படுத்தோதாத தென்னேயெனின்,—இக்காரணகாரிய முறைமையுணராது எல்லாந்திருவடிகளேயெனக்கொளும் சிந்தனையுடையாரும் உதித்துழலாரென்ப துணர்த்துதற்கென்க. அல்லதூஉம், காஞ்சியிற் சிவபெருமானருளியபடி செயற்கருந்தவமியற்றியிருந்த திருமாலுக்கும் சிவசாரூபமளித்தமையின் இப்பெருந்தகையின் இணையடிகள் கிரியாசத்தி ஞானசத்தியுருவாய்க்கிளர்ந்து செல்வமுதலிய போகசாதனங்களையும் கல்விமுதலிய மோக்ஷசாதனங்களையும் நல்குவனவாமென்னும் இத்தகைய ஒப்பிகந்த ஞானத்தையுற்று வல்லுநரும் பிறப்பையறுப்பரென்னலும் ஒன்று. என்னவே, இவ்வள்ளல்வழிபாட்டால் வல்லுநரல்லாரும் வல்லுநரும் கன்முத்தியெய்தும்வகை நவின்றவாறாயிற்று. வல்லாரென்பது இரட்டுறமொழிதலாய் எதிர்மறையினும் உடன்பாட்டினும்வந்த வினைக்குறிப்புப்பெயர். வல்லாருமென்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது. பிப்பறுப்பரென்றமையின் மேற்பேறெய்துவரென்பது சொல்லாமேயமையும். வண்மை-வளத்தின்றன்மை. எவர்க்கும் நன்மைபயத்தலின் அறத்தை நலமென்றும் அன்பை நல்லாதரவென்றும் கூறினர். உம்மைத்தொகையாகலின் ஞானங்களெனப் பன்மையீறாயிற்றென்க. அன்றி, ஞானம் இருதிறப்படுதலின் ஞானங்களென்றாரெனினும் அமையும். எல்லாம் சேவடியேயென்பது காரியத்தைக் காரணமாகவு

பசரித்தல். ஏகாரம் தேற்றம். முத்திக்கு முடிந்தசாதனமென் றுண ர்ந்துகோடற்கு ஞானத்தை இறுதியில்வைத்தார்.

அறமும் இன்பமும் பொருட்பேருதலே * "அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து - தீதின்றி வந்த பொருள்." என்பதனானும், ஆசாரமும் ஞானமும் கல்விப்பேருதலே † "கற்றுஞ் சிவஞான மில்லாக் கலதிகள் - சுற்றமும் வீடார் துரிசுறுர் மூடர்கண் - மற்றும் பலதிசை காணுர் மதியிலோர் - கற்றன்பி னிற்போர் கணக்கறிந் தார்களே." என்பதனானும், ஞானமே முத்திக்கேதுவாதலே ‡ "உரைசெயிற் பரம ஞான மொன்றுமே முத்திக் கேது-சரியைநற் கிரியை யோகந் தாமொரு மூன்று ஞான - மருவுதற் கேது வென்று மறைபுகன் றுரைக்கு மிந்தக் - கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவரன்றே." என்பதனானும், திருமால் சிவசாரூபம்பெற்றதை + "என்ற வாய்மொழி திருச்செவி யேறலு மெங்கோ - னென்று கூறுத லுற்றன னுவணமீ தூயர்த்தோய் - நன்று தேர்வைவச் சுதமனு வந்தரநணுகு - மன்று நாலிரண் டிற்றுடை யிருபதாங் கலியில். காழி மாநகர்க் கவுணியர் குலத்தொரு காளை - யேழி சைத்தமிழ் ஞானசம் பந்தனெம் மடியான் - யாழ நீபெற வெம்முரு விங்குவந் தளிப்பா-னுழியோயது காறுமிவ் வரைப்பினி லமர்ந்து. ஈட்ட ருந்தவ மியற்றுகென் றருளிநீங் குதலுங் - கோட்ட மின்றிமா லம்முறை வதிந்துபூங் கொன்றைத் - தோட்ட லங்கலாற் றொழப்புகு முத்தமிழ் விரகர் - பாட்ட லங்கலாற் பரஞ்சுடர்த் திருவுருப் பெற்றுன்." என்பதனானும், பிறப்பறுத்தலே × "தொகு வார்பொழில் சுற்றிய வான்மதி தோயும திற்கனமார் - தொலை யாத திருப்பொதி மாளிகை மாடநெ ருக்கியசீர்-மிகு காழிமன் முத்தமி ழாகரன் மேதகு பொற்புனைதார்-விரை யார்

* திருக்குறள்-எஙச. † திருமந்திரம்-கல்லாமை-சு. ‡ பிரபுலிங்கலீலை சித்தராம தேவர்கதி-சுக. + காஞ்சிப்புராணம் திருமேற்றளிப்படலம். கூ ௯0-கக.

× திருஞானசம்பந்தர்திருக்கலம்பகம்-ஙசு.

கம லக்கழ லேதுணை யாகநி னைப்பவர்தா - மக ராதர நித்தில நீர்நி லை யார்புவி யுத்தமராய் - * வரலாறு பிழைப்பினி னூழியி லக்கித மா-தகு வாழ்வு நிலைத்தெழில் சேரற மானப யிற்றுவர்மா - சது ரால் வினை செற்றதன் மேலணு கார்பிற விக்கடலே." என்பதனானும், மேற்பேறெய்துதலை † "நிலத்துக்கு மேலாறு நீடுலகத் துச்சித்-தலத்துக்கு மேலேதா னென்பர்—சொலத்தக்க - சுத்தர்கள்சேர் காழிச் சுரன்ஞான சம்பந்தன் - பத்தர்கள்போய் வாழும் பதி." என்பதனானும் அறிக. (௩எ)

உற்றா னலன்றவந் தீயினின் றானல னூண்புனலா
வற்றா னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே.

(இ-ள்.) ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகை - ஒருநம்பியப்பூதியென நம்பியாரூரரால் உயர்த்தித் துதிக்கப்பெற்ற மிக்க மேன்மையுடையவர்—தவம் உற்றான் அலன்-சரியைகிரியை யோகங்களை அநுட்டித்தவருமல்லர்; தீயில் நின்றான் அலன் - பஞ்சாக்கினி நடுவினின்று கடுந்தவம்பரித்தவருமல்லர்;—ஊண் புனலா நுகர்வும் அற்றான் அலன் - நீரை உணவாகக்கொண்டு மற்றையுணவுகளை நீக்கினவருமல்லர்;—திருநாவுக்கரசு எனும் ஓர் சொல்தான் எழுதியும்-திருநாவுக்கரசென்னும் ஒருசொல்லையே யாண்டும் தீட்டியும்,—கூறியுமே - அதனை உயிர்க்குறுதிபயக்கும் மந்திரமாக உச்சரித்துமே,—என்றும் துன்பு இல் பதம் பெற்றான் - எக்காலத்தினும் துன்பமென்பது எட்டுணையும் எய்துதலில்லாத முத்தியை எய்தினார். எ-று.

---

* இவ்வடி பிரதிகளிற் குறைந்தே வழங்குகின்றது.

† திருஞானசம்பந்தர் திருமும்மணிக்கோவை-௫.

திருநாவுக்கரசென்னும் திருமந்திரம், ஏனைமந்திரங்கள் போலாது, இம்மைமறுமை யின்பங்களின் உவர்ப்புறுவித்து, பிறவியிற்செலுத்தாது சிவபதத்துய்ப்பதெனத்தேர்ந்து, அதனையே யாண்டுந்தீட்டி உச்சரித்தமையின், அதுவே, ஞானநெறியாய்ச், சிவபதநல்கிற்றென்பார், 'எழுதியுங்கூறியுமேபெற்றான், என்றும், இப்பேறு இன்பமெலாந்திரண்ட சிவானந்தப்பேறேயென்பார், 'என்றுந் துன்பில் பதம், என்றும் கூறினர்.

மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட் டநுட்டிக்கும் வன்மைமென்மைத்தவங்களை வேறுவிதத்தலின் இச்செய்யுளில் தவமென்றது சரியைகிரியையோகங்களையென்க. ஆகவென்பது ஈறுகுறைந்தது. முந்திய உம்மை இறந்ததுதழீஇயிற்று. ஏனையவை எண்ணின்கணின்றசிறப்பு. தான் கட்டுரைக்கண்வந்தஅசை. ஏகாரங்களுள் முன்னையது தேற்றம்; பின்னையது அசை. என்றும் எழுதியும் கூறியுமே பெற்றானெனினும் அமையும், தகையென்பது குணிப்பெயர்.

சரியையாதிகளைத் தவமென்பதனை * "பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு - மிசைத்து வருவினையி லின்ப—மிசைத்த-விருவினை யொப்பி விறப்பி றவத்தான் - மருவுவன் ஞானத்தை வந்து." என்பதனானும், சிவபதத்துய்ப்பதென்பதனை † "இலைமா டென்றிடர் பரியா ரிந்திர னேயொத் துறுகுறை வற்றாலு - நிலையா திச்செல்வ மெனவே கருதுவர் கீழ்சன் மக்கட விடையிற்புக் - கலையார் சென்றர னெறியா குங்கரை யண்ணப் பெறுவர்கள் வண்ணத்தின் - சிலைமா டந்திகழ் புகழா மூருறை திருநா வுக்கர சென்போரே." என்பதனானும். இச்சரியையே ஞானநெறியாய்ச் சிவபதம் நல்கியதை ‡"இவ்வகை யரசி னாம மேத்தியெப் பொருளு நாளு - மவ்வருந் தவர்

* சிவஞானபோதம் எட்டாஞ்சூத்திரம். † திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை-௪.

‡ பெரியபுராணத்தில் அப்பூதியடிகள்புராணம்-௨௪.

பொற் றூளே யெனவுணர்ந் தடைவார் செல்லுஞ் - செவ்விய நெறி ய தாகத் திருத்தில்லை மன்று ளாடு - நவ்வியங் கண்ணாள் பங்கர் நற்கழ னண்ணி னாரே.'' என்பதனானும், துன்பில்பதம் என்பதனை ○''இரும்பைக்காந் தம்வலித்தாற் போலிசைந்தங் குயிரை யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி-யரும்பித்திந் தனத்தையன லழிப்பதுபோன் மலத்தை யழித்தமல னப்பணைந்த வுப்பேபோலணைந்து-விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி *மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்-கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக் கட்டியையொத் தினிப்பனந்த முத்தியினிற் கலந்தே.'' என்பதனானும் அறிக. (௯அ)

பெருமிழலைக் குறும்பரெனும் பரம யோகி பெரிதுவந்துன் றிருவடித்தா மரையைப் போற்றி, விரைமலர்தூய் வந்தனைசெய் கின்றா னென்றால் விளங்கிழையா ரிருவரொடு முயங்க லாமோ, வுரைமதிநின் றனைவெறுப்ப தென்கொ னின்னையுடை யானுக் கடுத்தசெய லுனக்கு மாயின், சுரர்முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத் தொகைசெய்தோ யறமுதனல் வகைசெய் தோயே.

(இ-ள்.) சுரர் முனிவர் பரவலுறும் பெருஞ்சீர் தொண்டத்தொகை செய்தோய் - தேவருமுனிவருமிறைஞ்சும் மிக்கசீர்த்திபடைத்த திருத்தொண்டத்தொகையை அருளிச்செய்தவரே!—அறம் முதல் நால்வகை செய்தோய் - அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள்கள் நான்கையும் வகுத்தருளியவரே!—பெருமிழலைக்குறும்பர் எனும் பரமயோகி - பெருமிழலைப்பதியிலிருந்த குறும்பநாயனா

○ சிவஞானசித்தி பதினொராஞ்சூத்திரம்-௧௨.

* மேளித்தல்-கூட்டுதல்.

ரென்னும் பரமயோகியானவர்,—பெரிது உவந்து உன் திருவடித்தா மரையை போற்றி - கழிபேருவகையுற்றுத் தேவரீருடைய திருவடிக்கமலங்களைத்துதித்து,—விரை மலர் தூய் வந்தனை செய்கின்றான் என்றால் - மணமிக்க மலர்களானருச்சித்து வழிபடுகின்றாரென அறிஞர் விதப்பாராயின்,—விளங்கு இழையார் இருவரொடு முயங்கல் ஆமோ - திகழும் அணிகளைப்புனைந்த தேவிமாரிருவரோடு சேர்ந்து வாழ்வது தகுதியோ? (தகுதியன்றாயினும்,)—நின்னை உடையானுக்கு அடுத்த செயல் உனக்கும் ஆயின் - உம்மை அடிமையாகவுடைய உமாபதிக்குரியசெய்கை உமக்கும் பொருந்துமானால், (அஃதுணர்ந்து வழிபடாது,)—நின்றனை வெறுப்பது என் உரைமதி - உம்மைவெறுப்பது என்னை! மதியுரைப்பீராக. எ-று.

திருத்தொண்டர்பெருமைகளைச் சிவரகசியத்தினும் அறமுதலிய புருஷார்த்தங்களை வேதாகமங்களினும், சிவபிரான் வடமொழியில் அருளிச்செய்தாங்கு, அக்கடவுளின் பிரதிவிம்ப சொரூபராகிய இவ்வாசிரியரும், அக்கடவுளே அடியெடுத்துக்கொடுக்கத், தேசமெலாமுய்வான் தென்மொழியிலே, அத்திருத்தொண்டர் பெருமையையும், புருஷார்த்தங்களையும் தொகுத்து, திருப்பதிகங்களில் அருளிச்செய்தனரென்பார், 'தொண்டத்தொகைசெய்தோய் அறமுதனல்வகைசெய்தோய், என்றும், குறும்பநாயனார் இவரது பெருமைகுறித்துத் தியானிக்க, அணிமாதி எண்சித்திகளும் வாய்த்தமைகண்டு, மேனுமேலும் வழிபட்டனரென்பார், 'பெரிதுவந்துன் றிருவடித்தாமரையைப்போற்றி விரைமலர்தூய் வந்தனைசெய்கின்றான், என்றும், அவ்வழிபாட்டால் தாம் முக்காலவுணர்ச்சியுடையராகி, ஆசிரியர் திருக்கைலைக்கெழுந்தருளநேர்தலையறிந்து, சிவயோகத்தால் முதற்றினமே திருக்கைலையை யடைந்தனரென்பார், 'பரமயோகி, என்றும், இத்தகையர் வழிபடப் பரமபோகிபோன்றிருப்பது இயல்பன்றென்பார், 'இருவரொடு முயங்கலாமோ, என்றும், போகிபோன்றாரேனும், தேவிமாரி

ருவரும் கிரியாசத்தியும் ஞானசத்தியுமாய்த்திகழ அக்கட
ன்று, ஆன்மாக்களுக்குப் போகமோக்ஷங்களை அளிப்பவராயி
பார், 'உடையானுக்கடுத்தசெயலுனக்குமாயின்' என்றும்,
நாயனார் இவ்வுண்மைகுணித்துப் பரமயோகியெனத்தேர்ந்து ப
தாமும் அங்ஙனமாக, அதனையறிந்துவைத்தும், போகியெனம
துப் புகலாநிற்றல், எவ்வளவுபெரியதோ ரறியாமையென்பார், 'வெ
றுப்பதென்கொல், என்றும், வெறுப்பவர் * "ஒருமைச் செயலாற்
றும் பேதை யெழுமையுந் - தான்புக் கழுந்து மளறு." என்பதற் கில
க்காயுள்ளவராகலின், அவர்க்கிசைத்தல் பிறர்க்கியலாது; அவருந்தெ
ளிந்துய்வான் எல்லாம்வல்லதேவரீரே மதியுரைப்பீராகவென்பார்,
'உரைமதி' என்றும் கூறினார்.

வெறுப்பதென்கொல் உரைப்பீராகவெனக்கொண்டு, மதியென்
பதனை முன்னிலையசையாக்கலும் ஒன்று. உரைத்தல் ஈண்டுணர்த்த
லின்மேற்று. அறிஞரென்பது சொல்லெச்சம். ஓகாரம் எதிர்மறை.
என் வியப்பிடைச்சொல். கொல் ஏ-அசைகள். சுரர்முனிவர்பரவல்
திருத்தொண்டத்தொகைக்குமாம். இதுவும் வெளிப்படையின் நிந்தா
ஸ்துதியாக நிற்பதுணர்க. இப்பொருட்கண் உடையானுக்கடுத்தசெ
யலென்பது இருமனைவியரை உடைத்தாதலென்க.

திருமாலாதியரெதிர்கொண் டிறைஞ்சினவமையை † "இந்திரன்
மால்பிரமன் னெழி லார்மிகு தேவரெல்லாம் - வந்தெதிர் கொள்ள
வென்னை மத்த யானை யருள்புரிந்து - மந்திர மாமுனிவ ரிவ னாரென
வெம்பெருமா - னந்தம ரூரனென்று ளொடித் தான்மலை யுத்தமனே."
என்பதனானும், தேசமுய்வான் திருத்தொண்டத்தொகையருளினமை
யை ‡ "நேச நிறைந்த வுள்ளத்தா னீல நிறைந்த மணிகண்டத் - தீச
னடியார் பெருமையினை யெல்லா வுயிருந் தொழவெடுத்துத் - தேச

---

* திருக்குறள்-அ௩௫. † தேவாரம் திருநொடித்தான்மலை.

‡ பெரியபுராணத்தில் சண்டேசுரநாயனார்புராணம்-௯0.

திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன் - வாச
ன் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்." என்பதனு
பெரிதுவந்துபோற்றினமையை * "நாளும் நம்பி யாரூரர் நாம
ன்ற நலத்தாலே - யாளும் படியா லணிமாதி சித்தி யான வணை
தற்பின்-மூளுங் காத லுடன்பெருக் முதல்வர் நாமத் தஞ்செழுத்
துங்-கேளும் பொருளு முணர்வுமாம் புரி வாய்ப்பக் கெழுமினர்."
என்பதனானும், பரமயோகியாயினமையை † நாலு கரணங் களுமொ
ன்று நல்ல வறிவு மேற்கொண்டு-காலும் பிரம நாடிவழிக் கருத்துச்
செலுத்தக் கபாலநடு - வேல வேமுன் பயின்றநெறி யெடுத்த மறை
மூ லந்திறப்ப - மூல முதல்வர் திருப்பாத மடைவார் கயிலை முன்ன
டைந்தார்." என்பதனானும், மதித்தலியல்பை ‡ "சுத்த சிவன்குரு
வாய்வந்து தூய்மைசெய் - தத்தனை நல்கருள் காணு வதிலூடர்-பொ
ய்த்தகு கண்ணு னமரென்பர் புண்ணிய - ரத்த னிவனென் றடிபணி
வாரே." எனவும், o "தேசிகனை யீசனெனச் சிந்தனைசெய் வார்வினை
ப்பார்!-பாசமறுத் தேபேரின் பம்." எனவும் வருவனவற்றானும், இவர்
செயல் இறைவர்செயலாய் நிகழ்ந்தமையை + "மோக மறுத்திடினு
முத்தி கொடுப்பதென - வாகமங்கள் சொன்ன வவர்தம்மைத்—
தோகைபாற் - றூதாகப் போகவிடும் வன்றொண்டன் றொண்டுகளை-
யேதாகச் சொல்வே னியான்." என்பதனானும் அறிக. (௩௧)

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே.

(இ-ள்) செய்ய வார் சடை தெய்வசிகாமணி பாதம் போற்று
ம் - செவ்விய நீண்டசடைமுடியையுடைய தேவாதிபர் திருவடிகளை

---

* ஷை பெருமிழலைக்குறும்பநாயனார்புராணம்-௯. † ஷை ஷை-௧௦.

‡ திருமந்திரம் சிவகுருதரிசனம் ௧.

o சங்கற்பநிராகரணத்திருக்குறள். + திருக்களிற்றுப்படியார்-௭௨.

வழிபடும்—வாதவூர் அன்ப - திருவாதவூரண்ணலே!—பூ எனப்படுவ் து - பூவென்று எவரானும் உயர்த்திப் புகலப்படுவது—பொறி வாழ் பூவே - திருமகள்வதியும் செந்தாமரைமலரேயாம்; (அதுபோல,)—பா எனப்படுவது - பாவென்று எவரானும் உயர்த்திப் பகரப்படுவ துன் பாட்டு - தேவரீரருளிய திருப்பாடல்களே. எ - று.

எவரெவர் எவ்வெத்தேவரைக்குறித்து வழிபடினும் அவ்வத்தே வரிடமாக நின்று அவற்றையேற்று அவரவர் வேண்டியபயன்களை அளிக்கவல்ல முதற்கடவுள் சிவபெருமானொருவரேயென்பார், 'தெய்வசிகாமணி, என்றும், மும்மலவழுக்கை ஞானநீராற்கழுவி, மெய்ஞ் ஞானிகளோடு கலந்துகூடி, அவரது திருவேடத்தையும் சிவாலயத் தையும் முதல்வனெனவேகண்டு வழிபடுதல், அரன்கழலணைந்த சிவ ன்மூத்தர்க்கியல்பாகலின், இவ்வாசிரியரும், போகசாதனமாயுள்ள உட் கரணங்களும் புறக்கரணங்களுமாகிய பசுகரணங்களெல்லாம் அளத் திற்பட்ட புற்போலச் சிவப்பிரகாசத்தினாற் சிவகரணமாய்நிகழச் சுகா னுபவமுதிக்கப்பெற்று, அந்நெறியினொழுகினரென்பார், 'பாதம்போற்றும், என்றும், சிவபத்தியையும் சிவப்பேற்றையும் பயப்பதாய்ப் பாடலுட்சிறந்தது திருவாசகமென மேல்விதந்தமையின், திருக்கோவையார் அவ்வியல்பினதன்றேவென ஐயப்பாடு நிகழுமன்றே, அது நிகழாமற் பரிகரித்தற்பொருட்டு; அதுவும், அவ்வியல்பினதே யென்பார், வாசகமென்னாது, அதனையுஞ்சுட்டப் 'பாவெனப்படுவதுன்பாட்டு' என்றும் கூறினார்.

அற்றேல், அது சிற்றின்பப்பொருளதாய்த் திகழ்வதென்னையெனின்,—அண்ணல்பாலார்ந்த பேரின்பச்சுவையை ஆர்வமேலீட்டால் நாயகநாயகி முறையின் நயந்துபாராட்டல் ஞானிகளியல்பாகலின் அதற்கோரிலக்கியமாக இறைவர் கட்டளைப்படியே அருளினமைபற்றிக் காமஞ்சான்றமைபோற் காணப்படினும், பேரின்பப்பொருள் பயப்பதாய் வேதசிவாகமங்களின்சாரமாய்ப், பாடலுட்சிறந்துவிளங்கலின்,

ஞானப்பனுவலேயாமென்க. தெய்வசிகாமணியாகலின் அக்கடவுளின் திருமுடி "நொச்சிப் பூவும் பச்சை மத்தமுங் - கொன்றைப் போது மென்றுணர்த் தும்பையுங் - கங்கை யாறும் பைங்கட் டலையு - மரவு மதியமும் விரவித் தொடுத்த - சூடா மாலை சூடிப் பீடுகெழு - நெருப் பிற் றிரித்தனைய வுருக்கிளர் சடிலமொடு - நான்முகங் கரந்த பா[illegible] வண்ணங் - காரு வண்ணங் கருத்தையுங் கடந்து - சேணிகந் துளது" என்பார், இப்பொருள் குறிப்பின்விளங்கச் 'செய்யவார்சடை' எனச் சடைமேல்வைத்துக்கூறினர். திருமுடியினையதெனவே, திருவடியும் "தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து-வாடாப் புதுமலர்த் தோ டெனச் சிவந்து - சிலம்புங் கழலு மலம்பப் புனைந்து - கூற்றி னுற்ற ன் மாற்றிப் போற்றுறு - வலம்புரி நெடுமா லேனமாகி நிலம்புக்-கா ற்றவி னகழத் தோற்றுறு நிமிர்ந்து-பத்தி யடியவர் பச்சிலை யிடினு-முத்தி கொடுத்து முன்னின் றருளித் திகழ்ந்துள" என்பது தெளியக் கிடத்தலின் செய்யபாதமென விசேடியாராயினர். ஆகவே, ஏனைத்தி ருவுறுப்புக்களும் இன்னோரன்ன என்பதாம். அவற்றை, மேற்குறித் தாங்கு ஒருவாறு தொகுத்த திருவிடைமருதூர் மும்மணிக்கோவை யுட்காண்க. தேற்றேகாரம் முன்னுங்கூட்டப்பட்டது.

சிவபெருமானை அவ்வப்பயன்களை அளித்தலை * "யாதொரு தெ ய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே-மாதொரு பாகனார்தாம் வ ருவர்மற் றத்தெய் வங்கள் - வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வி னையுஞ் செய்யு - மாதலா னிவையி லாதா னறிந்தருள் செய்வ னன் றே." என்பதனானும், முதல்வனெனவே வழிபடுதலை † "செம்மலர் நோன்றாள் சேர லொட்டா-வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ-மாலற நேய மலிந்தவர் வேடமு - மாலயந் தானு மரனெனத் தொழுமே." என்பதனானும், பாதம்போற்றுதலை ‡ "மன்னு முன்னுள வுயிர்க்கா ணங்கண் மாய்ந்து பொய்ம்முத லறிவிழந் தருளாற் - றுன்னு

* சிவஞானசித்தி இரண்டாஞ்சூத்திரம்-உ௫. † சிவஞானபோதம் பன்னிரண்டாஞ்சூத்திரம்.
‡ திருவாதவூரர்புராணம் திருப்பெருந்துறைச்சருக்கம்-௬௮.

பின்னருட் சிவகர ணங்கடோன்ற லாற்சுக வறிவதிற் றேன்றிச் - சென்னி யின்மிசை மேவிப பாதந் திருந்து கண்ணிணை சேர்த்திரு கரத்தா - லுன்னல் செய்திடு மிதயமே லணைவித் துவகை கூர்ந்து மெய் யுணர்ச்சியி லெழுந்தார். என்பதனானும், வேதாகமங்களின்சாரமாய்ப் பாடலுட்சிறந்தமையை * "ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின் - காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப - வேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்-சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே." எனவும், † "வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனைவண் டில்லைமன்னைத் - திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப் - பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத் - தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே." எனவும், வருவனவற்றானும், பேரின்பப்பொருள் பயத்தலை "இயற்கைப் புணர்ச்சித் துறையீரொன்பதுஞ் - சத்திநி பாத மொத்திடுங் காலத் - துத்தம சற்குரு தரிசன மாகும். பாங்கற் கூட்டம் பதினெட் டின்பந் - தாங்குதற் போதந் தான்கண் டகறல்." என இங்ஙனம் தொகையும் வகையுமாகச் செய்யுண்முற்றும் விதந்து விளக்கிய திருக்கோவையார் உண்மையானும், சிவப்பேறளித்தலை ‡ "மெய்த்தவ வாத வூரர் விளம்பிட வெழுது மிந்தப்-புத்தக மன்று ளாடல் புரிந்தவ னெழுத்தா மென்று - முத்தியையுதவுங் கோவை முடிவிடத் தெழுதிப் பின்னர்ச் - சித்திர மலர்க்கையாலே திருந்தமைக் காப்புஞ் செய்தார்." என்பதனானும் அறிக.

சாக்கிரத்திலே நிருமல துரியாதீதத்தைப் பொருந்திச் சீவன்முத்தராய்த்திரியும் சிவஞானிகளுக்கே தலங்கடோறுஞ்சென்று தம்பெருமானைப்பணியும் சரியை முதலியன அநுட்டிக்க வேண்டுவதில்லையாகவும், இணையின்றித் தெய்வத்திருவருளுருவாய்விளங்கிய இந்நால்

* திருக்கோவையார் நூற்சிறப்பு. † கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம்-௧௮.
‡ ஷை புராணம் திருவடிபெற்றசருக்கம்-௧௫.

வரும், அநுட்டித்தொழுகியது எற்றுக்கெனின்,—நன்றுவினுயினுய்! சிவஞானியராவார் ஞானமுதலிய நான்கிற்கும் உரியரென வகுத்த தூஉமன்றி * "ஞால நீதியு நான்மறை நீதியும் - பாலருன் மத்தர் ப சாசரி லெனவு - முறங்கி னேன்கை வெறும்பாக் கெனவுந் - தானே தவிரா தானுற் புரியா-தொழிந்திடி னிரயத் தழுந்துத றிடமே." என வும் சிவாகமங்கள் செப்பினவாகலானும், தமதுண்மையை அறியமா ட்டாது குருடாய்க்கிடந்ததமக்குப் பலவாற்ருனும் அதனைத் தெரித் துணர்த்தி எத்தனையுமெளியதம்மை எத்தனையுமரிய தானும்வண்ணம் செய்தளித்த பெரியதோருதவியை மறப்பின் அஃது இதற்குமுன் அ றியாமையான்மறந்த குற்றம்போலத் தீர்திறனுடையதோர் குற்றமன் ருகலானும், முதல்வன் தான்ருனேயாகச்செய்தாலும் இதுகாறும் தம க்குச் சுதந்தரமின்றி முதல்வனது உபகாரத்தை இன்றியமையாதெய் தி அடிமையாகியதாம் எக்காலத்தும் அவ்வாறு அடிமையேயாமாகலா னும், அப்பெருமானை வழிபடுதல் அவர்க்கே வேண்டற்பாலனவாம் ஆ யின், ஆன்மாக்களுய்தற்குரிய ஞானவொழுக்கச்செயல்களை விளக்கிக் காட்டி அவற்றினிறுவி இஷ்டசித்திகளையும் பரமுத்தியையும் பாலித் தற்பொருட்டே அவதரித்த இவ்வாசிரியர் நால்வருக்கும் அவை, உல குய்வான் ஒருதலையாக வேண்டற்பாலனவென்பது சொல்லாமே அ மைதலின், எத்தொண்டினுஞ் சிறந்த அத்தொண்டினை ஞானத்திற் சரியையாக அநுட்டித்தொழுகினுரென்க. † "வன்ருெண்டர் சம்ப ந்தர் வாகீசர் மற்றுமுளோர் - பொன்றரிய ஞானம் புகுந்திருக்கச் — சென்று - பதிதோறும் பாடிப் பணியுமதென் மாட - மதிதோ யருட் டுறையாய் வந்து." என்றதூஉம் இக்கருத்தேபற்றி.

ஞானத்திற் கிரியைமுதலியவற்றை × "ஞானத்தின் ஞானுதி நா ன்குமா ஞானிக்கு-ஞானத்தின் ஞானமே நானென தென்னுமை-ஞா

* சங்கற்பநிராகரணத்தில் மாயாவாதிசங்கற்பநிராகரணம்.

† சதமணிக்கோவை—உக. × திருமந்திரம் ஞானம்—அ.

னத்தில் யோகமே நாதாந்த நல்லொளி-ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே." என்பதனுனும், ஞானிகள்ஞானுதிநான்கிற்கும்உரியராதலே "*ஞானயோ கக்கிரியை சரியை நாலு நாதன்றன் பணிஞானி நாலினுக்கு முரிய-ஞானமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன் யோகிகிரியாவான்ரு ஞெண்கிரியை யாதி-யானவிரண் டினுக்குரியன் சரியையினி னின்ரு னச்சரியைக் கேயுரிய ஞதலிஞ லியார்க்கு-மீனமிலா ஞானகுரு வேகுருவு மிவனே யீசனிவன் ருனென்று மிறைஞ்சி யேத்தே." என்பதனுனும், முத்தியினும் அடிமையாதலே † "தன்னே யறிவித்துத் தான்ருனுச் செய்தானேப் - பின்னே மறத்தல் பிழையலது— முன்னவனே - தானேதா னுச்செய்துந் ‡ தைவமென்றுந் தைவமேமானே தொழுகை வலி." என்பதனுனும், ஆசிரியர்க்கு ஆலயவழிபாடாதியன ஒருதலேயாக வேண்டுமென்பதனே o "போதகனு கியகுரவனுஞ்ஞான்று நற்கருமம் புரிக வென்று-வேதமுத லாகியநூன் முழுதுமொருங் கொருவந்தம் விதித்த லாலே-சாதகனு கியபருவ மாணுக்கன் பாசவலி தணிக்க வல்லான்-மேதினிமே லுடலொடுநற் செயல்விடுவ தன்றியிடை விடலா காதால்." என்பதனுனும், ஆலயவழிபாடு எவற்றினும் சிறந்தமையை × "என்று கூடுமிப் பருவமென் றியம்பில் யாமி ருந்துள விடந்தொறு மிறைஞ்சி - நன்றி சேர்சிவ புண்ணியம் புரியு நன்மை யாலது நணுகுமென் றறிநீ." என்பதனுனும் அறிக.

இனி, இவ்வாசிரியர்நால்வரும் தொண்டர்போன்ருரேனும், ஒவ்வொருவரும், அக்காலத்திலே சைவசமயங்குன்றும்படி அதிக்கிரமித்திருந்த பொய்ச்சமயங்களாகிய சமணம்பௌத்தமுதலியவற்றை நிராகரித்து, தன்வயத்தனுதன்முதலிய எண்குணங்களுடைமையின் சிருட்டியாதிய கர்த்திருத்துவமுதலியவற்றை அருள்விளேயாட்டினெய்தி

---

* சிவஞானசித்தி பன்னிரண்டாஞ்சூத்திரம்-ங. † சிவஞானபோதம் பன்னிரண்டாஞ்சூத்திரம்.

‡தைவம் - தேவனது உடைமை; எனவே, அடிமையென்றபடி. o பிரபுலிங்கலீலே கோரக்கர்கதி-சுக. × திருவாதவூரர்புராணம் திருப்பெருந்துறைச்சருக்கம்-சுஎ.

சைவசமயமகிமையைப் பற்பல ஏதுக்களான் விளக்கினமையின், சைவசமயகுரவரெனப் பெயர்பெற்று, தம்மைவழிபடுவார்க்கும், மேற்கூறிய சித்திகளையுளவாக்கிப் பரமுத்தியைப் பாலித்ததுமன்றி, பிற்காலத்தவரும் ஓர்ந்துய்வான் இறைவரையெய்தற்குரிய சாதனவகைகளையும் அச்சாதனநெறிநிற்பாரெய்தும் பயன்களையும் வகுத்தருளி, இறைவர்திருவுளப்பாங்கின்படிவதிந்த ஆசிரியத்தலைமையுடையவர்களேயாகலான், இவர்பாலித்த அருட்டிறத்தைமறந்து, உய்தியில்குற்றம்பெருது, இவரை இறைவரெனவேதேர்ந்து வழிபடின், அவ்விறைவரே முன்னின்று தற்சொரூபமாக்குவரென்பதே, இந்நூலாசிரியர் தந்துணிபாகக்கொண்டு, 'கடிவின் மனத்தாற் கட்டவல்லார்க்குத் தானே முத்தி தருகுவன் சிவன், என விளக்கியருளினாராகலின், அங்ஙனமே மனமொழிமெய்களான் வழிபட்டும், இவரருளிய தேவாரம் திருவாசகம் திருக்கோவையார் என்பவற்றைப் பசுவாக்கியமென்று நினைப்பினும் அந்நினைவு அதிபாதகமாகிய சிவத்துரோகமேயாகி எரிவாய்நிரயம் பயந்தேவிடுமாகலின் பதிவாக்கியமெனவே ஐயந்திரிபறத் துணிந்து, பவப்பகையையொழிக்கும் அவற்றை ஓதியுணர்ந்து துதித்தும், சிவமாந்தன்மைப் பெருவாழ்வெய்தலே தெள்ளியோர்கடமையாகும்.

உலகுய்வா னவதரித்தமையை * "அவம்பெருக்கும் புல்லறிவினமண்முதலாம் பரசமயப் - பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட நல் லூழிதொறுந் - தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெல்லாஞ்-சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார்" எனவும், † "அலகில்கலைத் துறைதழைப்ப வருந்தவத்தோர் நெறிவாழ - வுலகில்வரு திருணீக்கி யொளிவிளங்கு கதிர்போல - மலருமருணீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார்." எனவும், ‡ "மாத வஞ்செய்த

* பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திபுராணம்-௨௬. † ஷையில் வாகீசமூர்த்திபுராணம்-௧௮
‡ ஷை திருமலைசசிறப்பு-௨௫,

தென்றிசை வாழ்ந்திடத் - தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப் போதுவார்'' +''தீதகன் றுலக முய்யத் திருவவ தாரஞ் செய்தார்.'' எனவும், × ''ஆயவளம் பதியதனி னமாத்தியரி லருமறையின் - றூய சிவா கமநெறியின் றுறைவிளங்க வஞ்சனையான் - மாயனிடும் புத்த விருளுடைந்தோட வந்தொருவர் - சேயவிளம் பரிதியெனச் சிவன ருளா லவதரித்தார்.'' எனவும் வருவனவற்றானும், அருள்விளையாட் டிற் சிருட்டியாதிய எய்தினமையை * ''பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்-காலனையன் றேவிக் கராங்கொண்ட-பால ன்-மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்-கரணம்போ லல்லாமை காண்.'' எனவும் ○''தவந்த வென்பினைப் பெண்ணெனப் படைத்துஞ் சார் மழவ-னுவந்த பெண்ணுயி ரளித்துமொட் டாதெதிர் புத்த-னிவ ந்த சென்னியை யுருட்டியு முத்தொழி னிறுவிப்-பவந்த டுத்துயிர்க் கருளுஞ்சொற் பனவனைப் பணிவாம்.'' எனவும் வருவனவற்றானும், சைவநெறிபாலித்தமையை † ''சொற்கோவுந் தோணிபுரத் தோன்ற லுஞ்சுந் தரனுஞ் - சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி-வந் திலரே னீறெங்கே மாமறைநூ லெங்கே - யெந்தைபிரா னைந்தெ ழுத்தெங் கே.'' என்பதனானும், இறைவர்திருவுளப்பாங்கின்படி வதி ந்தமையை ‡ ''அன்ன தன்மையர் கயிலையை யணைவதற் கருளார்-மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த - நன்னெ டும்பு னற் றடமுமொன் றுடன்கொடு நடந்தார்-பன்ன கம்புனை பரமரோர் முனிவராம் படியால்.'' எனவும், × ''தித்திக்கு மணிவார்த்தை யின் னஞ் சின்னாட் டிருச்செவியி லருந்தவுங்கைச் செம்பொ னெல்லாம்-பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்து வேண்டும் பணிகொடுபாண் டிய

---

+ ஷை தடுத்தாட்கொண்டபுராணம்-ந.

× திருவிளையாடல் வாதவூரடிகளுக்குபதேசித்தபடலம்-ஈ.

* திருக்களிற்றுப்படியார்-கஉ. ○ பேரூர்ப்புராணம் கடவுள்வாழ்த்து.

† சிவானந்தமாலை பாயிரம். ‡ ஷை வாகீசமூர்த்திபுராணம்-நகக.

× ஷை வாதவூரடிகளுக்குபதேசித்தபடலம்-நந.

னையிவர் பண்பு தேற்றி - முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது மு டித்திடவுந் திருவுள்ள முன்ன மெய்தி - யெத்தித்தொண் டரைக்க ருமஞ் சிறிதுண் டிங்கே யிருத்தியென வுருக்கரந்தா னடியரோடும்." எனவும் வருவனவற்றானும், மறத்தல் உய்தியில்குற்றமாதலை * "என் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை - செய்ந்நன்றி கொன் ற மகற்கு." என்பதனானும், பவப்பகையொழித்தலை † "ஒழித்தி டும் பவப் பகைவிரைந் துள்ளமே யோதமூ துணர்வோர்முற் - பழிச்சு பாடலை யரற்கவை விடர்க்கிளம் பாவைய ருரைபோலுங் - கழித்தி டேலுப சாரமென் றிதனைநீ கட்டுரை யெனக்கொள்வாய் - விழித்து மாரனை யெரித்ததே வருள்பெறும் விருப்பினர் விருப்பீதே." என்ப தனானும், சிவன் தற்சொரூபமாக்குதலை ‡ "சிவனெனவே சிந்தித்துச் செய்பூசை கொண்டே-சிவனே பலத்தைச் செயும்." எனவும், × "ப ரப்பிரம மிவனென்றும் பரசிவன்றா னென்றும் பரஞான மிவனென் றும் பராபரன்றா னென்று - மரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்று மருட்குருவை வழிபடவே யவனிவன்றா னாயே-யிரங்கியவா ரணமாமை மீனண்டஞ் சினையை யியல்பினொடும் பரிசித்து நினைத் தும் பார்த்தும்-பரிந்திவைதா மாக்குமா போற்சிவமே யாக்கும் பரிசி த்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே." எனவும் வருவனவற்றானும் அறிக.

இப்பிரபந்தம், இவ்வாசிரியர்களின் அற்புதங்களுட் பலவற்றை எடுத்துக்கொண்டசெய்யுட்கு இணங்குமளவு சுருங்கச்சொல்லல்முத லிய அழகுநிரம்பத் தொகுத்துவிதத்தலால், சுருங்கியதோர் தோற்ற முடைத்தாய் விளங்கினும், உரைசெய்வான்புகும் நுண்ணறிவாளர்க் கெல்லாம் பொருள்கலங்காட்டி அணிபெறவிரிந்துநிற்றல்பற்றி, திரா விடபாஷியகர்த்தரென வியக்கத்தக்கபெரியாரும் இதயத்தமைத்துப்

* திருக்குறள்-கக0. † வைராக்கியசதகம். ‡சங்கற்பநிராகரணத்திருக்குறள்.
× சிவஞானசித்தி பன்னிரண்டாஞ்சூத்திரம்-எ

பேணிய தெய்வீகமுடையதென, அறிஞர்பலரால் அறிந்துவைத்தும், இதற்கு ஒருவாறு துணிந்தெழுதிய இவ்வுரையில், இன்னும் ஆங்காங்கு விரித்துரைக்கற்பாலன மிகப்பலவுளவாகவும், அவற்றை விரிவஞ்சிவிடுத்தமையின், விரித்தவைகொண்டு விரியாதவற்றையும் உய்த்துணர்ந்து, முரண்பாடின்றி அறிஞர் பெரிதும் சுகிப்பாராக. சுபம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருக்கு வெண்பாவும், திருநாவுக்கரசுநாயனருக்குக் கட்டளைக்கலித்துறையும், சுந்தரமூர்த்திநாயனருக்கு விருத்தமும், மாணிக்கவாசகசுவாமிகளுக்கு அகவலுமாக அருளிச்செய்த

# நால்வர் நான்மணிமாலை

## விருத்தியுரையோடு,

## முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

சிவப்பிரகாசசுவாமிகள்துதி. சீகாளத்திபுராணம்.

புனையெழில் வடிவி னுளோர் பொதுமகட் கண்ட மைந்தர்
மனமெனப் புலவர் நெஞ்ச மருளுமின் றமிழ்ப்பா மாலை
சினவிடை யவற்கே சாத்துஞ் சிவப்பிர காச னென்னு
முனைவனெம் மடிகள் பாத முளரிகள் சென்னி சேர்ப்பாம்.

---

சைவசமயகுரவர்கள் திருவடிவாழ்க.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

உ

சிவசண்முகன்றுணை.

# பரிசோதனபத்திரம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧௦ | ௨௨ | கியை | கியைய |
| ௧௯ | ௨௨ | சரியன் | சாரியன் |
| ௩௦ | ௧௦ | ளன்றறி | ளன்றரி |
| ௩௩ | ௬ | உவமை | உவமைப் |
| ௩௪ | ௩ | யாங்க | யாங்கவ |
| ௪௭ | ௨ | புடைய | புடையவ |
| ஷை | ௯ | சூழ் | சூழ் |
| ௪௮ | ௯ | பஞ்சன | பஞ்சசன |
| ௫௪ | ௧௯ | மாதிய | மாகிய |
| ௮௦ | ௧௬ | பாகபத | பாசுபத |
| ௮௧ | ௬ | தொடக்கு | தொடர்க்கு |
| ௮௫ | ௨௭ | விளக்கம் | விளக்கம் |
| ௯௧ | ௧௮ | முதவிய | முதலிய |
| ௯௨ | ௧௪ | இயலா | இயலாத |